விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு + II
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 ஆனி 06 வெள்ளிக்கிழமை (21.06.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 184

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுகள்
உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
(C-6710)
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

## கல்வி அமைச்சின் செயலாளராக இளங்கோவன் ஆளுநரின் செயலாளராக சத்தியசீலன்
### நியமித்தார் வடக்கு ஆளுநர்



▶23

சலுகைகளுக்கு அடிபணியாத
## தமிழ் பிரதிநிதிகள் உருவாக வேண்டும்
### நீதியரசர் விக்னேஸ்வரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)
தமிழ்ப்பற்றுடனும் இனப்பற்றுடனும் செயற்படும் சலுகைகளுக்கு அடிபணியாத நேர்மையான தமிழ்ப் பிரதிநிதிகள் உருவாக வேண்டும் என நீதியரசர் விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். ▶08

## விசாரணையை துரிதப்படுத்துக
### ஜனாதிபதி பணிப்பு

(கொழும்பு)
உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலின் பின்னர் சிறு குற்றங்கள் தொடர்பில் பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் கைதுசெய்யப் பட்டுள்ளவர்களின் விசாரணை நடவடிக்கைகளை துரிதப் ▶23

## தரம் 5
புலமைப்பரிசில் பரீட்சை
மேல்மாகாண மாதிரி வினாத்தாள்
உள்ளே...
புதன், வெள்ளி தொடர்ந்து வெளிவரும்

கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலகத்தை
# அதிகாரமுள்ள பிரதேச செயலகமாக இயங்க வைக்க முடிவு
## அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி முஸ்லிம் காங்கிரஸும் இணக்கம்

(கொழும்பு)
கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலகத்தை முழுமையாக நிர்வாக அதிகாரமுள்ள பிரதேச செயலகமாக இயங்க வைக்க நேற்று முடிவெடுக்கப் பட்டது. பிரதமர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதிகள் நேற்று நடத்திய உயர்மட்ட சந்திப்புக்களையடுத்து இந்த முடிவெடுக் கப்பட்டுள்ளது. (23ஆம் பக்கம் பார்க்க)

நேற்று நள்ளிரவு முதல்
## ரயில்வே ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பு

(யாழ்ப்பாணம்)
ரயில்வே ஊழியர்கள் நேற்று நள்ளிரவு முதல் 48 மணித்தியாலங்கள் பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக ரயில்வே தொழிற்சங்கம் அறிவித்துள்ளது. இதனால் காங்கேசன் துறையிலிருந்து கொழும்பு ▶23

## கல்முனையில் நேற்று ஹர்த்தால்

(கல்முனை)
கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலகத்தை தரமுயர்த்தக் கோரி நடத்தப்படும் உண்ணா விரதப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து, கிழக்கு மாகாணத்தில் நேற்று ஹர்த்தால் அனுஸ்டிக்கப் பட்டது. ▶23

## நாட்டின் காணிகளை சதிகாரர்கள் அழிப்பதற்கு இடமளிக்க முடியாது
### ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு



(கொழும்பு)
சதிகாரர்கள் நாட்டின் காணிகளை சீரழிப்பதற்கு இடமளிக்க முடியாதென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரி வித்தார். காணிகளின் உரிமை ▶23

சமய நல்லிணக்கம் கருதி
## திருக்கேதீஸ்வரத்தில் நுழைவாயில் அமைக்க மன்னார் பிரதேசசபை அனுமதி

(மன்னார்)
மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்திற்கான தோரணை நுழைவாயில் அமைப்பதற்கான அனுமதியை மன்னார் பிரதேச சபை வழங்கியுள்ளது.
மன்னாரில் சமய நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற கருத்தியல் சர்வமத தலைவர்களால் முன்வைக்கப் ▶23

கல்முனைக்காக பதவி துறக்க தயார்
## ஏனைய தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் பதவி துறக்க தயாரா?
### அங்கஜன் இராமநாதன் பகிரங்க சவால்



(கொழும்பு)
கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தினை தரமுயர்த்த கோரும் மக்களுக்கு ஆதரவாக தம்முடன் இணைந்து ஏனைய தமிழ் பாராளுமன்ற உறுப் ▶23

## இலங்கை இனப்படுகொலையை ஐ.நா.விசாரிக்க வேண்டும்
### கனேடிய பாராளுமன்ற பிரேரணை நிறைவேற்றம்

(கொழும்பு)
இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலைக் குற்றச்சாட்டுகளை ஐ.நா. விசாரிக்கவேண்டும் எனக் கோரிய பிரேரணை ஒன்று கனேடிய பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இலங்கையில் இனப்படுகொலை இடம்பெற்றதாக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச் சாட்டுத் தொடர்பாக சுதந்திரமான விசாரணை ஒன்று வேண்டும் என இந்த பிரேரணையில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
புதிய ஜனநாயகக் கட்சி உறுப்பினர் செரில் ஹார்ட்கேஸில் முன்வைத்த குறித்த பிரேரணை நேற்று முன்தினம் புதன்கிழமை நிறைவேற்றப்பட்டுள்ளதாக ஹரி ஆனந்த சங்கரி தெரிவித்துள்ளார்.
மேலும் பல மாதகால உழைப்பிற்குப் பின்னர், கனேடிய பாராளுமன்றம் இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலைக் குற்றச்சாட்டுகளை விசா ▶24

## ஆளுநரைச் சந்தித்து பேச்சு நடத்தும் நிலையில் இல்லை
### ஆவா குழுவின் பெயரில் சமூக வலைத்தளங்களில் கடிதம்

(கொழும்பு)
வட மாகாண ஆளுநரைச் சந்தித்து பேச்சு நடத்தும் நிலையில் தாம் இல்லை என ஆவா குழுவின் பெயரில் கடிதம் ஒன்று சமூக வலைத் தளங்களில் பகிரப்பட்டுள் ▶24

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பௌர்ணமி விழா நாளை

(யாழ்ப்பாணம்)

கரணவாய் கிழக்கு கரவெட்டி கலட்டி ஐக்கிய சனசமூக நிலையத்தின் சர்வதேச தந்தையர் தின விசேட நிகழ்வான பௌர்ணமி விழா நாளை சனிக்கிழமை மாலை 7 மணிக்கு ஜெயச்சந்திரன் கலையரங்கில் நிலையத் தலைவர் கணேசன் திருமாலழகன் தலைமையில் இடம்பெற வுள்ளது.

இந்நிகழ்வில் தந்தையார் தொடர்பான பாடல்கள் மற்றும் கவிதைகள், பேச்சுக்கள் என்பனவும் இடம்பெறவுள்ளது. (ம-3)

## கேள்வி அறிவித்தல்

### வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர் சபை நிதி 2019

01. வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, சபை நிதியினைக் கொண்டு கீழ்க்காட்டப் பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத் திட்டங்களுக்கு கொடுப்பனவிற்கென பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02. தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர், வடமாகாணம் அவர்கள் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிட மிருந்து அரசுக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறு கட்டிடப் புனரமைப்பு வேலைகளுக்கு கோருகின்றார்.

03. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

04. பொதுநிதிச் சுற்றறிக்கை 04/2016(1) இற்கமைவாக வடமாகாணத்தில் தகுதியுடைய வியாபார அல்லது கம்பனிப் பதிவுகளைக் கொண்டுள்ளதும் அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் கட்டிட அமைப்புக்கான இக்ராட் (ICTAD) பதிவுள்ளவராகவும் கறுப்புப் பட்டியலில் (Black List) பெயரிடப் படாத துமான கேள்வியாளர்களுக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதுமாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

05. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) பகுதி 5 இல் காட்டப் பட்டுள்ளது.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தவிசாளர், வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர (தொலைபேசி இல.0212058867 பக்ஸ் இல 0212058866 e.mail – secveps@yahoo.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் 2019.07.11ஆம் திகதி வரை மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணி முதல் மாலை 16.00 மணி வரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தவிசாளர்/செயலாளர், வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, பருத்தித்துறை வீதி, புத்தூர் எனும் இடத்திலிருந்து 2019.06.21 ஆம் திகதியிலிருந்து 2019.07.11 ஆம் திகதி வரை காலை 09.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2000/- (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

08. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தவிசாளர்/ செயலாளர், வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, பருத்தித்துறை வீதி, புத்தூர் எனும் முகவரிக்கு 2019.07.12 ஆம் திகதி மாலை 14.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர், அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

09. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து 63 (அறுபத்து மூன்று)-2019.09.13) நாட்கள் வரையும் செல்லுபடியாகும்.

10. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

11. கேள்விகள் திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் எமது அலுவலக மாநாட்டு மண்டபத்தில் 2018.07.05 ஆம் திகதி பி.ப 14.30 மணிக்கு நடைபெறும். இக்கூட்டத்தில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தங்களது சொந்த செலவில் கலந்து கொள்ளமுடியும்.

| ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (Rs.)Min | ஒப்பந்த காலம் | [illegible] | [illegible] | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு (Rs) | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/41(13)/2/Council/05/2019 | இறைச்சிக்கடை அமைத்தல், கோப்பாய் | 2.15 | 03 மாதம் | C8 & C7 | 21,500 | 2019.11.08 |
| NP/14/41(13)/2/Council/06/2019 | கோப்பாய் உப அலுவலகமும் நூலகமும் திருத்தம், கோப்பாய் | 2.10 | 03 மாதம் | C8 & C7 | 21,000 | 2019.11.08 |
| NP/14/41(13)/2/Council/07/2019 | உரும்பிராய் சந்தையில் கடைகள் அமைத்தல், உரும்பிராய் | 4.48 | 03 மாதம் | C8 & C7 | 44,800 | 2019.11.08 |

**தியாகராஜா நிரோஷ்**
தலைவர்,
உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு
வலிகாமம் கிழக்கு பிரதேச சபை,
புத்தூர்.
2019.06.19

## யாழ்.பல்கலைக்கழகத்தில்
# பன்மைத்துவத்தை வளர்த்துக் கொள்வதற்கான கலந்தாய்வு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பல் இன, மத பன்மைத்துவத்தை எவ்வாறு வளர்த்துக் கொள்ளலாம் என்ற கலந்தாய்வு நேற்றைய தினம் பி.ப 2 மணியளவில் யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்றது.

யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வு உயிர்த்த ஞாயிறு தினத்தில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலின் பின் இன, மதங்களுக்கிடையிலும் சகிப்புத் தன்மை அற்ற சகோதரத்துவப் பண்புகளை வழங்கும் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்நிகழ்வின் உரையாளர்களாக கலாநிதி சுரேன் ராகவன், கலாநிதி சுகந்தினி ஸ்ரீமுரளிதரன், வணபிதா இம்மானுவேல் இரவிச்சந்திரன் மற்றும் அஷ்ஷேஹ் மௌலவி முஹம்மத் பைசா மதனி ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-10)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532



யாழ்.மாவட்ட முச்சக்கர மோட்டார் ஊர்தி உரிமையாளர் சங்கம் (தலைமையகம்)
40, முனீஸ்வரன் வீதி, யாழ்ப்பாணம்.
021 221 4460

## அறிவித்தல்
### இடைக்காலப் பொதுக்கூட்டம்


எமது சங்கத்தின் இடைக்காலப் பொதுக்கூட்டம் 23.06.2019 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு உப தலைவர் **எ.இ.போல் ஜெயகாந்தன்** அவர்கள் தலைமையில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எனவே எமது சங்கப் பதிவில் உள்ள ஓட்டோ உரிமையாளர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு அறியத் தருகின்றோம்.

(9317) நிர்வாகம்

போட்டிப் பரீட்சை
வகுப்புக்கள்
வட மாகாண மற்றும் அரச வேலைவாய்ப் புகள் தொடர்பான அனைத்துப் பரீட்சை களுக்குமான வகுப்புக் களும் யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவில் (யாழ். ஆஸ்பத்திரி வீதியில் பஸ் நிலையத்திலிருந்து 100M தூரத்தில்) நடைபெறுகின்றன.
(E6745)
தொடர்புகளுக்கு:
076 688 3394

5ம் ஆண்டு
# நினைவஞ்சலி



மலர்வு 15.10.1994 — உதிர்வு 16.06.2014

## அமரர் ரவீந்திரன் சுகிர்தன் (சுகிர்)

திதி: சங்கடஹரசதுர்த்தி

நினைவிலும் வருகின்றாய் மகனே - எங்கள்
கனவிலும் வருகின்றாய்
நேரில் வருவாய் என்று பார்த்திருந்தோம் - நீயோ
மௌனித்து எம்மைக் கலங்க வைத்தாய்

விடலைப் பருவமதில் எமைப் பிரிந்தாய்
தாங்க முடியவில்லை புத்திர சோகம்
ஐந்தாண்டு நினைவேந்தலில்
இறையோனை வேண்டுகின்றோம் மகனே

அரசடி வீதி,
கோண்டாவில்.
(செந்தூரன் பந்தல்)

என்றும் உன் நினைவுகளுடன்
அப்பா, அம்மா, அக்கா, அத்தான்
அண்ணா, தம்பி, மருமகன்

# தமிழர்களுக்கு உரிமை கிடைத்துவிடக் கூடாது

# முஸ்லிம்கள் போராட்டம்





(கல்முனை)

**கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தைத் தர முயர்த்துமாறு கோரி தமிழர்கள் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில் தமிழர்களுக்கு உரிமை கிடைத்து விடக் கூடாது என்ற கோஷத்துடன் முஸ்லிம்கள் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இலங்கையின் சட்ட திட்டங்களுக்கு முரணாகச் செயற்படும் கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தை மூடுமாறும் முஸ்லிம்கள் கோரிக்கை விடுத்தனர்.**

தமிழர்களின் போராட்டத்தை உடனடியாக தடுத்து நிறுத்துமாறும் கல்முனை தலைமைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

இரு தரப்பினருக்கு இடையில் நடைபெறும் போராட்டம் காரணமாக கல்முனையில் குழப்பகரமான சம்பவங்கள் இடம்பெறலாம் என எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

இதன் காரணமாக கல்முனையில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கல்முனை மாநகர முதல்வர் ஏ.எம்.ரஹ்கீப், மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ஆரிப்சம்சுடீன் போன்றோரும் இப் போராட்டத்தில் ஈடுபட்டனர். (இ-7)

## ஜனாதிபதி வேட்பாளராகும் தகுதி கோத்தபாயவுக்கு இல்லை-துமிந்த



(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராக போட்டியிடும் தகுதி முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவிற்குக்கிடையாது. ராஜபக்ஷவின் குடும்பம் நாட்டை ஆட்சி செய்தது போதும்.

இளம் தலைமுறையினருக்கும், அரசியல் புது முகங்களுக்கும் வாய்ப்பு வழங்கி விலகிக் கொள்வதே கௌரவமான செயற்பாடாகும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார்.


ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடும் தகுதி கிடையாது. பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் இவர் அமெரிக்கக் குடியுரிமையை இரத்துச் செய்து விட்டார் என்று குறிப்பிட்டுக் கொள்கின்றார்கள். ஆனால் இதுவரையில் இரட்டைக் குடியுரிமையை இரத்து செய்தமைக்கான எவ்வித உரிய ஆவணங்களும் சமர்ப்பிக்கப்படவில்லை.

எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில் பாரிய அபிவிருத்திகள் முன்னெடுக்கப்பட்டன. 30 வருட கால சிவில் யுத்தமும் முடிவிற்குக் கொண்டு வரப்பட்டது வரவேற்புக்குரியது. இக்காலகட்டத்தில் இவரது குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் அரசாங்கத்தில் முக்கிய பதவிகளில் செல்வாக்குச் செலுத்தினர். 10 வருட ஆட்சியில் பல விடயங்களை நிறைவேற்றிக் கொண்டார்கள் என துமிந்த மேலும் தெரிவித்தார். (இ-7)

## இன்று மதியம் 12 மணிக்குள் தமிழர்களுக்குத் தீர்வு கிடைக்க வேண்டும்

## அரசிற்கு ரத்ன தேரர் காலக்கெடு



(கல்முனை)

இன்று மதியம் 12 மணிக்குள் கல்முனை தமிழர்களுக்குத் தீர்வு கிடைக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் அரசாங்கத்துக்கு எச்சரிக்கை விடுத்தார்.

கல்முனை பிரதேச செயலகத்தை தரமுயர்த்துமாறு கோரி கல்முனையில் சர்வமதத் தலைவர்கள் முன்னெடுத்துவரும் போராட்டம் நேற்று நான்காவது நாளாகத் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டது.

இந்நிலையில், இப்போராட்டக் களத்திற்கு நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் நேற்று நேரில் சென்று ஆதரவு வழங்கினார்.

இதன்போது இன்று மதியம் 12 மணிக்குள் கல்முனை தமிழர்களுக்குத் தீர்வு கிடைக்க வேண்டும் என அரசாங்கத்திற்கு எச்சரிக்கை விடுத்தார்.

இதேவேளை, நியாயமான கோரிக்கைக்காக உண்ணாவிரதமிருக்கும் எமது மதகுருமார், இளைஞர்கள் நீதியின் பக்கம் நிற்கின்றனர். இப்போராட்டம் நேர்மையானது. அடிப்படைவாதிகள் தமிழ் மக்களுக்கான உரிமையை வழங்காதிருப்பதை எண்ணி நான் மிகவும் கவலையடைகின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## இந்தியாவிலுள்ள அகதிகளை இலங்கைக்கு அழைத்து வர ஐ.நா.உதவி புரிய வேண்டும்

## வடக்கு ஆளுநர் கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் Joern Soerensen வடமாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனை நேற்று முற்பகல் ஆளுநர் செயலகத்தில் சந்தித்தார்.

இந்தச் சந்திப்பின்போது ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தால் வடமாகாணத்தில் முன்னெடுக்கப்படும் செயற்றிட்டங்கள் தொடர்பில் ஆளுநருக்கு விபரிக்கப்பட்டது.

போரினால் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்ட மாகாணமாக வடமாகாணம் காணப்படுவதால் இங்கு வாழும் மக்களின் வாழ்க்கைத்தரத்தை பொருளாதார ரீதியாக உயர்த்தக்கூடிய திட்டங்களை செயற்படுத்துமாறு கோரிக்கை விடுத்தார்.

இதேவேளை, வடமாகாண மக்கள் எதிர்கொண்டுவரும் நீர்ப்பிரச்சினையை தீர்வுக்கு கொண்டுவருவதற்கு முன்னெடுக்கும் வடமராட்சிக் களப்பு திட்டம் உள்ளிட்ட செயற்றிட்டங்கள் தொடர்பில் குறிப்பிட்ட ஆளுநர் இதற்கு உதவிபுரியுமாறும் கோரிக்கை விடுத்தார்.மேலும், இந்தியாவில் வாழ்ந்துவரும் இலங்கை அகதிகள் தொடர்பில் குறிப்பிட்ட ஆளுநர் குறித்த அகதிகளை மீண்டும் இலங்கைக்கு அழைத்து வருவதற்கு ஐ.நா.உதவி புரியவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார். (இ-7)

## வாக்காளர் பதிவுகளை மேற்கொள்க

## யாழ்.உதவித் தேர்தல் ஆணையாளர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இதுவரை வாக்காளர் கணக்கெடுப்பு படிவங்களைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் உடனடியாக அதனை பெற்றுக் கொண்டு தங்கள் வாக்குரிமையை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

ஒவ்வொருவரும் தத்தமது கிராம உத்தியோகத்தர் ஊடாக அப் படிவத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு யாழ்.மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் இ.அமல்ராஜ் அறிவித்தார்.

வாக்காளர் கணக்கெடுப்பு படிவங்கள் பெறுவதில் சிக்கல்கள் உள்ளவர்கள் உடனடியாக முறைப்பாடுகளைப் பதிவு செய்யுமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.

கடந்த மே மாதம் 15 ஆம் திகதியிருந்து ஜூன் மாதம் 14 ஆம் திகதிவரைக்கும் வாக்காளர் கணக்கெடுப்புப்படிவம் விநியோகிக்கப்பட்டது.

இருப்பினும் அப்படிவங்கள் உரிய முறையில் தம்மை வந்தடையவில்லை என்று சில முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

அப் படிவத்தை இதுவரை பெற்றுக் கொள்ளாதவர்கள் அல்லது கிடைக்காதவர்கள் உடனடியாக தத்தமது கிராம உத்தியோகத்தர் ஊடாக அப்படிவத்தை பெற்றுக் கொள்ள வேண்டும்.

வாக்காளர் கணக்கெடுப்புப் படிவம் பெற்றுக் கொள்வதில் பிரச்சினைகள் இருப்பின் யாழ். மாவட்ட தேர்தல் அலுவலக தொலைபேசி இலக்கமான 021 222 2655 என்னும் இலக்கத்திற்கும், 021 222 3002 என்ற தொலைநகல் இலக்கத்திற்கும் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபரின் முறைப்பாட்டு இலக்கமான 021 222 5000 என்ற தொலைபேசி இலக்கத்திற்கும் முறைப்பாடுகளைப் பதிவு செய்ய முடியும்.

கிடைக்கும் முறைப்பாடுகள் தொடர்பில் உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் உதவித் தேர்தல் ஆணையாளர் மேலும் தெரிவித்தார். (இ-7)




# வோர்னருக்கு வானமே எல்லை பங்களாதேஷின் முயற்சி போதவில்லை

## அவுஸ்திரேலியா அசத்தல் வெற்றி




பங்களாதேஷுக்கு எதிரானஉலகக்கிண்ண கிரிக்கெட் லீக் போட்டியில் வோர்னர் விளாச, சதம் அவுஸ்திரேலிய அணி 48 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இங்கிலாந்து மண்ணில் ஐ.சி.சி., உலக கிண்ண கிரிக்கெட் தொடர் நடக்கிறது. இதில் இந்தியா, நியூசிலாந்து உள்ளிட்ட 10 அணிகள் பங்கேற்கின்றன. நொட்டிங்காமில் நடந்த லீக் போட்டியில் 'நடப்பு சம்பியன்' அவுஸ்திரேலியா, பங்களாதேஷ் அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலிய அணி துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

**வோர்னர் விளாசல்**

அவுஸ்திரேலிய அணிக்கு அணித் தலைவர் ஆரோன் பின்ச், வோர்னர் ஜோடி அபார ஆரம்பம் கொடுத்தது. இருவரும் அரை சதம் கடந்தனர். முதல் விக்கெட்டுக்காக 121 ஓட்டங்கள் சேர்த்தபோது, பின்ச் (53) ஆட்டமிழந்தார். எதிரணி பந்துவீச்சை சிதறடித்த வோர்னர், ஒரு நாள் அரங்கில் 16வது சதம் அடித்தார். நடப்பு உலக கிண்ணத் தொடரில் இவர் அடித்த இரண்டாவது சதம். கவாஜா அரை சதம் எட்டினார். இரண்டாவது விக் கெட்டுக்கு 192 ஓட்டங்கள் சேர்த்தபோது, வோர்னர் (166 ஓட்., 14 பவுண்டரி, 5 சிக்சர்) ஆட்ட மிழந்தார்.

**ஸ்மித் ஏமாற்றம்**

10 பந்துகளில் 32 ஓட்டங்கள் விளா சிய மக்ஸ்வெல் ரன் அவுட்டானார். இதன்பின், விக்கெட் சரிவு தொடங்கியது. சௌமியா பந் தில் கவாஜா (89) சிக்கினார். துடுப்பாட்ட வரிசை மாறி வந்த ஸ்மித், ஒரு ஓட்டத்தில் கிளம்பினார்.

அவுஸ்திரேலியா 368/5 ஓட்டங்கள் எடுத்த போது (49 ஓவர்) மழையால் ஆட்டம் தடைப்பட்டது. மீண்டும் போட்டி ஆரம்பமானது. அவுஸ்திரேலிய அணி 50 ஓவரில் 5 விக்கெட்டுக்களை இழந்து 381 ஓட்டங்கள் குவித்தது. ஸ்ரொய்னிஸ் (17), கேரி (11) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

**முஷ்பிகுர் சதம்**

கடின இலக்கை விரட்டிய பங்களாதேஷ் அணிக்கு சௌமியா சர்கார் (10) ஏமாற்றினார். சகிப் 41 ஓட்டங்கள் எடுத்தார். தமிம் (62) அரை சதம் கடந்தார். முஷ்பிகுர், மகமதுல்லா பொறுப்புடன் செயற்பட்டனர். ஜாம்பா பந்தில் இரண்டு சிக்சர் விளாசிய மகமதுல்லா அரைச் சதம் கடந்தார். கூல்டர் 'வேகத்தில்' மகமதுல்லா (69), சபிர் (0) அடுத்தடுத்து சிக்கினர். சிறப்பாக விளையாடிய முஷ்பிகுர் ஒரு நாள் அரங்கில் 7வது சதம் அடித்தார்.

பங்களாதேஷ் அணி 50 ஓவர்களில் 333 ஓட்டங்கள் மட்டும் எடுத்து வீழ்ந்தது. முஷ்பிகுர் (102) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

**வங்கத்தின் முயற்சி போதவில்லை**

பலமான அவுஸ்திரேலியாவுக்கு எதிராக வெற்றி பெற வங்கதேச வீரர்கள் முயற்சி செய்தனர். இருப்பினும், ஒரு நாள் அரங்கில் தனது அதிகபட்ச ஓட்டஎண்ணிக்கையை எட்டி ஆறுதல் அடைந்தனர்.

பாராட்டி
வாழ்த்துகின்றோம்



2019.06.16 ஞாயிற்றுக்கிழமை தெல்லிப்பழை இராஜேஸ்வரி மண்டபத்தில்
நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் எமது கழகத்தின்
மூத்த உறுப்பினரும் செயலாளருமான

திரு. சின்னத்தம்பி ஆனந்தராஜா அவர்களுக்கு

International Global Peace University USA வினால் சமூக சேவையை பாராட்டி கலாநிதி Doctor பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. அவர் மேலும் தனது சேவையைத் தொடர வள்ளுவன் மேம்பாட்டுக் கழகத்தின் சார்பில் எமது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

வாழ்த்துவோர்:
வள்ளுவன் மேம்பாட்டு கழகம்,
வடக்கு மாகாணம், இலங்கை.

பாராட்டி
வாழ்த்து



2019.06.16 ஞாயிற்றுக்கிழமை தெல்லிப்பழை இராஜேஸ்வரி மண்டபத்தில்
நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் எமது கோண்டாவில் மத்திய கிராம அபிவிருத்தி
சங்கம், மத்திய சனசமூக நிலையம் ஆகியவற்றின் முன்னாள் தலைவரும்
தற்போதைய போசகரும் மத்திய கல்வி நல மேம்பாட்டு பேரவையின் உறுப்பினருமான

திரு. சின்னத்தம்பி ஆனந்தராஜா அவர்களுக்கு

International Global Peace University USA வினால் சமூக சேவையை பாராட்டி கலாநிதி (Doctor) பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. அவர் மேலும் தனது சேவையைத் தொடர நிலையத்தின் சார்பில் எமது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

வாழ்த்துவோர்:
கோண்டாவில் மத்திய கிராம அபிவிருத்திச் சங்கம்,
மத்திய சனசமூக நிலையம், மத்திய கல்வி நல மேம்பாட்டு பேரவை

# வீதியை விடுவிக்கக்கோரி யாழில் நாளை போராட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரப் பகுதியிலுள்ள பொது வீதி ஒன்று நீண்டகாலமாக தனி நபர் ஒருவரால் அபகரிக்கப்பட்டு பொதுமக்களின் போக்குவரத்து தடை செய்யப்பட்டது.

குறித்த வீதியை மீண்டும் பொதுப்போக்குவரத்திற்கு திறக்குமாறு கோரி நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணம் கே.கே.எஸ்.வீதி பெசன் ஹவுஸ் அருகில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியினரால் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. (இ-9)

# நோய் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த வைத்தியசாலை நிர்வாகம் தீர்மானம்

(சாவகச்சேரி)

வரணி பிரதேச வைத்தியசாலையில் கிளினிக் வருபவர்களுக்கு அவரவர் நோய் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்த வைத்தியசாலை நிர்வாகம் தீர்மானித்துள்ளதாக வைத்தியசாலை அத்தியட்சகர் ப.அச்சுதன் தெரிவித்தார்.

நோயின் தன்மை, அவர்கள் பேண வேண்டிய கட்டுப்பாடு, நோய் ஏற்படுவதற்கான காரணம், நோயைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க செய்ய வேண்டிய வழிமுறைகள் மற்றும் நோயின் தன்மை அதிகரிப்பதால் ஏற்படக்கூடிய விபரீதம் குறித்து ஆலோசனைகள் விழிப்புணர்வின் போது வழங்கப்படும் எனத் தெரிவித்தனர்.

இந்த விழிப்புணர்வு நடவடிக்கை ஒவ்வொரு வியாழக்கிழமையும் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டது. இதன்மூலம் நோயாளர்கள் தம்மைத் தாமே சுய பரிசோதனை செய்து நோயின் தாக்கத்தைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ-30)


## பொது அறிவித்தல்

### வலிகாமம் தெற்கு பிரதேச சபை

1972 ஆம் இலக்க 17.06.2016 ஆம் திகதிய வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட வலிகாமம் தெற்கு பிரதேச சபைக்குச் சொந்த மான கொத்தியாவத்தை அம்பனைவீதியினை "அறிஞர் ஐயன்னாவீதி" எனப் பெயர்மாற்றம் செய்யுமாறு அப்பகுதி மக்களால் கோரிக்கையொன்று எமது சபைக்கு முன் வைக்கப்பட்டுள்ளது.

விபரம் பின்வருமாறு

வீதியின் இலக்கம் :- NJVSE 292
வீதியின் ஆரம்பம் :- டாக்டர் சுப்பிரமணியம் வீதி (சுன்னாகம்-புத்தூர் வீதி).
வீதியின் முடிவு :- வயல்வெளி
வீதியின் நீளம் :- 400 மீற்றர்
கிராம சே. உ.பிரிவு :-சுன்னாகம் நகரமேற்கு
கிராம.சே. உ.பிரிவு இல :- J/199.

எனவே இவ் வீதி பெயர்மாற்றத்திற்கு ஆட்சேபனை ஏதும் இருப்பின் எதிர்வரும் 08.07.2019 ஆம் திகதிக்குள் எழுத்து மூலம் "தவிசாளர் வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்" எனும் முகவரிக்கு அறியத்தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தவிசாளர்
வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.

(C-6720)



## யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து) திருநெல்வேலி கிழக்கு. கோப்பாய்.

### பதவி வெற்றிடம்

எமது சங்கத்தில் வெற்றிடமாகவுள்ள பின்வரும் நிரந்தர பதவிக்கு தகுதியானவர்களிடமிருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவத்தை அலுவலக வேலை நாட்களில் தலைமைக் காரியாலயத்தில் ரூபா 10/- ஐ செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் "தலைவர், யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய் என்ற முகவரிக்கு 05.07.2019 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக நேரிலோ அல்லது பதிவுத்தபால் மூலமாக அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிட்டு விண்ணப்பிக்கவும்.

1) பதவி: பொதுமுகாமையாளர் (நிரந்தரம்)
சம்பள குறி இல: 101/05
சம்பள அளவுத்திட்டம் : 04/2018 இன்படி 20480-310X10-345X10-27030

அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்

அ) கூட்டுறவு ஊழியர் 06 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் ஆகக் குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம் அல்லது கூட்டுறவு ஊழியர் 07 ஆவது சம்பளத் திட்டப் பதவியில் ஆகக் குறைந்தது 06 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டமொன்றுடன் அல்லது அதற்கு சமானான தகைமையொன்றுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனமொன்றில் முகாமை மட்டத்திலான பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது 10 ஆண்டு கால அனுபவம், இதில் உயர்தர முகாமை மட்டத்திலான பதவியில் ஆகக் குறைந்தது 03 ஆண்டு கால கட்டாய அனுபவம்.

அல்லது

இ) கூட்டுறவு ஊழியர் உயர்தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் 08 வருட கால அனுபவம் இதில் சிரேஷ்ட முகாமை மட்டத்திலான பதவியில் ஆகக் குறைந்தது 03 வருடகால அனுபவம் கட்டாயமாகும். க.பொ.த.உயர்தரப்பத்திரப் பரீட்சையில் 03 பாடங்களுடனான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியொன்றில் ஆகக் குறைந்தது 12 வருட சேவையாற்றிய அனுபவம். இதில் உயர்தர முகாமை மட்டத்திலான பதவியில் ஆகக் குறைந்தது 03 ஆண்டு கால கட்டாய அனுபவம்.

குறிப்பு: விசேடமாக மொழித்தகைமை உள்ளவர்களுக்கும் கணனி அறிவுடையோருக்கும் முன்னுரிமை வழங்கப்படும். மேற்படி சம்பளத்திட்டத்திற்கு மேலதிகமாக கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட விசேட படி வாழ்க்கைச் செலவுப்படி போன்றன சுற்று நிருபத்திற்கு அமைவாக வழங்கப்படும்.

பொதுவான நியந்தனைகள்

1. வயது 05.07.2019 ஆம் திகதியன்று 18 வயதுக்கு குறையாதவர்களாகவும் 45 வயதுக்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும்.
2. யாழ்.மாவட்டத்தில் இரண்டு வருடங்களுக்கு மேலாக வசித்தமையை உறுதிப்படுத்துவதற்கு சான்றிதழ்கள் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. கல்வித்தகைமைகள், அனுபவம், வயது, வதிவிடத்தை உறுதிப்படுத்தல், நற்சான்றிதழ், தேசிய அடையாள அட்டை என்பவற்றின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.
4. கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு பிரமாணங்களுக்கு அமைவாக நிர்வாகத்தினால் விதிக்கப்படும் ரொக்கப் பிணையை செலுத்துதல் வேண்டும்.
5. ஏனைய சங்கங்களில் இருந்து விண்ணப்பிப்பவர்கள் அச்சங்கத்தினூடாக விண்ணப்பிக்க வேண்டும்.
6. சங்கப் பணியாளருக்கு வயதெல்லை கருத்தில் கொள்ளப்படமாட்டாது.
7. விண்ணப்பத்தில் காட்டப்படும் தகவல்களும் இணைப்புக்களும் உண்மையானதும் செம்மையானதுமென உறுதிப்படுத்துவதோடு ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில் இதில் ஏதேனுமொரு பிழையானதெனவோ அல்லது பொய்யானதெனவோ காணப்படுமிடத்து நஷ்டஈடு பெறாது உடனடியாகப் பதவி நீக்கம் செய்யப்படுவீர்கள் என்பதை தாங்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

(C-6741) - தலைவர்.


# மணல் விற்பனை மக்கள் குற்றச்சாட்டு

(சாவகச்சேரி)

தென்மராட்சி-கொடிகாமம் பகுதியில் வீதி ஓரங்களில் தண்ணீர் குழாய் பொருத்தும் பணியில் ஈடுபடுவோர் பணியின் போது மேலதிகமாக வரும் மணலை விற்பனை செய்வதாக குற்றம் சாட்டப்படுகிறது.

கொடிகாமம் மற்றும் வரணிப் பகுதியில் வீதிகளில் காணப்படும் மேடு, பள்ளங்களைச் சீர் செய்ய குறித்த மீதிமணலை பயன்படுத்தக் கோரிய நிலையில் குறித்த மணலை விற்பனை செய்கின்றமை வேதனையளிப்பதாக பொதுமக்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் வை.ஜெகநாளின் கவனத்திற்கு பொதுமக்கள் கொண்டு சென்றனர்.

இது தொடர்பாக குறித்த உறுப்பினர் பிரதேசசபைத் தவிசாளருக்கு அறிவித்தும் நடவடிக்கை எடுத்ததாகத்தெரியவில்லையெனத் தெரிவித்தார். (இ-30)


பழைமை வாய்ந்த

## ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்



- ஆண், பெண் வசியம் (கலைரும் வசியம், ராஜ வசியம், பிறப்பு வசியம்)
- பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும்படி செய்ய முடியும்
- கணவன்-மனைவிக்குள் பிரச்சினையா?
- காணி விற்பனையில் பிரச்சினையா?
- வியாபார முன்னேற்றம்
- வீட்டில் ஒற்றுமை உண்டாக
- பெற்றோர் ஆசீர்வாதம் பெற

இரகசியம் பேணப்படும்

ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம் சகல காரியங்களும் வசியமுறைப்படி செய்து தரப்படும். (பின் விளைவுகள் எதுவும் ஏற்படாது) மூன்று பொழுதில் பலன்.

(உங்களால் நேரில் வர முடியாவிட்டால் பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)

ரெங்கசாமி
கண்டி, அம்பத்தன்ன -077 939 5222
Viber:076 466 4153.

வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்


## இராசி பலன்

**மீனம்:** வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மேடம்:** புதிய முயற்சிகளில் வெற்றி பெறுவீர்கள், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.

**இடபம்:** தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், குடும்பத்தில் நிலவிய குழப்பங்கள் தீரும், பயணங்களால் பலனுண்டு, நல்லவர்களை சந்திக்கும் வாய்ப்புண்டு.

**மிதுனம்:** எந்தக் காரியத்திலும் நிதானம் தேவை, வரவைக்காட்டிலும் செலவு கூடும்,வேலைச் சுமை அதிகரிக்கும் நாள், உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது.

**கும்பம்:** மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், சுப செலவுகள் அதிகரிக்கும் நாள், தொழில் நலன்கருதிய பயணங்கள் இடம்பெறலாம்.

|  |  |  |  |
|---|---|---|---|
|  |  | சுக் | சூரி.ராகு. புத.செவ் |
|  | இராசி பலன் கிரகநிலை சந்திராஷ்டமம் புனர்பூசம், பூசம் |  |  |
| சந் |  |  |  |
| சனி. கேது | குரு |  |  |

21.06.2019
ஆனி 06, வெள்ளிக்கிழமை
சூரிய உதயம் காலை 6.06 மணிக்கு
சதுர்த்தி முன்னிரவு 7.08 மணிவரை
திருவோணம் மாலை 6.32 மணிவரை
சுபநேரம் 5.54-7.24 மணிவரை
இராகுகாலம் 10.24-11.54 மணிவரை
சங்கடகர சதுர்த்தி விரதம்
உலக யோகா தினம்

வளவன்

**கடகம்:** நீண்ட நாளைய நண்பர் ஒருவரின் நெருங்கிய நட்பு இடம்பெறலாம், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு,

**மகரம்:** தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், உடல் நலனில் அதிக அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், போசன சுகமுண்டு, பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**சிம்மம்:** மறைமுக எதிர்ப்புகள் மாறும், சிக்கனத்தைக் கடைப்பிடிக்கும் எண்ணம் உருவாகும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், செய்தொழில் மேன்மையுணடு.

**தனுசு:** கொடுக்கல் -வாங்கல்கள் ஒழுங்காகும், செய்தொழிலில் மேன்மையும் உயர்வும் கிட்டும், குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு.

**விருச்சிகம்:** சேமிப்பு உயர்வதற்கான வழியைக் கண்டு கொள்வீர்கள், பொது வழியில் புகழ் கூடும் நாள், வழிபாட்டில் நம்பிக்கை வைப்பீர்கள், போசன சுகமுண்டு.

**துலாம்:** செல்லும் இடங்களில் சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், வாகன சுகமுண்டு, பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், சுப செலவுகள் அதிகரிக்கும்.


**கன்னி:** மன நிறைவு கூடும் நாள், நீண்ட நாட்களாக தள்ளிப் போட்ட காரியமொன்றை இன்று செய்து முடிப்பீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

# ஐந்தாவது சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு வடமாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தால் 'மீளும் ஆளுமை' நிகழ்ச்சித்திட்ட அறிமுக விழா

(யாழ்ப்பாணம்)

இன்று இடம்பெறும் ஐந்தாவது சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு வடமாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தால் மாணவர்களின் ஆளுமைத் திறன்களை மேம்படுத்தும் நிகழ்ச்சித் திட்டமான ''மீளும் ஆளுமை'' எனும் அங்குரார்ப்பண நிகழ்வு யாழ்.இந்து மகளிர் கல்லூரியின் விழா மண்டபத்தில் காலை 8 மணியளவில் இடம்பெறும். இந் நிகழ்வில் வடமாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

மீளும் ஆளுகை நிகழ்ச்சித் திட்டமானது மாணவர்களின் உளம்சார் திறன்களை மேம்படுத்துவதையும் பலப்படுத்துவதையும் இலக்காகக் கொண்டு எவ்வாறான சவால் மிக்க சூழல்களிலும் ஆளுமைகளை மேம்படுத்துவதை முக்கிய கருப் பொருளாகக் கொண்டுள்ளது.



இந் நிகழ்ச்சித் திட்டமானது வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் ஒத்திசைவுடன் அமுல் படுத்தப்படுவதுடன் வடமாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தின் ஒத்திசைவுடன் அமுல் படுத்தப்படுவதுடன் வடமாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தின் தொலைநோக்கின் முக்கிய அம்சமான ஆன்மிக ஆரோக்கியம் சார்ந்த நிகழ்ச்சித் திட்டமாக அமையவுள்ளது என்பதுடன் இது வடமாகாண மாணவர் சமூகத்தின் ஆளுமை மேம்பாட்டில் முக்கிய பங்காற்றும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கடந்த வருடம் வடமாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட ''விசேட தேவையுடைய மாணவர் வாழ்வியலில் யோகாவின் பங்கு'' எனும் நிகழ்ச்சித் திட்டம் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது என வடமாகாண சுதேச மருத்துவத் திணைக்களப் பணிப்பாளர் டாக்டர் திருமதி.சி.துரைரட்ணம் அறிவித்தார். (இ)

# மாணிக்கவாசகர் குருபூசை தின திருமுறை மனனப் போட்டி

(யாழ்ப்பாணம்)

வண்ணை-சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக் கழகம் சைவச் சிறார்களின் மனனம் செய்யும் ஆற்றலையும் சைவ சமய அறிவை விருத்தி செய்யும் பொருட்டு மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசையை முன்னிட்டு திருமுறை மனனப் போட்டியை நடத்தவுள்ளது.

இப் போட்டி தரம் 1, 2, 3, 4 பிரிவுகளுக்கு நடத்தப்படவுள்ளன.

தரம்1,2 பிரிவிற்கு ''முத்தி நெறி அறியாத மூர்க்கரொடு முயல் வேனைப் '', ''பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்'' ஆகிய இரு திருமுறைகளும்,

தரம் 3,4 பிரிவிற்கு ''பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்'', ''வான் ஆகி! மண் ஆகி! வளி ஆகி! ஒளி ஆகி'' ஆகிய இரு திருமுறைகளும் மனனம் செய்யப்படல் வேண்டும்.

திருமுறை மனனப் போட்டி எதிர்வரும் ஜூன் 23 ஆம் திகதி யாழ். இந்துக் கல்லூரியில் பி.ப. 2 மணிக்கு நடைபெறவுள்ளது. இதற்கான விண்ணப்ப முடிவுத் திகதி ஜூன் 21 ஆம் திகதியாகும்.

பரிசில்கள் ஜூலை 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று வழங்கப்படும்.

மேற்படி திருமுறை மனனப் போட்டியில் பங்குபற்ற விரும்புபவர்கள் சைவசமய அபிவிருத்திக்கழக அறிவகம் இல.82 நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் பி.ப. 3.30 மணி முதல் 6 மணி வரை தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என சைவசமய அபிவிருத்திக் கழக பரீட்சை செயலரும், சமய பிரசாரகருமான சு.சிறிகாந்தன் அறிவித்துள்ளார். (இ)




# 'கன்னியா வெந்நீரூற்றின் மரபுரிமையை பாதுகாப்போம்'

(யாழ்ப்பாணம்)

''கன்னியா வெந்நீரூற்றின் மரபுரிமையைப் பாதுகாப்போம்'' கருத்தரங்கு நாளை மறுதினம் 23 ஆம் திகதி பிற்பகல் 3 மணியளவில் யாழ்ப்பாணம் இலங்கை வேந்தன் மண்டபத்தில் திருகோணமலை தென்கையிலை ஆதீன சுவாமி அகத்தியர் அடிகளார் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில், ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், அருட்பணி ரவிச்சந்திரன், சின்மயா மிஷன் சுவாமி சிதாகாசானந்தா ஆகியோர் ஆசியுரைகளை வழங்குவர்.

கருத்துரைகளை, யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறை பேராசிரியர் எஸ்.கிருஷ்ணராஜா, யாழ்.பல்கலைக்கழக அரசறிவியல் துறைத் தலைவர் கலாநிதி கே.ரி.கணேசலிங்கம், ஓய்வுபெற்ற அதிபரும், ஊடகவியலாளருமான திருமலை நவம், சமூக ஆய்வாளர் நிலாந்தன் ஆகியோர் வழங்குவர். (5)

# கல்முனை போராட்டத்திற்கு இந்துக் குருமார் அமைப்பு ஆதரவு

(யாழ்ப்பாணம்)

கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலகத்தை தரமுயர்த்தக் கோரி, தொடரும் உண்ணாவிரதப் போராட்டக்காரர்களின் 30 வருட கால கோரிக்கை நிறைவேற்றப்பட வேண்டும் என இந்துக் குருமார் அமைப்பு வேண்டுகோள் விடுத்தது.

இந்துக்குருமார் அமைப்பின் தலைவர் சிவஸ்ரீ.கு.வை.க. வைத்தீஸ்வரகுருக்கள் மற்றும் செயலாளர், பிரம்மஸ்ரீ.கே. சந்திரசேகர சர்மா ஆகியோரால் விடுக்கப்பட்ட ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது..

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை தரமுயர்த்தக் கோரி 17.06.2019 இல் இருந்து உண்ணாவிரதப் போராட்டத்தை சர்வமதத் தலைவர்களான இந்து, பௌத்த, கிறிஸ்தவ மதத் தலைவர்களான கல்முனை சுபத்ராமய விகாராதிபதி வண. ரன்முத்துகல சங்கரத்ன தேரர், கிழக்கு இந்துக் குருமார் ஒன்றியத் தலைவர், கல்முனை முருகன் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ க.கு.சச்சிதானந்த குருக்கள், கல்முனை மாநகர சபை உறுப்பினர்களான சந்திரசேகர் ராஜன், ஆ.விஜயரெத்தினம் ஆகியோர் உண்ணாவிரதத்தை ஆரம்பித்தனர். பின்னர் பல பொது மக்களும் மதத் தலைவர்களும் இதில் இணைந்து தொடர்ந்து போராட்டம் நடைபெற்று வருகின்றது.

1993.07.28 ஆம் திகதி உப பிரதேசங்கள் இந்நாட்டில் உருவாக்கப்பட்டது. அதில் 28 பிரதேச செயலகமாக தரமுயர்ந்து காணப்படுகின்றது. அதனில், கல்முனை பிரதேச செயலகம் மாத்திரம் தரமுயர்த்தப்படாமல் உள்ளது. தமிழ் மக்களின் 30 வருட நெடுநாள் கோரிக்கையே இன்று உண்ணாவிரதமாக பரிணமித்துள்ளது.

காலம் தோறும் ஆட்சியில் இருந்த அரசாங்கத்திடம் இது தொடர்பாக பல கோரிக்கைகள் முன்வைத்த போதும் எந்தவித பயனுமற்று நம்பிக்கை இழந்து இறுதியில் மக்கள் அறப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர். எனவே, இவை தீர்க்கப்பட வேண்டிய முக்கிய பிரச்சினையாக உள்ளது.

ஆகையால், கல்முனை பிரதேச செயலகத்தை தரமுயர்த்த வேண்டுமென இந்துக் குருமார் அமைப்பும் தனது ஆதரவை தெரிவித்துள்ளதுடன், அரசாங்கம் உடனடியாக உரிய தீர்வை வழங்க வேண்டுமென இந்துக் குருமார் அமைப்பினர் மேலும் வேண்டுகோள் விடுத்தனர். (இ-101)

# சிலப்பதிகார விழா இன்று

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை இளங்கோ கழகத்தின் புலமை ஒலி-2019 சிலப்பதிகார விழா இன்று 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணியளவில் துன்னாலை அல்லையம்பதி வடிவேலர் மணி மண்டபத்தில் ''தமிழ்த் தாத்தா கந்த முருகேசனார்'' அரங்கின் கீழ் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் போ.ரவீந்திரன் தலைமையில் நடைபெறும்.

இவ் விழாவிற்கு கௌரவ விருந்தினராக யாழ்.மாநகர சபை உறுப்பினர், புதிய யாழ். வைத்தியசாலைப் பணிப்பாளர் சி.குலேந்திரராசா கலந்து கொள்வர்.

இதில்,கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் சட்டத்தரணி ஜி. இராஜகுலேந்திரா நடுவராகப் பங்குபெறும் விவாத அரங்கில் எமது பெருமைக்குப் பெரிதும் காரணம், ''அற உணர்வே'' என தி. கார்த்திகேயன், சு.இமயராஜ்,கு. கௌரிபாலன் ஆகியோரும், ''தூயஅன்பே'' என திருமதி.அ. வாசுமதி, க.கஜந்தன்,க.அருண் பிரசாந் ஆகியோரும் விவாதிப்பர். (இ-5)

# உற்சவகால தெய்வீக இசையரங்கிற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உற்சவகாலத்தை ஒட்டி வருடாந்தம் நடத்தப்படும் தெய்வீக இசையரங்கில் பங்கு கொள்ளும் கலைஞர்கள், மன்றங்களுக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பப்படிவத்தினை இளங்கலைஞர் மன்றம் என்ற முகநூலின் ஊடாகப் பதிவிறக்கம் செய்தும் அல்லது இளங்கலைஞர் மன்றம் சட்ட நாதர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மன்ற அலுவலகத்தில் நேரடியாகவும் பெற்றுக் கொள்ள முடியும்.

இவ் விண்ணப்பப் படிவத்தினைப் பூர்த்தி செய்து எதிர்வரும் 10.07.2019 புதன்கிழமைக்கு முன்னர் இளங்கலைஞர் மன்றம், சட்டநாதர் வீதி நல்லூர், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத் தபால் அல்லது நேரடியாகவோ ஒப்படைத்தல் வேண்டுமென இளங்கலைஞர் மன்ற செயலாளர் அறிவித்துள்ளார். (5)

# மகிழங்கேணி குடியிருப்பு பகுதியில் உவர்நீர் தடுப்பணை அமைக்க வேண்டும்

## நகரசபை உறுப்பினர் சுபோதினி கோரிக்கை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி -கோவிற்குடியிருப்பு கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள மகிழங்கேணிக் குடியிருப்பு பகுதியில் உவர் நீர்த் தடுப்பணை அமைக்கப்பட வேண்டும் என சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் பவுலினா சுபோதினி தெரிவித்துள்ளார். அண்மையில் இடம்பெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் போதே அவர் இக் கோரிக்கையை முன்வைத்திருந்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மகிழங்கேணி கடற்கரைப் பகுதியானது கடல் மட்டத்தை விட தாழ்வான பகுதியாகக் காணப்படுகிறது. இதன் காரணமாக கடல்நீர் மாரி காலங்களில் குடிமனைகளுக்குள் உட்புகும் அபாயமும் காணப்படுகிறது. அத்துடன் மழைநீர் தேங்காமல் வழிந்து செல்வதற்கான வடிகாலமைப்பையும் மகிழங்கேணிப் பகுதியில் அமைக்க வேண்டும். மகிழங்கேணியில் தற்போது மாதிரிக் கிராமம் உருவாகி வரும் நிலையில் அதில் 51குடும்பங்களுக்கு வீட்டுத்திட்டங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இருப்பினும் ஒரு சில பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் இவற்றுள் உள்வாங்கப்படவில்லை.

இது தொடர்பாக பிரதேச செயலர் கவனமெடுக்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்திருந்தார். மகிழங்கேணிப் பகுதியில் மாதிரிக் கிராமம் உருவாகி வருவதனால் உவர்நீர்த் தடுப்பணை அமைக்கும் திட்டமும் அதற்குள் உள்வாங்கப்பட்டிருப்பதாக பிரதேச செயலர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கோவிற்குடியிருப்பு-மகிழங்கேணிப் பகுதியில் கடந்த 2016 ஆம் ஆண்டு காணி இல்லாத 69 குடும்பங்களுக்கு தென்மராட்சிப் பிரதேச செயலகத்தினால் தலா ஒன்றரை பரப்புக்காணி வீதம் வழங்கப்பட்டது. அதில் இருபதுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் தற்காலிகக் கொட்டகை அமைத்து எந்தவொரு அடிப்படை வசதிகளும் இன்றி மூன்று வருடங்களாக வசித்து வருகின்றனர். குறித்த கடற்கரை தரவைப் பகுதியில் அம்மக்களுக்கு வீட்டுத் திட்டம் வழங்க பலரும் எதிர்ப்பு தெரிவித்திருந்த நிலையில் மக்களின் சம்மதத்தோடு 51 வீடுகளைக் கொண்ட மாதிரிக் கிராமம் அமையப்பெறவுள்ளது. தற்போது அவ் வீடுகளுக்கான அத்திபாரப் பணிகள் முதற்கட்ட நிதியில் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (5-30)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

**மணமகள் தேவை**

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 36 வயது, புனர்பூசம் 4 ஆம் பாதம் 9 இல் சூரியன் செவ்வாய், கி.பா: 60 1/4, FRANCE குடியுரிமை, தொழில் மணமகனுக்கு படித்த பொருத்தமான மணமகளை எதிர்பார்க்கின்றோம்.
தொடர்புக்கு: 075 735 1864
Viber: 071 847 4283 (9301)

# கம்போடியா பயணத்தை ரத்துச் செய்தார் மைத்திரி



(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கம்போடியா, லாவோஸ் நாடுகளுக்கு, இந்த மாத இறுதியில் மேற்கொள்ளவிருந்த பயணத்தை திடீரென இரத்துச் செய்தார்.

எதிர்வரும் 26ஆம் திகதி தொடக்கம், கம்போடியாவுக்கும் லாவோஸ்க்கும் பயணம் மேற்கொள்ள மைத்திரிபால சிறிசேன திட்டமிட்டிருந்தார்.

எனினும், அவரது இந்தப் பயணத் திட்டம் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாகவும், எதிர்வரும் ஓகஸ்ட் மாதமே அவர் இந்தப் பயணத்தை மேற்கொள்ளவுள்ளார் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (இ-7)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்

பிரபல சமூக சேவையாளரும் கல்விக் கொடையாளருமாகிய செங்கைப்புரவோன், பதிவரோதயன் உயர்திரு. இராசையா குவேந்திரநாதன் அவர்களின் தன்னலங்கருதாச் சேவையினைப் பாராட்டி

12.05.2019 அன்று கனடா இ குருவி அமைப்பினால் "புதிய வெளிச்சம்" எனும் விருதினை கனடாவில் பெற்றுக்கொண்டமைக்கும்



19.05.2019 அன்று யாழ்.கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கம் (கனடா) குமரன் விளையாட்டுக்கழகம் கனடாக் கிளையும் இணைந்து வழங்கிய "கொடை மதி" எனும் பட்டத்தினை கனடாவில் பெற்றுக்கொண்டமைக்கும்




16.06.2019 அன்று தெல்லிப்பளை இராஜேஸ்வரி மண்டபத்தில் இந்தியாவின் குளோபல் பீஸ் யுனிவெசிற்றியினால் சிறந்த சமூக சேவைக்கான கௌரவ "கலாநிதி" பட்டம் பெற்றுக்கொண்டமைக்கும்




அவர்களைப் பாராட்டுவதோடு அவர்களின் சேவை மென்மேலும் தொடர நாமும் அவர்களை உளமாற வாழ்த்துகின்றோம்.

(9199) மஸ்கன் வீதி, நவக்கிரி, புத்தூர்-15 வீட்டுத்திட்ட பயனாளிகளும் ஓய்வு நிலை அதிபர் சண் வாமதேவன் அவர்களும்.



குருவே துணை



வாழ்க வையகம் வாழ்க வளமுடன்

## சர்வதேச யோகா தினம்-2019

21.06.2019 அன்று உலகமெங்கிலும் சர்வதேச யோகா தினம் கொண்டாடப்படவுள்ள நிலையில் யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவிலில் எதிர்வரும் 23.06.2019 அன்று மாலை 5.00 மணிக்கு உலகை உய்விக்க வந்த அருட்தந்தை யோகிராஜ் வேதாத்திரி மகரிஷி அவர்கள் வழிவகுத்த மனவளக்கலை யோகாப் பயிற்சிகளை தடையின்றி நடாத்தி வரும் வேளையில் அறிவுத்திருக்கோவிலின் தலைவரும் பேராசிரியருமான சி.முருகானந்தவேல் அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது என்பதை மகிழ்வுடன் அறியத் தருவதோடு தமிழகத்திலிருந்து யாழ்.மண்ணுக்கு முதன்முதலில் வருகை புரியும் தமிழகத்தின் மிகச்சிறந்த முதுநிலைப் பேராசிரியர் T.காஞ்சிநாதன் அவர்கள் கலந்து கொள்ள இருக்கிறார் என்பதையும் அறியத்தருகின்றோம். இவ்வாறான அரிய சந்தர்ப்பங்களில் அனைத்து அன்பர்களும் பங்குபற்றி பயனுறுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

## ஆளுமைத் திறனூக்கப் பயிற்சிகள் ஆரம்பமாகிறது

- எளிய முறை உடற்பயிற்சிகள்
- எளியமுறை தியானப்பயிற்சிகள்
- காயகல்பப் பயிற்சி
- அகத்தாய்வுப் பயிற்சிகள்

மேற்குறித்த பயிற்சியில் உடல். உளம். உயிர் மனம் சார் பயிற்சியை மேம்படுத்துவதற்கு தங்களின் வருகை அவசியமானதாகும். எனவே தங்களின் வருகையை உறுதிப்படுத்துவதற்கு யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவிலில் தொடர்பு கொள்ளவும். மேற்குறித்த பயிற்சியை இந்தியா தமிழ்நாட்டிலிருந்து முதன்முறையாக இலங்கைக்கு வருகை தரும் முதுநிலைப் பேராசிரியர் T.காஞ்சிநாதன் வழங்கவுள்ளார் என்பதையும் அறியத்தருகின்றோம்.

காலம்: 22.06.2019 சனிக்கிழமை தொடக்கம் 28.06.2019 வெள்ளிக்கிழமை வரை
நேரம்:- மாலை 5.00 மணி தொடக்கம் 7.00 மணிவரை
பயிற்சிகளை வழங்குபவர்கள்:- மனவளக்கலை பேராசிரியர் T.காஞ்சிநாதன்
துணைப்பேராசிரியர் த.நந்தகுமரன்

அகத்தாய்வு 1ஆம் நிலை 22.06.2019 சனிக்கிழமை மற்றும் 23.06.2019 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கும் நடைபெறும்.

யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்,
இல.81, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்,
தொ.இல:- 021 222 2772
(C-6037)



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: பரணி 4
கி.பா: 27
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:A/L, Australia PR
எதிர்பார்ப்பு:A/L(உள்நாடு, வெளிநாடு)
தொ.இ: B/9810

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: பூரம்
கி.பா: 62 செவ் 1 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்:A/L,வியாபாரம்
எதிர்பார்ப்பு: A/Lபடித்தபெண்(உள்நாடு)
தொ.இ: B/9812

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:கல்வியியற் கல்லூரி ஆசிரியர்
எதிர்பார்ப்பு: ஆசிரியர்(உள்நாடு)
தொ.இ: B/9815

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம் 3
கி.பா: 50 ½ சூரி செவ் 7 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்:B.Sc, Senior Design Engineer
எதிர்பார்ப்பு: Doctor, Engineer, Lecturer, Accountant(உள்நாடு, வெளிநாடு)
தொ.இ: B/9816

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: பரணி 3செவ் 7 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:A/L, America
எதிர்பார்ப்பு:Professional Qualified(உள்நாடு, வெளிநாடு)
தொ.இ: G/9811

பிறப்பு: 1997 இந்து
நட்சத்திரம்: பூரம் 2
கி.பா: 32செவ் 2 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:A/L
எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்
தொ.இ: G/9813

பிறப்பு: 1995 கிறிஸ்தவம்
நட்சத்திரம்: சதயம் 4
கி.பா: சூரி செவ் 9 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:A/L
எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்
தொ.இ: G/9814

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: சுவாதி 3
கி.பா: செவ் 7 இல்
உயரம்: 157cm
தகைமை/தொழில்:BAபட்டதாரி
எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்
தொ.இ: G/9817

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

## தமிழ்ப் பற்றுடனும் இனப் பற்றுடனும் செயற்படும்

# சலுகைகளுக்கு அடிபணியாத நேர்மையான தமிழ்ப்பிரதிநிதிகள் உருவாக வேண்டும்

## நீதியரசர் விக்னேஸ்வரன் எதிர்பார்ப்பு

(யாழ்ப்பாணம்)

எம்மவர்கள்கட்சிநலன்பற்றியும்தமது சொந்த நலன்கள் பற்றியும் சிந்திக்கும் அளவுக்கு மக்கள் நலனில் கவலை கொள்வதாகத் தெரியவில்லை. இனியாவது எமது தமிழ் மக்களின் பிரதிநிதிகள் மிகவும் நேர்மையாகவும் விசுவாசமாகவும் தமிழ்ப் பற்றுடனும் இனப் பற்றுடனும் செயற்பட முன்வர வேண்டும். சலுகைகளுக்கு அடிபணியாத நேர்மையான தமிழ் மக்கள்பிரதிநிதிகள்உருவாகவேண்டும்எனவடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமுமான நீதியரசர் சி. வி. விக்னேஸ்வரன் கோரிக்கை விடுத்தார். வாராந்த கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தார்.

**கேள்வி:-** மகாவலி திட்டத்தால் வட கிழக்கு மக்களுக்கு தீமையே ஒழிய நன்மை எதுவும் கிடைக்கவில்லை என்று பொருள்பட நீங்கள் தெரிவித்துள்ளீர்கள். அதன் அர்த்தம் என்ன?

### தமிழரின் தாயக கோட்பாட்டை சிதைக்க சிங்களக் குடியேற்றம்

**பதில்:-** இலங்கை 1948 ஆம் ஆண்டு சுதந்திரம் அடைந்த பின்னர் வடக்கு-கிழக்கில் அபிவிருத்தி என்ற போர்வையில் துரிதமாக மேற்கொள்ளப்பட்ட குடியேற்றத் திட்டங்களின் பின்னணியில் மூன்று பிரதான காரணங்கள் இருந்திருக்கின்றன. அவற்றை எம் மக்கள் புரிந்தும் புரியாது வாழ்ந்து வந்துள்ளனர். அவையாவன,

1. தமிழ் பேசும் மக்கள் வாழ்ந்த வட கிழக்கின் நில அபகரிப்பு.
2. வடக்கு, கிழக்கில் குடிசன பரம்பலில் மாற்றத்தை ஏற்படுத்துதல்.
3. தமிழ் மக்களின் தாயக கோட்பாட்டை சிதைக்கும் வகையில் வடக்கும் கிழக்கும் இணைந்த தமிழ் மக்களின் தொடர்ச்சியான நிலப்பரப்பை குறுக்கே சிங்கள மக்களை நுழைத்து குடியேறச் செய்து துண்டாடுதல்.

இவற்றை ஓரளவு புரிந்து கொண்ட தமிழ் அரசியல் தலைவர்களின் கடும் எதிர்ப்பு மற்றும் போராட்டங்களை கருத்தில் கொள்ளாமல் அரசாங்கங்கள் மேற்கொண்ட இத்தகைய திட்டமிட்ட குடியேற்ற நடவடிக்கைகள் எம்மவர்கள் அஞ்சியபடியே பாரிய விளைவுகளை தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படுத்தின. இதே போலத்தான் தற்போதும் மகாவலி திட்டத்துக்கு ஊடாக மேற்கொள்ளப்பட்டுவரும் குடியேற்ற நடவடிக்கைகள் வடக்கில் தமிழ் மக்களின் குடிசன பரம்பலில் செயற்கையான மாற்றத்தை ஏற்படுத்தப்போவதுடன் மிக விரைவில் எமது தாயகமான வடக்கும் கிழக்கும் துண்டாடப்படும் நிலைமை ஏற்பட்டுள்ளது. கடந்த காலங் களைப்போலவே எமது போராட்டங்கள் ஒருபுறம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்க இந்த திட்டமிட்ட ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் எந்தவித பாதிப்பும் இன்றி தொடர்ந்து நடை பெற்றுக் கொண்டிருக்கின்றன.

இவ்வாறு தொடர்ந்து நடைபெறும் வகையில் நாம் விட்டுக் கொடுத்துக் கொண்டிருக்க முடியாது. ஏனென்றால், எந்த சிங்களக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் எமது தாயகத்தை ஆக்கிரமித்து பௌத்த சிங்கள மயமாக்கும் அவர்களின் திட்டம் தொடர்ந்து கொண்டு தான் இருக்கப்போகின்றது.

### ஒரு கட்சி மலைப் பாம்பு மற்றைய கட்சி விஷப்பாம்பு

மாறி மாறி ஆட்சிக்கு வரும் இரு பிரதான கட்சிகளுமே தமிழ் மக்களின் இருப்பை அழிக்கும் செயற்பாடுகளில் ஏட்டிக்குப் போட்டியாகவே செயற்பட்டு வந்திருக்கின்றமை வரலாறு. ஒரு கட்சி மலைப்பாம்பு என்றால், மற்றைய கட்சி விஷப்பாம்பு என்பதே யதார்த்தம். ஒன்று விழுங்கும், மற்றையது நின்று கொல்லும்.

கடந்த 5 வருடங்களில் நல்லாட்சி என்ற முகமூடி அணிந்த இந்த இரண்டு பாம்புகளும் ஒன்று சேர்ந்த ஆட்சியில் தான் ஆயிரக்கணக்கான எமது நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. வடக்கில் ஒரு சில இடங்களில் இராணுவத்தை பொதுமக்களின் காணிகளில் இருந்து வெளியேற்றிவிட்டு ஆயிரக்கணக்கான எமது காணிகள் கபளீகரம் செய்யப்பட்டு வருகின்றன.

### அபிவிருத்தி என்ற போர்வையில் சிங்களக் குடியேற்றங்கள்

கடந்த சில வருடங்களில் மகாவலித் திட்டம் மூலம்வவுனியா, முல்லைத்தீவு மற்றும் ஏனைய பகுதிகளில் அபிவிருத்தி என்ற போர்வையில் நில அபகரிப்பும் சிங்கள குடியேற்றத் திட்டங்களும் முனைப்படைந்து வந்திருக்கின்றன. அதேவேளை, வன இலாகா திணைக்களம் மற்றும்தொல்லியல்திணைக்களம் போன்றவை திட்டமிட்ட குடியேற்றங்களுக்கும் நில அபகரிப்புக்களுக்கும் துணைபோகும் வகையில் செயற்பட்டு வந்துள்ளன. பௌத்தர்கள் இல்லாத இடங்களில் பௌத்த விகாரைகள் தொடர்ந்து அமைக்கப்பட்டு வருகின்றன. பொதுமக்களின் காணிகளை அபகரித்து அவற்றில் இராணுவம் வியாபாரம் மற்றும் விவசாயம் ஆகியவற்றில் ஈடுபடுவது தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு தான் இருக்கின்றன. கடல் பிரதேசங்களில் கடற்படையினரின் ஆக்கிரமிப்புக்கள் நடைபெற்று வருகின்றன. உள்ளூர் மீனவர்களின் மீனவ வாழ்க்கை பாதிப்புக்குள்ளாகி வருகின்றது.

முல்லைத்தீவு மாவட்ட செயலக 2019 ஆம் ஆண்டு புள்ளிவிபரங்களின்படி, முல்லைத்தீவு மாவட்டத்தில் 679 ஏக்கர் தனியார் காணிகளும் 3178 ஏக்கர் அரச காணிகளும் படையினர் வசம் உள்ளன. ஆனால் மேலதிகமாக பல ஆயிரக்கணக்கான ஏக்கர் காணிகளை இராணுவம் தனது முகாம்களுக்காகவும் குடியிருப்புக்களுக்காகவும் கைவசப்படுத்தி வைத்திருக்கிறது என்று அறிய முடிகின்றது. இவை கணக்கில் சேர்க்கப்படவில்லை. உதாரணத்திற்கு திருமுறிகண்டி கோவிலின் முன்னிருக்கும் A-9 வீதியின் அடுத்த பக்கத்தில் 1702 ஏக்கர் காணி இராணுவத்தினரிடம் இருந்து வருகின்றது. அதுபற்றி கணக்கில்லை.

2017 ஆம் ஆண்டு "அடையாளம்" ஆய்வு நிலையம் மேற்கொண்ட ஒரு ஆய்வில் 30,000 ஏக்கர் காணி மட்டில் இராணுவத்தினால் முல்லைத்தீவில் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கின்றது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் முல்லைத் தீவில் வன இலாகா, தொல்பொருள் ஆராய்ச்சி திணைக்களம், மகாவலி மற்றும் இராணுவம் ஆகியவற்றினால் மொத்தமாக கைவசப்படுத்தப்பட்டுள்ள நில அளவு 80,000 ஏக்கருக்கும் மேல் என்று சொல்லப்படுகின்றது. அவர்கள் கைவசம் இருக்கும் பல இடங்கள் பற்றி தரவுகள் பெற படையினர் எதிர்ப்புத் தெரிவித்தும் பயமுறுத்தியும் வருகின்றனர். ஒரு பௌத்தர் கூட நிரந்தரமாக வாழாத வட்டு வாகலில் பழம்பெரும் ஆலயமான சப்த கன்னிமார் ஆலய வளாகத்தை இராணுவம் இன்று அபகரித்து பௌத்த விகாரை ஒன்றை அமைத்துள்ளது.

அடுத்த உத்தியோகபூர்வ புள்ளிவிபரங்களின்படி மன்னார் மாவட்டத்தில் 12,154 ஏக்கர் காணியை வன விலங்குகள் திணைக்களமும் 12,275 ஏக்கர் காணிகளை வன இலாகாவும் கைவசப்படுத்தியுள்ளன. இவை தவிர இராணுவம் மற்றும் தொல்பொருள் ஆராய்ச்சி திணைக்களம் ஆகியனவும் ஆயிரக்கணக்கான ஏக்கர் காணிகளைத் தம்வசம் வைத்துள்ளன.

### காணி கபளீகரம் தொடர்கிறது

முல்லைத்தீவு மற்றும் திருகோணமலை ஆகிய தமிழ் மாவட்டங்களை நில ரீதியாக இணைக்கும் மணலாறு மற்றும் வவுனியா வடக்கு ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் குடியேற்றத்திட்டங்கள் மூலம் மிக விரைவில் எமது வடக்கு, கிழக்கு தாயக கோட்பாடு உடைத்தெறியப்படும்நிலைமை ஏற்பட்டுள்ளது.

இது நடைபெற வசதியளித்த ஒரேயொரு காரணம் என்ன? மகாவலித்திட்டம்! வடக்கு, கிழக்குக்குத் தண்ணீர் தரப்போகின்றோம் என்று ஆசைகாட்டி ஒரு சொட்டு மகாவலித் தண்ணீரை இதுவரை தராமலே எமது காணிகளைக் கபளீகரம் செய்து வருகின்றனர். உண்மையில் மகாவலி நீர் வடக்கிற்கு வராது என்பதே தலைமை பெற்ற எமது எந்திரிகளின் கருத்து. பாரிய மரக்குதிரையை பரிசாகத் தந்து கிரேக்க போர் வீரர்கள் ட்ரோய் நகரத்தினுள் உள்நுழைந்து விட்டனர்! இப்பொழுதுதான் எம்முள் சிலர் விழித்துக் கொண்டுள்ளனர்.



சவால்களை இனிச் சமாளிக்க வேண்டி வரும் என்று "புதிய" கருத்துக்களை ஓட்டப் பந்தயத்திடல்களில் இருந்து கூறி ஒப்பாரி வைக்கின்றனர். 2016 இல் தீர்வு வரும், 2017 இல் தீர்வு வரும், 2018 இல் தீர்வு வரும் என்று கூறிய போது வராது என்றோம். எம்மை அரசியல் ரீதியாக அன்று தாக்கியவர்களுக்கு இன்று ஓட்டப்பந்தயத் திடல்களில் திடீர் ஒளியேற்றம் கிடைத்துள்ளது. இப்பொழுது தான் சவால்கள் திடீரென அவர்கள் கண்களுக்குப் புலப்படத் தொடங்கியுள்ளன.

எமது இனம் இன்று மட்டுமல்ல கடந்த 10 வருடங்களாக மிகவும் இக்கட்டான ஒரு நிலையில் நின்று கொண்டிருக்கின்றது. கடந்த 30 வருடகால யுத்தத்தில் இழந்தவற்றை விடவும் எமது இருப்புக்கான அடிப்படைகளை வேகமாக நாம் இந்த பத்து வருடகாலத்தில் இழந்து கொண்டிருக்கின்றோம். எமது அரசியல், சமூக, பொருளாதார அபிலாஷைகளுக்கான அடித்தளங்கள் திட்டமிட்ட வகையில் சிதைக்கப்பட்டு வருகின்றன. நிலைமை கட்டுமீறி செல்வதற்கு முன்னர் நாம் சுதாகரித்துக் கொள்ள வேண்டும். மாற்று நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும்.

மறைந்த பொருளியலாளர் வரதராஜன் மேற்கொண்ட ஒரு ஆய்வின்படி 1901 -2012 ஆம் (2012 இற்கு பின்னர் குடித்தொகை மதிப்பீடு செய்யப்படவில்லை) ஆண்டுகளுக்கு இடையிலான கிழக்கு மாகாண சனத்தொகை மதிப்பீட்டை ஆய்வு செய்கின்ற போது அதன் மொத்த சனத்தொகை 6 மடங்காக அதிகரித்துள்ளது (96,926 to 617, 295) என்று காணப்பட்டுள்ளது. ஒப்பீட்டளவில் சிங்கள மக்களின் சனத்தொகை 41 மடங்கினால் அதிகரித்துள்ளது (8,778 to 359,136). இது கிழக்கு மாகாண குடித்தொகை பரம்பலில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது. 1901 ஆம் ஆண்டு 55.8 சதவீதமாக இருந்த தமிழ் மக்களின் சனத்தொகை 2012 ஆம் ஆண்டு 39.7 சதவீதமாக வீழ்ச்சி அடைந்துள்ளது. அதேவேளை, சிங்கள மக்களின் எண்ணிக்கை 1901 இல் 5.1 சதவீதமாக இருந்து 23.2 சதவீதமாக இன்று அதிகரித்துள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில், 1827 ஆம் ஆண்டு குடிசன மதிப்பீட்டின்படி 18,000 இற்கும் அதிகமான தமிழ் மக்களும் 250 சிங்கள மக்களும் வாழ்ந்துள்ளனர். 1827- 1921 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சிங்கள மக்களின் எண்ணிக்கை மொத்த சனத்தொகையில் 5 சதவீதத்தைக் கூடத் தாண்டவில்லை. 1911 ஆம் ஆண்டு குடிசன மதிப்பீட்டு தகவல்களின்படி, திருகோணமலையின் கட்டுக்குளம் மேற்கு பிரிவின் சில உட்புற கண்டிய கிராமங்களிலேயே சிங்களவர்கள் பெரும்பான்மையாக இருந்துள்ளனர். அவர்களின் எண்ணிக்கை 197 ஆகவே இருந்தது.

திருகோணமலையின் ஏனைய பிரிவுகளான தம்பலகாமம், திருகோணமலை நகரம் மற்றும் கொட்டியார் பற்று ஆகிய இடங்களில் 1911 ஆம் ஆண்டில் 98 சதவீதம் ( 23, 000 இற்கும் அதிகம்) தமிழ் பேசும் மக்கள் இருந்துள்ளனர். தம்பலகாமம் பற்று பிரிவில் முஸ்லிம்கள் அதிகளவில் இருந்துள்ளனர்.

இதன்மூலம், திருகோணமலையின் கட்டுகுளம் மேற்கு பிரிவு தவிர, ஏனைய இடங்கள் 19 ஆம் மற்றும் 20 ஆம் நூற்றாண்டுகளின் ஆரம்பத்தில் ஏறத்தாழ முழுமையாக தமிழ் பேசும் மக்களின் இடங்களாகவே இருந்துள்ளன. ஆனால், 1948 ஆம் ஆண்டின் பின்னர் அரசாங்கம் மேற்கொண்ட மூன்று பிரதான நீர்ப்பாசன திட்டங்கள் மூலம் (கந்தளாய் குளம்- 1948, அல்ல குளம்-1953, பதவியா குளம் -1958) சிங்கள மக்கள் கொண்டுவரப்பட்டு இந்த குடிசன பரம்பலில் பாரிய மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

சுமார் 50,000 இற்கும் அதிகமான தமிழ் மக்களின் பூர்வீக நிலங்கள் இந்த நீர்ப்பாசன திட்டங்கள் மூலம் அவற்றின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டு சிங்கள மக்கள் பெரும்பான்மையாக குடியமர்த்தப்பட்டுள்ளனர். பின்னர் 1961 இல் இல் மொற/வெவ (தமிழில் முதலிக் குளம்) என்ற நீர்ப்பாசனத் திட்டத்தின் மூலம் திருகோணமலை நகரத்துக்கு மேற்காக 24 கிலோ மீற்றர்கள் தொலைவில் மொற/வெவ குடியேற்றத் திட்டம் அமைக்கப்பட்டு வேறு இடங்களில் இருந்து சிங்கள மக்கள் கொண்டு வரப்பட்டு குடியமர்த்தப்பட்டனர். இது பின்னர் தனியான பிரதேச செயலகமாக பிரிக்கப்பட்டது. 2012 ஆம் ஆண்டின் குடிசன மதிப்பீட்டின்படி மொற/வெவ பிரதேச செயலர் பிரிவில் 72.3 சதவீதமானோர் சிங்களவர்கள். இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் திருகோணமலையின் குடிசன பரம்பலில் பெருந் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

1901-2012 காலப்பகுதியில், திருகோணமலையில் தமிழ் மக்களின் எண்ணிக்கை 17,069 இல் இருந்து 122,080 ஆக அதிகரித்த அதேவேளை, சிங்கள மக்களின் எண்ணிக்கை 1203 இல் இருந்து 101,991 ஆக அதிகரித்தது. இது தமிழ் மக்களை பொறுத்த வரையில் 7.15 மடங்கு அதிகரிப்பாகவும் சிங்கள மக்களைப் பொறுத்தவரையில் 84.78 மடங்கு அதிகரிப்புமாகும்.

இதன் காரணமாக 1901 ஆம் ஆண்டு மொத்த சனத்தொகையின் கிட்டத்தட்ட 60 சதவீதமாக இருந்த தமிழ் மக்களின் சனத்தொகை 2012 இல் 32. 8 சதவீதமாக வீழ்ச்சி அடைந்திருக்கிறது. அதேவேளை, சிங்கள மக்களின் எண்ணிக்கை இதே காலப்பகுதியில் 4.2 சதவீதத்தில் இருந்து 27 சதவீதமாகவும் முஸ்லிம் மக்களின் எண்ணிக்கை 29 சதவீதத்தில் இருந்து 40 சதவீதமாகவும் அதிகரித்துள்ளது.

இந்த புள்ளிவிபரங்கள் தற்போதைய நிலைமைகளை விளக்க தரப்பட்ட தரவுகள். ஆனால் வடக்கு, கிழக்கில் முழுமையான ஆய்வின் பெறுபேறுகள் வெளியிடப்பட வேண்டும். பல வருடங்களுக்கு முன்னர் சிங்கள புத்திஜீவிகளும்முஸ்லிம் புத்திஜீவிகளும் மேற்கொண்ட ஆய்வுகளை இப்பொழுதாவது எமது புத்திஜீவிகள் பொறுப்பாக மேற்கொள்ள வேண்டும்.

சிங்களத் தலைவர்களும் முஸ்லிம் தலைவர்களும் ஒற்றுமையாகச் சிந்தித்துத் தமது மக்களின் நலனைப் பேண நடவடிக்கைகள் எடுத்து வந்துள்ளனர். அவர்கள் தமது புத்திஜீவிகளின் முடிவுகளை ஆராய்ந்து வேண்டுவனவற்றை நடைமுறைப்படுத்தி தமது இன நலன்களை மேம்படுத்தி வந்துள்ளனர்.

### முட்டையில் மயிர் பிடுங்கும் தமிழ்த் தலைவர்கள்

கேவலம் கல்விக்குப் பெயர்போன எமது தமிழ்த் தலைவர்கள் முட்டையில் மயிர் பிடுங்கிக் கொண்டு காலந்தள்ளி வந்துள்ளனர். எமது அரசியல்வாதிகளின் இன்றைய பேச்சுக்களைப் பார்த்தால் அழுவதா? சிரிப்பதா? என்று தெரியவில்லை. எமது நிலங்கள் பறிபோகின்றன. இளைஞர்கள் வெளிநாடு நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றார்கள். எமது மக்கள் தொகை வெகுவாகக் குறைந்து வருகின்றது. இங்கிருப்பவர்கள் வாள் வீச்சிலும் வலிமைமிக்க போதைப்பொருள்களிலும் நாட்டம் காட்டி வருகின்றார்கள். நாங்கள் யதார்த்தத்தை மறந்து விட்டு முட்டாள்தனமான விவாதங்களில் ஈடுபட்டு வருகின்றோம்.

### மகாவலி எமக்கு வேண்டாம்

அறிவுள்ள திறமையுள்ள எம் தமிழ் இனம் எங்கே? என்ன நடந்தது எமக்கு? எமக்கு ஏற்பட இருக்கும் ஆபத்துக்களைப் புரிந்து கொண்டு தான் இவை குறித்து கவலை கொள்ளும் தமிழ் அரசியல் கட்சிகள் யாவும் ஓரணியில் சேர்ந்து செயற்படவேண்டியதன் அவசியத்தை அண்மைக்காலமாக நான் வலியுறுத்தி வருகின்றேன். ஆனால் எம்மவர்கள் கட்சி நலம் பற்றியும் தமது சொந்த நலன்கள் பற்றியும் சிந்திக்கும் அளவுக்கு மக்கள் நலனில் கவலை கொள்வதாகத் தெரியவில்லை. இனியாவது எமது தமிழ் மக்களின் பிரதிநிதிகள் மிகவும் நேர்மையாகவும் விசுவாசமாகவும் தமிழ்ப் பற்றுடனும் இனப் பற்றுடனும்செயற்பட முன்வர வேண்டும். சலுகைகளுக்கு அடிபணியாத நேர்மையான தமிழ் மக்கள் பிரதிநிதிகள் உருவாக வேண்டும். நாம் ஒன்று சேர்ந்து மகாவலித்திட்டம் எமக்கு வேண்டாம் என்று கூறும் காலம் வெகு தொலைவில் இல்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# தமிழ் மக்கள் கோரிக்கைகளை முன்வைக்கும் போது மாத்திரம் இனச்சாயம் பூசுவது நியாயமில்லை

## கல்முனை போராட்டம் குறித்து அமைச்சர் மனோ



(கொழும்பு)

கல்முனை வடக்கு பிரதேச செயலக பிரச்சினை இன்று தமிழ்-முஸ்லிம் ஐக்கியத்தின் மையப்புள்ளியாக மாறியுள்ளது. எனவே கல்முனை வடக்கு உப-பிரதேச செயலகத்தை, முழுமையான பிரதேச செயலகமாக தரமுயர்த்தும் நீண்டகால கோரிக்கைக்கு உடன்பட்டு முஸ்லிம் அரசியல் கட்சிகள், அரசியல்வாதிகள், மக்கள் பிரதிநிதிகள் தமிழ்-முஸ்லிம் ஐக்கியத்தை உறுதிப்படுத்த வேண்டும். கல்முனை வடக்கு பிரதேசம், சாய்ந்தமருது பிரதேசம், கல்முனை தெற்கு பிரதேசம் ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கியதுதான் கல்முனை மாநகரசபையாக இருக்கின்றது. இதில் சாய்ந்தமருது, கல்முனை தெற்கு ஆகிய பிரதேசங்களில் முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக இருக்கும் போது, கல்முனை வடக்கு பிரதேசத்தில் தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழ்கிறார்கள்.

இந்நிலையில் சாய்ந்தமருது பிரதேசம், ஏற்கனவே தனியொரு பிரதேச செயலகமாக மாற்றப்பட்டு, இன்று சாய்ந்தமருது பள்ளிவாசல் தலைவர்கள் தலைமையில் அங்கு வாழும் முஸ்லிம் மக்கள், தமது பிரதேச செயலக பிரதேசத்தை, கல்முனை மாநகரசபைக்கு முற்றிலும் வெளியே பிரித்தெடுத்து முழுமையான நகரசபையாக்கும்படி போராடுகிறார்கள். அது போல் கல்முனை வடக்கு தமிழ் சமூக தலைவர்கள் தமது உப பிரதேச செயலகத்தை, முழுமையான பிரதேச செயலகமாக தரமுயர்த்தக்கோரி கடந்த பல்லாண்டுகளாக போராடுகிறார்கள். ஒரே இனத்தைச் சேர்ந்த முஸ்லிம் மக்கள், கல்முனை மாநகர சபையில் இருந்து முற்றாக பிரிந்து தனி நகர சபை வேண்டும் என போராடும் போது, சகோதர இனத்தை சார்ந்த தமிழ் மக்கள், தமது உப பிரதேச செயலகம், முழுமையான பிரதேச செயலகமாக தரமுயர வேண்டும் என போராடுவதில் என்ன தவறு இருக்கின்றது என இந்த கல்முனை வடக்கு தமிழர்களின் போராட்டத்தை எதிர்க்கும் அரசியல்வாதிகள் நாட்டுக்கும், அரசாங்கத்துக்கும் தர்க்கரீதியாக எடுத்துக்கூற வேண்டும் என தேசிய ஒருமைப்பாடு, அரச கரும மொழிகள், சமூக மேம் பாடு, இந்து சமய விவகார அமைச்சர் மனோ கணேசன் கேள்வியெழுப்பினார்.

இந்த விடயம் தொடர்பில் நேற்று முன்தினம் இரவு தேசிய பாதுகாப்பு சபையிலும், நாம் கருத்துக்களை பரிமாறிக் கொண்டோம். அம்பாறையில் கல்முனை வடக்கு உப-பிரதேச செயலகத்தை, முழுமையான பிரதேச செயலகமாக தரமுயர்த்தக் கோரி உண்ணாவிரத சாத்வீக போராட்டத்தில் ஈடுபட்டுள்ள போராளிகள், தேரர், சுவாமிகள் மற்றும் ஏனையோர் என்னுடன் தொலைபேசியில் நேற்று முன்தினம் பிற்பகல் உரையாடினர். அத்துடன் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த மக்கள் என்னைச் சந்தித்து இதுபற்றி தீர்க்கமாக உரையாடினர்.

இப்பிரச்சினை தொடர்பில், துறைசார் அமைச்சர் வஜிர அபேவர்த்தனவுடனும், நான் தேசிய ஒருமைப்பாட்டு துறைசார் அமைச்சர் என்ற முறையில் கலந்தாலோசித்துள்ளேன். அம்பாறை மாவட்ட அமைச்சரவை அமைச்சர் தயா கமகேயும், நானும் இதுபற்றி பேசியுள்ளோம். இதை இனியும் தொடர்ந்து நீடிக்க விடுவது நாட்டின் தேசிய ஒருமைப்பாட்டுக்கு குந்தகமாக அமைந்துவிடும் என இவர்களுக்குத் தெரிவித்தேன்.

இன, மத அடிப்படைகளில் கல்வி வலய, பிரதேச செயலக, உள்ளூராட்சி மன்ற எல்லைகளை நிர்ணயிப்பது தொடர்பில் மாறுபட்ட கருத்துகள் இருந்தாலும் இன்று வடக்கு-கிழக்கு மாகாணங்களின் பல்வேறு மாவட்டங்களில், இன அடிப்படையிலான பிரதேச செயலகங்கள், கல்வி வலயங்கள், நிலத் தொடர்பற்றும், நிலத்தொடர்புடனும் நடைமுறையில் இருக்கின்றன.


எனவே கல்முனை வடக்கு தமிழ் மக்கள், தமது உப-பிரதேச செயலகத்தை முழுமையான பிரதேச செயலகமாக தரமுயர்த்தக் கோருவதில் மாத்திரம் என்ன தவறு இருக்கிறது என எனக்கு விளங்கவில்லை.

அத்துடன் ஏற்கனவே இயங்கி வரும் ஒரு உப-பிரதேச செயலகத்தையே, முழு-பிரதேச செயலகமாக தரமுயர்த்தும்படி இக்கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இது பிழை என்றால், கிழக்கில் இருக்கும் எத்தனையோ இனரீதியான பிரதேச செயலகங்களை, கல்வி வலயங்களை கலைக்க வேண்டும். தமிழ் மக்கள் தமது கோரிக்கைகளை முன்வைக்கும் போது மாத்திரம், அதற்கு இன, மதச்சாயம் பூசுவதில் என்ன நியாயம் இருக்கிறது? இன்று தமிழ் பேசும் தமிழ், முஸ்லிம் இனத்தவர் மத்தியில் கிழக்கில் இந்தப் பிரச்சினை மெல்ல, மெல்ல பூதாகரமாகி கொண்டு வருகிறது. இதைப் பார்க்காமல், கேட் காமல், ஆராயாமல் இருப்பது பொறுப்பற்றமையாகும்.

மேலும் இனங்களிடையே சச்சரவு புள்ளிகளை அடையாளம் கண்டு நிவர்த்திக்கும், தேசிய ஒருமைப்பாடும், ஏனைய பொறுப்புக்களுக்கு மத்தியில், ஒரு பொறுப்பாக எனக்கு இருக்கிறது என்பதையும் நான் மனதில் கொண்டுள்ளேன். இந்தப் பிரச்சினையால் கிழக்கு மாகாணத்தில் தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியில் இன நல்லுறவு சீர்கெடுவதை இனியும் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்க முடியாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பதை மகிந்த விரைவில் அறிவிப்பார்-சி.பி.



(கொழும்பு)

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பதை எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷ வெகுவிரைவில் அறிவிப்பார் என பாராளுமன்ற உறுப்பினர் சி. பி.ரத்நாயக்க தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவிற்கும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையிலான பரந்துபட்ட கூட்டணி வெற்றிப் பெறுமா?, தோல்வியடையுமா? என்பது எதிர்பார்க்கப்படுகின்றது. பரந்துபட்ட கூட்டணி வெற்றி பெற்றதும் உத்தேசிக்கப்பட்ட ஜனாதிபதி தேர்தலில் இந்நாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதி வேட்பாளர் என்றும், அதனைத் தொடர்ந்து அமைக்கவுள்ள அரசாங்கத்தில் எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷ பிரதமர் என்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜெயசேகர குறிப்பிட்டுள்ளமை அவரது தனிப்பட்ட தீர்மானமாகும்.

எவரது தலைமைத்துவத்திலான அரசாங்கம் உருவாக வேண்டும் என்பதை பெரும்பாலான மக்கள் தீர்மானித்து விட்டார்கள். அரசாங்கம் ஏதாவது ஒரு தேர்தலை நடத்தினால் மக்களின் தீர்மானம் நிரூபிக்கப்படும். பொதுஜன பெரமுனவால் தனித்துத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற முடியாது என்ற கருத்தை திருத்திக் கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# குறை'களை' பதிகம் 47

## நல்லிணக்கபுரத்து குப்பை; யாரறிவாரோ பராபரமே!



புனித பூமியாம்
கீரிமலைச் சிவனருகே
மாருதப்புரவீக வல்லியாள்
குதிரை முகம் நீங்கிட
அல்லும் பகலும் தடம்பறித்த
மாவிட்டபுரத்துக் கந்தன்
மாஞ்சோலைப் பதியருகே
சீமெந்துப் (f)பக்ரறிக்காய்
தோண்டிக் கல் அகழ
தோன்றிய பெரும் குழியில்
மண் நிறைத்து வீடுகட்டி
நல்லிணக்கபுரம் எனும்
நல்லபெயர் சூட்டி வைத்து
இடம்பெயர்ந்து அல்லலுற்ற உறவுகளைக்
குடியேற்றம் செய்து வைத்தார்

என்ன செய்ய...
எச்சமாய் மிச்சமாய் கிடந்த
குழி மறைக்க கொட்டப்படும் குப்பைகளால்
தொற்றுநோய்க்குட்பட்டு
துவண்டு கிடக்கிறது பாவி இனமொன்று

வலி.வடக்கில் சேர்ந்திடும்
அத்தனை குப்பைகளும் அங்குதான்

மலக்கழிவும் மாமிசக் கழிவும்
வைத்தியசாலைக் கழிவுகளும்
கொட்டோ கொட்டென்று கொட்டுகிறார்
இங்கு மக்கள் வாழும்
இடமென்பதை ஏனோ மறந்துவிட்டார்

ஏற்கமுடியாத நாற்றம் கண்டு
மூக்கைப் பொத்திச் செல்வோம் நாம்
ஆனால் முன்னூறு நாட்களும்- அந்த
நாற்ற நரகத்தில் வாழ்வென்றால்...

ஐயகோ இறைவா!
என் செய்ய ஏது செய்ய
மதத்தால் மனித குலத்தால்
பிரிந்து கிடந்து
எரிக்கும் சுடலைக்கும்
கைகூப்பித் தொழும் கடவுள் சந்நிதிக்கும்
சண்டைபிடிக்கும் இந்த இனமா
ஈழம் கேட்டுப் போராடியது...

சீ...சீ...
வெட்கம் வேதனை அவமானம்...

வலி.வடக்குப் பிரதேச சபை
கௌரவ தவிசாளரே, உறுப்பினர்களே
மக்கள் நலன் காக்க அவர் வரிப்பணத்தில்
ஊதியம் பெற்று சேவை செய்யும் அதிகாரிகளே
கொஞ்சம் நல்லிணக்கபுரத்தை எட்டிப்பாரும்
மூன்று நிமிடம் மூக்கைப் பொத்தாது
நிற்க முடியா இடத்தில்
வாழும் மக்கள் குறை தீரும்
அப்போதுதான் கடவுள் உமக்கு
கருணை காட்டுவான் இது சத்தியம்

மாவை நா. கஜேந்திரன்

**அன்பு வாசகர்களே!**
இப்பகுதியில் வெளிவரும் குறை 'களை' பதிகத்திற்கு நீங்களும் உங்கள் பகுதிகளில் உள்ள குறைகளை பதிகமாக எழுதி ஆசிரியர், குறை 'களை' பதிகம், வலம்புரி, இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம். (ஆ-ர்)

# கட்சியில் உள்ள குழப்பவாதிகளை புறந்தள்ளி

# மக்களுக்காக தமிழ்க்கட்சிகள் ஒன்றுபட வேண்டும்

## செல்வம் எம்.பி. கோரிக்கை

(வவுனியா)

**எல்லா கட்சிகளுக்குள்ளும் ஒரு சிலர் குழப்பவாதிகளாக இருப்பார்கள். அதைவிடுத்து எமது மக்களின் விடுதலையை வென்றெடுப்பதற்காக அனைத்து தமிழ் கட்சிகளும் ஒன்றுபட வேண்டும் என குழுக்களின் பிரதித் தலைவரும், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கல நாதன் தெரிவித்துள்ளார்.**

ஊடகவியலாளர் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு நேற்று பதில் அளிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,எமக்குள் ஒற்றுமை இல்லையெனில், சிங்கள பெரும்பான்மை கட்சிகள் எமது பிரதேசத்தில் வலுவாக கால் ஊன்றுவதற்கான செயற்பாட்டை நாங்கள் செய்திருக்கின்றோம் என்றே எண்ண வேண்டும். தற்போது இருக்கின்ற நிலையில் தமிழ் தரப்புக்கள் ஒற்றுமையாக செயற்பாடாது விடின் வடக்கு, கிழக்கு சிங்கள பெரும்பான்மை கட்சிகளிடம் கைமாறும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

தீவிரவாத தாக் குதல் மற்றும் புத்த பிக்குகளின் செயற்பாட்டால் எங்களது பிரச்சினைகளை தீர்ப்பதற்கான வாய்ப்புக்கள் குறைவடைந்துள்ளன. எங்களுடைய வரலாறுகள், அதற்கான விலைகள் பலவற்றை நாம் கொடுத்துள்ளோம்.

அந்தவகையில், மக்களுக்காக செயற்படுகின்றோம் என்று கூறுகின்ற அத்தனை கட்சிகளும் ஒற்றுமை என்ற விடயத்தை மனதார ஏற்றுக் கொள்ள வேண்டும். ஒற்றுமை ஏற்படாத நிலையில் எங்களுடைய தேசிய பிரச்சினை, எங்களுடைய இனப் பரம்பல், எங்களுடைய வரலாறு எல்லாம் அழிகின்ற ஒரு அபாயத்தை நோக்கிச் செல்லும். ஹக்கீம் கட்சியில் இருந்து தான் றிசாத் சென்றார். இரு கட்சிகளாக அவர்கள் பிரிந்து செயற்பட்டார்கள். தற்போது ஒற்றுமையாக மாறியிருக்கிறார்கள். இது முஸ்லிம் சமூகம் மத்தியில் வரவேற்பை பெற்றுள்ளது.

எமது தமிழ் சமூகமும் ஒற்றுமைபட வேண்டும். இப்பொழுதும் மாறி மாறி சேறுகளை பூசுகின்ற, எங்களுக்குள் முரண்பாடான கருத்துக்களை சொல்லிக் கொண்டிருக்கின்ற நிலை காணப்படுகின்றது.

சரி, பிழை என்பது வேறு. எல்லா கட்சிகளுக்குள்ளும் ஒரு சிலர் குழப்பவாதிகளாக இருப்பார்கள். அதைவிடுத்து எமது மக்களின் விடுதலையை வென்றெடுப்பதற்காக ஒன்று பட வேண்டும். ஒற்றுமைப்படுகின்ற காலகட்டம் தற்போது இருக்கிறது. ஆகவே ஒற்றுமைப்பட வேண்டும். அப்படி செய்யவில்லை எனில் நாம் மக்களின் குரல்களாக இருக்கின்றோம் என்று கூறிக் கொண்டு ஏமாற்றுகின்றோம் என்பது தான் உண்மை என மேலும் தெரிவித்தார். (9)




## கிளி.சமுர்த்தி உத்தியோகத்தர்கள் கண்டன ஆர்ப்பாட்டம்





(பரந்தன்)

சமுர்த்தி உத்தியோகத்தர்கள் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்றை நேற்று கிளிநொச்சியில் முன்னெடுத்தனர். அடிப்படைத்தகுதியுள்ள பணியிலிருக்கும் எங்களை அந்த தகுதியே கோரப்படாத பதவியிலிருப்பவர்கள் தகுதியில்லை என கூறுவது நியாயமா? என தெரிவித்து குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட சமுர்த்தி உத்தியோத்தர்கள் அகில இலங்கை சமுர்த்தி அபிவிருத்தி மற்றும் விவசாய ஆராய்ச்சி உதவி உத்தியோகத்தர் சங்கத்துடன் இணைந்து குறித்த கண்டன போராட்டத்தினை மேற்கொண்டிருந்தனர். கிளிநொச்சி பழைய கச்சேரிக்கு முன்பாக காலை 10 மணிக்கு ஆரம்பமான குறித்த போராட்டம் பின்னர் பேரணியாக மாவட்டச் செயல கம் வரை சென்றடைந்து அங்கு மாவட்ட அரச அதிபருக்கான மகஜர் மேலதிக மாவட்ட அரச அதிபர் எஸ். சத்தியசீலனிடம் கையளிக்கப்பட்டது.

புதிய சமுர்த்தி பயனாளிகளுக்கு சமுர்த்தி உரித்துச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வுகளில் பொது மக்கள் முன்னிலையில் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் மற்றும் கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் ஆகியோர் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தகுதியில்லாதவர்கள் எதிராகவே மேற்குறித்த கண்டன ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

அகில இலங்கை சமுர்த்தி அபிவிருத்தி மற்றும் விவசாய ஆராய்ச்சி உதவி உத்தியோகத்தர் சங்கத்தின் தலைவர் கித்சிறி கமகே, அதன் பொருளாளர், சிளிநொச்சி சமுர்த்தி சங்கத்தின் தலைவர் ஆகியோர் கருத்து தெரிவிக்கையில், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அனைவரும் நிறைவான தகுதியுடன் காணப்படுகின்றனர். அவர்கள் அனைவரும் தகுதி காண் காலம் நிறைவுற்று அதற்கான உறுதிப்படுத்தல் கடிதங்களை பெற்று வருகின்றனர். இந்த நிலையில் அவர்களை தகுதியில்லை எனக்கூறுவதனை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம்.

இந்த மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் மற்றும் இராஜாங்க அமைச்சர் விஜயகலா ஆகியோர் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மீது தங்களின் அரசியல் இருப்புக்கான பொய்யான கருத்துக்களை கூறுவதனை நிறுத்த வேண்டும், அவர்கள் ஒன்றை விளங்கிக் கொள்ள வேண்டும். இலங்கையில் உள்ள எல்லாப் பதவிகளுக்கும் அடிப்படைத் தகுதியுண்டு. அது நாட்டின் சட்டம். சாதாரண சிற்றூழியர்கள் கூட தரம் எட்டில் கல்வி கற்றிருக்க வேண்டும். ஆனால் அரசியல்வாதிகளுக்கு மட்டும் எந்த அடிப்படைக் கல்வித் தகுதியும் கேட்கப்படுவதில்லை. இலங்கையில் உள்ள 225 பாராளுமன்ற உறுப்பினர்களில் பலர் சாதாரண அடிப்படைத் கல்வித்தகுதியே இல்லாதவர்கள் என மேலும் தெரிவித்தார். (9-312)

## போதை ஒழிப்பு நடைபவனி





(வவுனியா)

வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தின் ஒழுங்குபடுத்தலின் கீழ் நேற்று புளியங்குளத்தில் போதை ஒழிப்பு நடைபவனி நடைபெற்றது.

வவுனியா வடக்கு பிரதேசத்தில் போதைப் பொருட்களின் பாவனை அதிகரித்து வருகின்றது. இதனால் சிறுவர்கள் முதல் முதியவர்கள் வரை போதைப் பொருட்களுக்கு அடிமையாகும் நிலை காணப்படுகின்றது.

இவற்கைக் கட்டுப்படுத்தும் வகையில் வடக்கு மாகாண ஆளுநர் செயலகமும், வவு னியா வடக்கு பிரதேச செயலகமும் இணைந்து ஏற்பாடு செய்த நடைபவனியில் போதை ஒழிப்பு தொடர்பான வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளைத் தாங்கியவாறு புளியங்குளம் மகா வித்தியாலய மாணவர்களும் வவுனியா வடக்கு பிரதேச செயலக உத்தியோகத்தர்களும் புளியங்குளம் வலயக்கல்வி பணிமனையிலிருந்து புளியங்குளம் மகாவித்தியாலயம் வரை விழிப்புணர்வு நடைபவனியில் ஈடுபட்டனர். (9)

## வவுனியாவில் 108 தேங்காய் உடைக்க திட்டம்

கல்முனை தமிழ் பிரதேச செயலகத்தினை தரமுயர்த்தக்கோரி நடத்தப்பட்டு வரும் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து வவுனியாவில் இன்று 108 தேங்காய் உடைக்கும் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. வவுனியா மாவட்ட இந்து ஆலயங்களின் ஒன்றியமும், பொது அமைப்புகளும் இணைந்து கல்முனையில் இடம்பெறும் போராட்டத்திற்கு ஆதரவாக இப் போராட்டத்தினை முன்னெடுக்கவுள்ளனர்.

வவுனியா கந்தசாமி கோவிலில் இன்று காலை 7.30 மணிக்கு இடம்பெறவுள்ள 108 தேங்காய் உடைக்கும் போராட்டத்தில் சமூக ஆர்வமுள்ள அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

## லங்கா சதொச கிளை முல்லையில் திறப்பு



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் இரண்டாவது லங்கா சதொச கிளை நேற்று புதுக்குடியிருப்பில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு பரந்தன் வீதியில் அமைக்கப்பட்டிருக்கின்ற இந்த லங்கா சதொச கட்டடத் திறப்பு விழா நிகழ்வு லங்கா சதொச நிறுவனத்தின் வடமாகாண முகாமையாளர் றஸ்மின் கலீல் தலைமையில் இடம்பெற்றது.

குறித்த நிறுவன செயற்றிட்ட முகாமையாளர் ரணசிங்க பண்டார மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் ம.பிரதீபன் ஆகியோர் இணைந்து திறந்து வைத்தனர். (9-281)

## வனஜீவராசிகள் திணைக்களத்திற்கு உத்தியோகத்தர்கள் பற்றாக்குறை

வனஜீவராசிகள் திணைக்களத்திற்கு உத்தியோகத்தர்கள் பற்றாக்குறை நிலவுவதாகவும் வடமாகாணத்திற்கு ஒரே ஒரு வைத்தியரே ஒரு நிரந்தர பாதுகாப்பு உத்தியோகத்தருடன் நான்கு தற்காலிக ஊழியர்களுடன் பணியாற்றுவதாகவும் கால்நடை வைத்திய அதிகாரி பா.கிரிதரன் தெரிவித்துள்ளார்.

தற்காலிக உத்தியோகத்தர்களை வைத்துக்கொண்டு ஆபத்தான வேலைகளை மேற்கொள்ள முடியாது. அவர்களுக்கு காப்புறுதி இல்லை. எனவே எமது திணைக்களத்திற்கு நிரந்தர உத்தியோகத்தர்கள் தேவைப்படுகின்றனர். காடுகளுக்குச் சென்று வைத்தியம் மேற்கொள்வது என்பது சிரமமானதுடன் மாடுகளுக்கு சிகிச்சையளிப்பது போன்றதல்ல சரியாக கவனமாகவும், எளிமையாகவும் மேற்கொள்ளவேண்டும்.

எனவே வடமாகாணத்திலிருந்தே உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படவேண்டும் என மேலும் தெரிவித்தார். (9)

## இரணைமடுக்குளத்தின் கீழான

# நெற்காணி இடாப்புக்களை புதுப்பிக்கும் வேலைத் திட்டங்கள் ஆரம்பம்

## விண்ணப்பப்படிவங்களை பெற்றுக் கொள்ளுமாறு கோரிக்கை

கிளிநொச்சி இரணை மடுக் குளத்தின்கீழான நெற்காணி இடாப்புக்களை புதுப்பிப்பதற்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் இது தொடர்பான விண்ணப்பப்படிவங்களை பெற்றுக் கொள்ளுமாறு கிளிநொச்சி கமநலசேவை நிலையத்தின் பெரும்பாக உத்தியோகத்தர் தெரிவித்தார்.

கிளிநொச்சி இரணை மடுக் குளத்தின் கீழுள்ள சுமார் 21 ஏக்கர் நிலப்பரப்புக்கான நெற்காணி இடாப்புக்கள் கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக சீரமைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றது.

அதாவது 1992ஆம் ஆண்டு காலப்பகுதியில் தயாரிக்கப்பட்ட நெற்காணி இடாப்பில் இன்று வரை பயன்பாட்டில் இருக்கின்றது. இதனால் விவசாயிகள் முதல் திணைக்களங்கள் முதல் பல் வேறு பிரச்சினைகள் காணப்படுகின்றன.

இந்த நெற்காணி இடாப்பினை புதுப்பிக்குமாறு கடந்த ஏழு வருடங்களாக கோரிவருகின்றபோதும் அரச நிர்வாகத்தில் காணப்படுகின்ற வெற்றிடங்கள் காரணமாக அவற்றை புனரமைப்பதில் சிக்கல் நிலை காணப்பட்டது.

தற்போது இதனைப் புனரமைப்பதற்கான வேலைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த பெரும்பாக உத்தியோத்தர். கிளிநொச்சி இரணை மடுக்குளத்தின் கீழுள்ள நெற்காணி இடாப்புக்களை மறு சீரமைப்பதற்கான வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நெற்காணி உரிமையாளர்கள் குத்தகையாளர்கள் இவற்றுக்கான காணி விண்ணப்பப்படிவங்களை கமநலசேவை நிலையத்தில் பெற்று பூரணப்படுத்தி காணி உரிமை ஆவணங்களுடன் எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்னர் கமநல சேவை நிலை யங்களில் சமர்ப்பிக்குமாறு தெரிவித்தார். (9-315)


## வவு-பழைய பேருந்து நிலையத்திலிருந்து திங்கள் முதல் மீண்டும் சேவைகள் ஆரம்பம்

வவுனியா பழைய பேருந்து நிலையத்தில் உள்ளூர் சேவைகளை நடத்துமாறு ஆளுநரால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வவுனியா கண்டி வீதியிலுள்ள விகாரையில் வர்த்தகர் சங்கப்பிரதிநிதிகள், தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம், இலங்கை போக்குவரத்து சபையினர், பிரதேச செயலாளர், நகர சபைத்தலைவர், பிரதேச சபைத்தலைவர், நகரசபை உறுப்பினர்கள், பொலிஸார், தேசிய போக்குவரத்து ஆணைக்குழு ஆகியவற்றின் பிரதிநிதிகளுடன் வடமாகாண ஆளுநர் சுரேன் ராகவன் நேற்று முன்தினம் மேற்கொண்ட கலந்துரையாடலின்போது இந்நடைமுறையை எதிர்வரும் 24 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் பின்பற்றுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வடமாகாண ஆளுநரினால் வவுனியா பழைய பேருந்து நிலையம் குறித்து ஆய்வறிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் வடமாகாண ஆளுநர் மேற் கொண்ட கலந்துரையாடலின் போது இம்முடிவு எட்டப்பட்டுள்ளதுடன் அனைத்துத்தரப்பினரும் இணைந்து இவ் உத்தரவை நடைமுறைப் படுத்துமாறும் ஆளுநரினால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு வருடங்களாக பழைய பேருந்து நிலையத்தில் சேவைகள் மேற் கொள்வதில் இழுபறி நிலையில் காணப்பட்டது. எதிர்வரும் திங்கட்கிழமை முதல் புதிய பேருந்து நிலையத்திற்குள் உள்ளூர் பேருந்து சேவைகள் மேற்கொள்ளும் பேருந்துகள் அனைத்தும் பழைய பேருந்து நிலையத்தில் தரித்து நின்று செல்வதற்கு குறித்த கலந்துரை யாடலின்போது இறுதி முடிவு எட்டப்பட்டு வடமாகாண ஆளுநரினால் இந்நடைமுறையை பின்பற்றுமாறும் அனைத்து தரப்பினரிடமும் உத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (9)



போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வு நடை பயணம் நேற்று முன்தினம் கிளிநொச்சியில் முன்னெடுக்கப்பட்டது. கரிதாஸ் நிறுவனத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற குறித்த நடைபயணம் கிளிநொச்சி மருதநகர் பகுதியில் ஆரம்பமாகி ஏ9 வீதி ஊடாக மாவட்ட செயலகம் வரை சென்று அங்கு மகஜரும் கையளிக்கப்பட்டது. கிராமங்களில் பயன்படுத்தப்படும் போதைப்பொருட்களை கட்டுப்படுத்த கோரியும், போதைப்பொருள் உற்பத்தி மற்றும் வியாபாரத்தினை கட்டுப்படுத்த கோரியும் குறித்த விழிப்புணர்வு பயணம் முன்னெடுக்கப்பட்டது. இதில் பொதுமக்கள் , மாணவர்கள் பலர் கலந்து கொண்டிருந்தனர். (படங்கள்-பரந்தன் செய்தியாளர்)

## காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்கச் செயலாளரிடம் விசாரணை

வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் செயலாளர் கோ.ராஜ்குமாரிடம் நேற்று வவுனியா பயங்கரவாத தடுப்பு விசாரணைப்பிரிவினர் போராட்டகளத்தில் அரைமணி நேரமாக விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இந்த விசாரணையில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளினால் காணாமல் ஆக்கப்பட்ட சங்கத்திற்கு உள்வாங்கிய இணைத்தலைமை குழுவிற்கு மூவரை நியமிக்கப்பட்டது தொடர்பாகவும், ஐரோப்பிய அமெரிக்கா கொடிகள் தொடர்பாகவும், கொழும்பில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகள் குறித்தும் கேட்டறிந்து கொண்டதாகவும் வவுனியாவில் செயற்படும் ஏனைய காணாமல் ஆக்கப்பட்ட சங்கத்தின் விபரங்களை கேட்டபோது அது குறித்து எதுவும் தெரியவில்லை என்று பதிலளித்துள்ளதாகவும் இந்நடவடிக்கை ஒரு அச்சுறுத்தல் விடுக்கும் நடவடிக்கையாகவும் அமைந்துள்ளதாக மேலும் தெரிவித்துள்ளார். (9)

## வவு.உள்ளூராட்சி உறுப்பினர்களுடன் வடக்கு ஆளுநர் கலந்துரையாடல்

வவுனியா மாவட்ட நகர மற்றும் பிரதேச சபைகளின் உறுப்பினர்களுக்கும் ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் வவுனியா நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது.

வவுனியா மாவட்டத்திலுள்ள நகர மற்றும் பிரதேச சபைகளின் தற்போதைய நிலைமைகள் , அவற்றினூடாக முன்னெடுத்துள்ள மக்கள் நல செயற்பாடுகள் மற்றும் அவற்றை மேற்கொள்ளும் போது முகம்கொடுக்கும் சவால்கள் , பிரச்சினைகள் குறித்தும் இந்த கலந்துரையாடலின் போது விரிவாக ஆராயப்பட்டது. (9)


## கடும் வரட்சி காரணமாக பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை முல்லைத்தீவில் அதிகரிப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வரட்சி காரணமாக இதுவரை மூன்று பிரதேச செயலக பிரிவுகளில் பதின் மூன்றாயிரத்து 889 குடும் பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு, கரைதுறைப்பற்று,துணுக்காய் ஆகிய பிரதேசங்களில் வரட்சியால் பாதிக்கப்பட்ட மக்களின் விபரங்கள் பதிவாகியுள்ளதுடன் வெலிஓயா, ஒட்டுசுட்டான்,மாந்தை கிழக்கு பிரதேசங்களில் விபரங்கள் திரட்டும் நடவடிக்கையில் அதி காரிகள் ஈடுபட்டுள்ளனர்.

அதன்படி புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் 1967 குடும்பங்களை சேர்ந்த 6296 பேரும், கரைதுறைப்பற்று பிரதேசத்தில் 10ஆயிரத்து 799 குடும்பங்களை சேர்ந்த 33ஆயிரத்து 797 மக்களும், துணுக்காய் பிரதேசத்தில் 1123 குடும்பங்களை சேர்ந்த 6 ஆயிரத்து 426 மக்களுமாக மொத்தமாக 13889 குடும்பங்களை சேர்ந்த 46519 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக பிரதேச செயலகங்கள் ஊடாக பதிவு கிடைக்கப்பெற்றுள்ளது.

குறித்த பிரதேசங்களில் குடிதண்ணீர் விநியோகம் இடம் பெற்று வருவதாகவும் வரட்சியின் காரணமாக விவசாயத்தை நம்பி வாழும் .குடும்பங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கால்நடைகளும் மேய்ச்சல் தரவைகள் இன்மையால் பாதிக்கப்படுவதாகவும் மேலும் தெரிவித்தார். (9-281)




## பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த உதவுமாறு ஆளுநரிடம் கோரிக்கை


(வவுனியா)

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை பெண் உறுப்பினர்கள் தமது பகுதிகளிலுள்ள வசதியற்ற பெண்களின் தரங்களை உயர்த்துவதற்கு வேலைத்திட்டங்களை மேம்படுத்தவும் பிரதேச சபையினால் ஒதுக்கப்படும் நிதி போதுமானதாக இல்லை எனவும் வட மாகாணத்தின் நிதி ஒதுக்கீட்டிலிருந்து மேலதிகமாக ஒதுக்கீடு செய்யுமாறு கோரும் கடிதம் ஒன்றை வடமாகாண ஆளுநரின் செயலாளரிடம் நேற்று முன்தினம் நகரசபை மண்ட பத்தில் வைத்து கையளித்துள்ளனர்.

கிராமத்திலுள்ள வசதியற்ற நிலையில் வசித்து வரும் பெண்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்துவதற்கு சுயதொழிலினை மேம்படுத்தவும் மேற்கொண்டு தமது சொந்தக்காலில் நிற்பதற்கு பிரதேச சபையினால் ஒதுக்கப்படும் நிதிகள் போதுமானதாக இல்லை. வடமாகாண நிதி ஒதுக்கீட்டிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யும்போது அவர்களுக்கான வேலைத்திட்டங்களை செய்ய முடியும். எதிர்காலத்தில் பெண்கள் தமது வாழ்வாதாரத்தினை உயர்த்திக்கொண்டு சமுதாயத்தில் தலை நிமிர்ந்து வாழ முடியும் என குறிப்பிட்டு மேற் குறித்த கடிதத்தை கையளித்துள்ளனர்.

கடிதத்தைப் பெற்றுக்கொண்ட ஆளுநரின் செயலாளர் இவ் விடயம் குறித்து பரிசீலனை செய்வதாகத் தெரிவித்தார்.

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை உறுப்பினர்கள் திருமதி அஞ்சலா கோகிலகுமார் தலைமையில் சென்ற பிரதேச சபை உறுப்பினர்கள் 7 பேர் இக் கோரிக்கையினை முன்வைத்திருந்தனர். (9)



முல்லைத்தீவு ஒட்டு சுட்டான் மேழிவனம் பகுதியில் வரட்சி மற்றும் தொழில் வாய்ப்பின்மையால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் தொடர்பில் வலம் புரிப் பத்திரிகையில் வெளியான செய்தியையடுத்து, நலன்விரும்பி ஒருவரால் உலர் உணவுப்பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட மேழிவனம்கிராமத்தில் வாழ்ந்து வரும் 35 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் தொழில் வாய்ப்புக்கள் இன்றியும் வரட்சியினாலும் பாதிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை இந்தப்பிரதேசத்தில் கூடுதலான சிறுவர்கள் போசாக்குக்குறைபாடு காணப்படுவதாகவும் கிராமமட்ட அமைப்புக்கள் சுட்டிக்காட்டியிருந்தன. இதுதொடர்பாக வலம்புரிப் பத்திரிகையில் வெளியான செய்தியையடுத்து நலன்விரும்பியொருவர் தனது துணைவியாரின் ஐந்தாம் ஆண்டு நினைவையொட்டி இந்தப்பிரதேசத்திலுள்ள 35 குடும்பங்களுக்கும் மாங்குளம் பிரதேசத்திலுள்ள ஏழு குடும்பங்களுக்கும் தலா ஒரு மாதகாலத்திற்கு உலர் உணவுப்பொருட்களை வழங்கி வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (9-315)

# பாரதம்

## இந்து சமுத்திரத்தை நோக்கி கவனத்தை திருப்பியுள்ள ஐ.எஸ்

### புலனாய்வு அமைப்பு எச்சரிக்கை

சிரியா ஈராக்கில் ஏற்பட்டுள்ள தோல்விகளை தொடர்ந்து ஐ.எஸ் அமைப்பு தனது கவனத்தை இந்து சமுத்திரத்தை நோக்கி திருப்பியுள்ளது. இதன் காரணமாக இந்தியா, இலங்கைக்கு ஆபத்துக்களை எதிர்கொள்ளவேண்டிய நிலையேற்படலாம் என இந்திய புலனாய்வு அமைப்பொன்று எச்சரிக்கை விடுத்துள்ளது.

கேரள பொலிஸாருக்கு இந்திய புலனாய்வு அமைப்பு அனுப்பியுள்ள மூன்று கடிதங்களில்இந்த ஆபத்து குறித்து சுட்டிக்காட்டியுள்ளது.

ஈராக் சிரியாவில் தனது கட்டுப்பாட்டின் கீழ் காணப்பட்ட நிலங்களை இழந்த பின்னர் தாங்கள் நாடுகளில் இருந்தபடியே வன்முறைகளில் ஈடுபடுமாறு ஐ.எஸ். அமைப்பு தனது உறுப்பினர்களுக்கு வேண்டுகோள் விடுத்து வருகின்றது என இந்திய புலனாய்வு அமைப்பு தனது கடிதத்தில் தெரிவித்துள்ளது.

கொச்சியில் வணிக வளாகங்கள் உட்பட முக்கியமான இடங்கள் இலக்குவைக்கப்படலாம் எனவும் இந்திய புலனாய்வு அமைப்பு தெரிவித்துள்ளது.

ஐ.எஸ். அமைப்பு இந்தியாவில் தனது இணைய நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளது. இது தாக்குதல் நடைபெறலாம் என்பதற்கான அறிகுறி எனவும் இந்திய புலனாய்வு அமைப்பு தெரிவித்துள்ளது. (7)

## மாலியில் ... 41 கிராம...

(பமாகோ)

மாலியில் உள்ள கங்காபானி மற்றும் யோரோ ஆகிய 2 கிராமங்களில் மர்மநபர்கள் நடத்திய கொலைவெறி தாக்குதலில் 41 பேர் கொலை செய்யப்பட்டனர்.

மேற்கு ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான மாலியில்வேட்டைக்காரர்களான டோகோன் இனத்தவர்களுக்கும், மேய்ச்சல் இன நாடோடிகளான புலானிஇனத்தவர்களுக்கும் இடையே அடிக்கடி மோதல்கள் ஏற்படுகின்றன.

## மூளைக்காய்ச்சல் பாதிப்பால் உயிரிழப்பு 128 ஆக அதிகரிப்பு



(பாட்னா)

பீகார் மாநிலத்தின் முசாபர்பூர் உள்ளிட்ட மாவட்டங்களில் மூளைக் காய்ச்சலுக்கு பலியானோர் எண்ணிக்கை 128 ஆக அதிகரித்துள்ளது.

பீகார் மாநிலத்தில் குழந்தைகளை தாக்கும் மூளைக் காய்ச்சல் நோய் பரவி வருகிறது. கடந்த ஜனவரி மாதத்தில் இருந்து அங்கு நோய் பரவியது.

இதில் பாதிக்கப்பட்டு கடந்த மாதம் வரை 11 பேர் உயிரிழந்திருந்தனர். ஆனால் இப்போது திடீரென இதன் தாக்கம் மேலும் அதிகரித்துள்ளது. கடந்த சில நாட்களாக உயிரிழப்பு அதிகரித்து வருகிறது.

கடந்த மூன்று தினங்களுக்கு முன்பு வரை 43 குழந்தைகள் பலியாகி இருந்தனர். நோய் பாதிப்பால் 117 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் பலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

இந்நிலையில், பீகாரில் மூளை காய்ச்சலுக்கு பலியானோர் எண்ணிக்கை 128 ஆக அதிகரித்துள்ளது. இந்த காய்ச்சல் கயா மாவட்டத்துக்கும் பரவியுள்ளது. இந்த காய்ச்சல் பாதிப்பு அறிகுறியுடன் இருக்கும் 130 குழந்தைகளுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது என அதிகாரிகள் தெரிவித்தனர். (7)

## மலேசியாவில் ஐ.எஸ்.பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தத் திட்டம் -பொலிஸ்



மலேசியாவில் ஐ.எஸ்.பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தக் கூடும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

South China Morning Post என்ற ஊடகத்திற்கு வழங்கியுள்ள நேர்காணல் ஒன்றிலேயே மலேசிய உயர் பொலிஸ் அதிகாரியான Abdul Hamid Bador இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஐ.எஸ்.பயங்கரவாத அமைப்பின் ஆதிக்கம் வீழ்ச்சியடைந்துள்ளமையினைத் தொடர்ந்து சிரியாவின் வடக்குப் பகுதியில் 20 இற்கும் மேற்பட்ட மலேசியாவைச் சேர்ந்த பயங்கரவாதிகள் பதுங்கியிருப்பதாகத் தகவல்கள் கூறுகின்றன.

சமூக வலைத்தளங்கள் ஊடாக அவர்கள் தகவல்களைப் பரிமாற முயற்சி செய்யக்கூடும். 2013 ஆம் ஆண்டிலிருந்து 100 இற்கும் அதிகமான மலேசியர்கள் சிரியாவிற்கும் ஈராக்கிற்கும் ஐ.எஸ்.அமைப்பில் இணையச் சென்றுள்ளனர்.

இவ்வாறு இணைந்து கொண்டவர்களில் 40 பேர் யுத்தத்தின் போதும் 9 பேர் தற்கொலைக் குண்டுத்தாக்குதல்களின் போதும் உயிரிழந்துள்ளனர்.

அத்துடன், கடந்த ஆறாண்டுகளில் 20 இற்கும் மேற்பட்ட பயங்கரவாதச் சதித் திட்டங்களை மலேசிய பொலிஸ் அதிகாரிகள் முறியடித்துள்ளனர் என குறிப்பிட்டுள்ளார். (7)



## குடிநீர் பிரச்சினை விவகாரம்; தி.மு.கவினர் போராட்டம்




கோவையில் உள்ள குடிநீர்ப்பிரச்சினை தொடர்பாக, தி.மு.கவினர் கோவை மாநகராட்சி அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தியுள்ளனர். கோவை மாநகரில் நிலவும் குடிநீர்ப்பிரச்சினையை சீர் செய்ய வலியுறுத்தி இந்தப்போராட்டம் நடைபெற்றது.

அத்தோடு இதற்கு காரணமான உள்ளாட்சித்துறை அமைச்சர் எஸ்.பி.வேலுமணி பதவி விலக வலியுறுத்தியும் தி.மு.கவினர் முற்றுகைப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

போராட்டத்திற்கு பொலிஸார் அனுமதி தர மறுப்புத் தெரிவித்த நிலையில், போராட்டம் நடைபெற்று வருகின்றது. இந்நிலையில் போராட்டம் நடக்கும் இடத்தில் பலத்த பொலிஸ் பாதுகாப்பும் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

## வருங்கால சந்ததியினருக்காக தண்ணீர் சேமிக்க வேண்டும்

### ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் தெரிவிப்பு



வருங்கால சந்ததியினருக்காக நாம் தண்ணீரை சேமிக்க வேண்டும் என பாராளுமன்ற கூட்டுக்கூட்டத்தில் ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் தெரிவித்தார்.

நேற்றைய தினம் பாராளுமன்ற கூட்டுக் கூட்டத்தில் ஜனாதிபதி ராம்நாத்கோவிந்த்உரையாற்றிய போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உலக அளவில் பொருளாதார வளர்ச்சியில் இந்தியா 5 ஆவது இடம் வகிக்கிறது. கறுப்புப் பணத்துக்கு எதிரான அரசின் நடவடிக்கை தொடரும். ஜிஎஸ்டி வரிமுறையால் சிறு தொழில்கள் பலன்பெற்றுள்ளன.

வருங்கால சந்ததியினருக்காக நாம் தண்ணீரை சேமித்து வைக்க வேண்டும். அதற்கான உறுதியான நடவடிக்கைதான் ஜல்சக்தி துறை உருவாக்கம்.

கங்கை நதியை சுத்தப்படுத்தும் பணி தொய்வின்றி நடந்து வருகிறது. எந்தத் துறையிலும் இலஞ்சம் மற்றும் ஊழலை அரசு ஒருபோதும் சகித்துக்கொள்ளாது.

சட்டவிரோத குடியேறிகள் நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உள்ளனர். அவர்களை அடையாளம் காண்பதற்காக, தேசிய குடிமக்கள் பதிவேடு தயாரிக்கப்படுகிறது. எல்லைகளில் பாதுகாப்பு அதிகரிக்கப்படும்.

பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கையில் உலக நாடுகள் இந்தியாவுக்கு ஆதரவாக உள்ளன. மசூத் அசாரை சர்வதேச பயங்கரவாதியாக ஐ.நா.சபை அறிவித்ததே இதற்கு சான்று.

விண்வெளி தொழில்நுட்பத்தால் நாட்டின் பாதுகாப்பு அதிகரித்துள்ளது. தமிழ் நாடு மற்றும் உத்தர பிரதேசத்தில் இராணுவ தளபாட உற்பத்தி பாதை ஏற்படுத்தப்படும். ஜம்மு-காஷ்மீரில் பாதுகாப்பான சூழ்நிலையை ஏற்படுத்த அரசு பணியாற்றி வருகிறது. 2022 ஆம் ஆண்டில் ஜி20 நாடுகளின் கூட்டத்தை இந்தியா நடத்த உள்ளது என மேலும் தெரிவித்தார். (7)



# வெளிநாடு

## மர்ம நபர்கள் தாக்குதல் ைவாசிகள் உயிரிழப்பு!

அண்மையில் நாட்டின் மத்திய பகுதியில், டோகோன் இனத்தவர்கள் அதிகம் வாழும் சோபனே- கோவ் கிராமத்துக்குள் ஆயுதம் ஏந்திய குழுக்கள் புகுந்து நடத்திய கொடூரத்தாக்குதலில் சுமார் 100 பேர் கொன்று குவிக்கப்பட்டனர்.

இந்த பரபரப்பு அடங்குவதற் குள் மத்திய பகுதியில் உள்ள கங் காபானி மற்றும் யோரோ ஆகிய 2 கிராமங் களுக்குள் நேற்று முன்தினம் இரவு ஆயு தம் ஏந்திய குழுக்கள் புகுந்து கொலை வெறி தாக்குதல் நடத்தினர்.

துப்பாக்கி உள்ளிட்ட பயங்கர ஆயுதங்களுடன் கங்காபானி கிரா மத்துக்குள் நுழைந்த 100இற்கும் மேற்பட்டோர், வீடுகளுக்குள் இரு ந்தவர்களை வெளியே இழுத்து வந்து, கொடூரமாக கொலை செய்தனர். மேலும் பல வீடுகளை தீவைத்து எரித்தனர்.

இதில் 17 பேர் கொல்லப்பட் டனர். பின்னர் அவர்கள் ஆடு, மாடு உள்ளிட்ட கால்நடைகளை திருடிக் கொண்டு அங்கிருந்து தப்பி சென் றனர். பின்னர் யோரோ கிராமத் துக்கு சென்ற அவர்கள் கிராம வாசிகள் 24 பேரை சுட்டுக் கொன்றனர்.

இந்தச் சம்பவத்துக்கு இது வரை எந்த இயக்கமும் பொறுப்பு ஏற்காத நிலையில், இது பயங்கர வாதிகளின் சதிச்செயல் என அரசு தெரிவித்துள்ளது. (7)

## ஜப்பானைத் தாக்கியது சுனாமிப் பேரலை




(டோக்கியோ)

ஜப்பானைத் தாக்கிய மிதமான சுனாமிப் பேரலை காரணமாக 21 பேர் படுகாயமடைந்துள்ளனர். ஜப்பானின் வடமேற்கு கரையோரப் பிராந்தியமான யமகட்டாவில் 6.4 ரிக்டர் அளவில் கடந்த செவ்வாய்க் கிழமை நிலநடுக்கம் ஒன்று உணரப்பட்டது.

இதனைத் தொடர்ந்து யமகட்டா, நிகாட்டா மற்றும் இஷிகவா ஆகிய பகுதிகளுக்கு சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டது. சுமார் ஒரு மீற்றர் உயரம் வரை சுனாமி ஏற்படுவதற்கான வாய்ப்புள்ளதாக அதிகாரிகள் ஆரம்பத்தில் எச்சரித்திருந்தாலும், 10 செ.மீ. உயரத்திலேயே சுனாமி அலைகள் எழுந்ததாக கூறப்படுகின்றது.

இதன்போது 21 பேர் காயமடைந்ததாகவும் காயமடைந்தவர்கள் சிகிச்சைகளுக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (7)

## ஜமால் கஷோக்கி படுகொலைக்கும் சவுதி இளவரசருக்கும் தொடர்புண்டு

### ஐ.நா.நிபுணர் சுட்டிக்காட்டு



(றிசாத்)

ஊடகவியலாளர் ஜமால் கஷோக் கியின் படுகொலைக்கும் சவுதி அரேபிய இளவரசர் மொஹம்மட் பின் சல்மானு க்கும் தொடர்புள்ளது என்பதற்கு நம்பத்தகு ந்த ஆதாரங்கள் கிடைத்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர் தெரி வித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் விசேட விசாரணையாளரான அக்னிஸ் காலமார்ட்டினால், கஷோ க்கியின் கொலை தொடர்பாக முன்னெடுக்கப்பட்ட விசாரணை யின் அறிக்கையிலேயே இவ் வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

தமக்கு கிடைத்துள்ள ஆதார ங்கள் சுயாதீனமான மற்றும் பக் கச்சார்பற்ற சர்வதேச விசாரணை க்கு தகுதியானவை எனவும் கால மார்ட் தனது அறிக்கையில் தெரி வித்துள்ளார்.

மேலும் சவுதி அரசால் இச் சம்பவம் தொடர்பாக முன்னெடுத்து வரப்படும் விசாரணைகள் சர்வ தேச நடைமுறை மற்றும் கணிச மான தரங்களைச் சந்திக்க தவறி விட்டது எனவும் அதனால் இது நிறுத்தப்பட வேண்டும் எனவும் காலமார்ட் தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் கஷோக்கி கடந்த வருடம் இஸ்தான்புல்லில் அமைந்துள்ள சவுதி அரேபிய தூதரகத்தில் வைத்து சவுதி அதிகாரிகள் சிலரால் படுகொலை செய்யப்பட்டார்.

கஷோக்கியை படுகொலை செய்த அதிகாரிகளுக்கும் சவுதி இளவரசருக்கும் எவ்வித தொட ர்புமில்லையென சவுதி அரசாங் கம் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (7)

## ட்ரம்புக்கு சிலை வைத்து

### தெலுங்கானா விவசாயி வழிபாடு



(ஐதராபாத்)

தெலுங்கானா விவசாயி கிரு ஷ்ணா என்பவர் ட்ரம்பை கடவு ளாக கருதி, அவரது சிலையை புஸ்சா கிருஷ்ணா தினமும் வழிபட்டு வருகிறார்.

தெலுங்கானா மாநிலம் ஜங் கோன் மாவட்டம் கொன்னே கிராமத்தை சேர்ந்தவர் புஸ்சா கிருஷ்ணா (வயது-32). விவ சாயியான இவர், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் அபிமானி ஆவார். தனது வீட்டி லேயே ட்ரம்புக்கு 6 அடி உயர சிலை அமைக்கும் அளவுக்கு அவரது அபிமானம் சென்றுள் ளது.

ட்ரம்பை கடவுளாகக் கருதி, அவரது சிலையை புஸ்சா கிரு ஷ்ணா தினமும் சிலையின் நெற்றியில் பொட்டு வைத்து, மாலை அணிவித்து, அபிஷேகம் செய்து ஆரத்தி காட்டி வழிபட்டு வருகிறார்.

இதுபற்றி கிருஷ்ணா தெரி விக்கையில், "ட்ரம்ப் ஒரு வலி மையான தலைவர். அவரது துணிச்சலான செயற்பாடு என க்குப் பிடிக்கும். எனவே, அவரை வழிபடுகிறேன். என்றாவது ஒரு நாள் அவரை நான் சந்திப்பேன்" என தெரிவித்தார். (7)

## பீகார் மாநிலத்தில் பரவி வரும் மூளைக்காய்ச்சலுக்கு மத்திய, மாநில அரசுகளே பொறுப்புக்கூற வேண்டும்

### காங்கிரஸ் குற்றச்சாட்டு



(பீகார்)

பீகார் மாநிலத்தில் பரவிவரும் மூளைக் காய்ச்சலுக்கு மத்திய, மாநில அரசுகளே பொறுப்புக்கூறவேண்டும் என காங்கிரஸ் கட்சி குற்றம்சாட்டியுள்ளது.

பீகார் மாநிலத்தில் குழந்தைகளைத் தாக்கும் மூளைக்காய்ச்சல் காரணமாக இதுவரையில், சுமார் 128 குழந்தைகள் உயிரிழந்துள்ளன.

இது குறித்து காங்கிரஸ் கட்சி யின் செய்தித் தொடர்பாளர் கவுரவ் கோகாய் தெரிவிக்கை யில், "பீகார் மாநிலத்தில் இந்தக் காய்ச்சலால் உயிரிழக்கும் குழ ந்தைகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவது தேசிய துய ரமாக உள்ளது.

குழந்தைகளை இழந்து வாடும் குடும்பத்தினருக்கு ஆறு தல் கூற வார்த்தைகள் இல்லை.

மூளைக்காய்ச்சலால் குழந் தைகள் உயிரிழந்து வருவதற்கு மத்தியில் பா.ஜ.கவும், மாநில த்தை ஆட்சி செய்யும் ஐக்கிய ஜனதா அரசுகளுமே காரணம் என தெரிவித்தார்.

பீகார் மாநிலத்தின் முசாபர் பூர் மாவட்டத்தில் குழந்தை களைத்தாக்கும் மூளைக்காய்ச் சல் பரவி வருகின்றமை குறிப் பிடத்தக்கது. (7)

# போம்பியோவின் பயணம் ரத்தானதற்கும் 'சோபா'வுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை

(வோஷிங்டன்)

அமெரிக்க இராஜாங்கச் செயலர் மைக் போம்பியோவின் இலங்கைப் பயணம் இரத்துச் செய்யப்பட்டதற்கும் 'சோபா' உடன்பாட்டுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என அமெரிக்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தியாவுக்கு எதிர்வரும் 24 ஆம் திகதி பயணம் மேற்கொள்ளும் அமெரிக்க இராஜாங்கச் செயலர் மைக் போம்பியோ, இலங்கைக்கு எதிர்வரும் 27 ஆம் திகதி குறுகிய பயணம் ஒன்றை மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்தார்.

எனினும், தவிர்க்க முடியாத திட்டமிடல் முரண்பாடுகளால் அவரால் இலங்கைக்கான பயணத்தை இம்முறை மேற்கொள்ள முடியாமல் போயுள்ளதாக கொழு



ம்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் நேற்று முன்தினம் அறிவித்தது.

அமெரிக்காவுடனான படைகளை நிலைப்படுத்தல் தொடர்பான 'சோபா' உடன்பாட்டுக்கு எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றன.

இந் நிலையிலேயே அமெரிக்க இராஜாங்கச் செயலர் மைக் போம்பியோவின் பயணம் இரத்துச் செய்யப்பட்ட அறிவிப்பு வெளியானது.

இது குறித்து கருத்து வெளியிட்ட அமெரிக்க உயர் அதிகாரி ஒருவர், "போம்பியோவின் இந்தப் பயணத்தின் போது, 'சோபா' உடன்பாடு குறித்துப் பேசத் திட்டமிடப்பட்டிருக்கவில்லை. அவரது இலங்கைப் பயணம் இரத்துச் செய்யப்பட்டதற்கும் 'சோபா' உடன்பாட்டுக்கும் எந்தத்தொடர்பும் இல்லை" என்று தெரிவித்தார்.

அதேவேளை, அமெரிக்க இராஜாங்கச் செயலர் மைக் போம்பியோ இலங்கை வரத் திட்டமிட்டிருந்த போது, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கம்போடியா, லாவோசுக்குப் பயணம் மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்தார்.

எனினும், இந்தப் பயணம் ஒகஸ்ட் மாதத்துக்குப் பிற்போடப்பட்டதாக தமக்குத் தெரிய வந்தது என அந்த அமெரிக்க அதிகாரி தெரிவித்தார். (இ-7)

# நாடாளுமன்ற பாதுகாப்புக்கு கருவிகளை வழங்கியது சீனா

நாடாளுமன்றத்துக்கு 33 மில்லியன் ரூபாய் பெறுமதியான பாதுகாப்புக் கருவிகளை சீன அரசாங்கம்கொடையாகவழங்கியது.

மூன்று நடமாடும் எக்ரே இயந்திரங்கள் மற்றும் உலோகப் பொருட்களைக் கண்டறியும் ஐந்து கருவிகள் அடங்கிய இந்த பாதுகாப்புக் கருவிகளை சீன தூதுவர் செங் ஷியுவான் நேற்று முன்தினம் சபாநாயகர் கரு ஜெயசூரியவிடம் கையளித்தார்.



நாடாளுமன்ற உறுப்பினர்கள், பணியாளர்கள், ஊடகவியலாளர்கள், விருந்தினர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக இந்தப் பாதுகாப்புக் கருவிகளை, சீனா அவசர அடிப்படையில் இலங்கை நாடாளுமன்றத்துக்கு வழங்கியுள்ளதாக சீனத் தூதரகம் தெரிவித்தது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அண்மையில் சீனாவுக்கு மேற்கொண்டிருந்த பயணத்தின் போது, சீன ஜனாதிபதி ஷி ஜின் பிங் இலங்கைக்கு அவசர நிதியுதவியாக 2.6 பில்லியன் ரூபாவை வழங்கியிருந்ததுடன் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக தொழில்நுட்பப் பயிற்சிகள், பாதுகாப்புக் கருவிகளை வழங்குவதாகவும் உறுதியளித்திருந்தார்.

இதனடிப்படையில் முப்படைகள் மற்றும் பொலிஸ்துறையைச் சேர்ந்த 20 சிரேஷ்ட அதிகாரிகள், சீனாவில் இரண்டு வாரகாலப் பயிற்சிகளை முடித்துக் கொண்டு, ஜூன் 17 ஆம் திகதி நாடு திரும்பியுள்ளனர்.

இலங்கை பொலிஸ் துறைக்கு சீனா 10 ஜீப் வண்டிகளை வழங்கியிருப்பதுடன் மேலும் 100 ஜீப் வண்டிகளை வழங்கவும் இணங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# அமெ. தூதரக பாதுகாப்பு ஆலோசகர் கடற்படைத் தளபதியுடன் ஆலோசனை



(கொழும்பு)

கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரக பாதுகாப்பு ஆலோசகர் லெப்.கேணல் டக்ளஸ் ஹெஸ், இலங்கைக் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பியால் டி சில்வாவை சந்தித்துக் கலந்துரையாடினார்.

கடற்படைத் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போது, பரஸ்பரம் ஆர்வமுள்ள விடயங்கள் மற்றும் இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த விவகாரங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டதாக கடற்படைத் தலைமையகம் தெரிவித்தது.

அமெரிக்க இராஜாங்கச் செயலர் மைக் போம்பியோவின் இலங்கைப் பயணம் இரத்துச் செய்யப்பட்ட சூழலில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

முன்னதாக மைக் போம்பியோ இலங்கைப் பயணத்தின் போது திருகோணமலை துறைமுகத்துக்குச் செல்வதற்கும் திட்டமிட்டிருந்தார் எனத் தகவல்கள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## கவிதையில் தெரியும் காட்சி

நாங்கள் யாரு? எங்களுடைய தகுதி என்ன? என்ற நினைப்பு எப்பவும் எங்களுக்கு இருக்க வேண்டும். தகுதிக்கு மீறிய நினைப்புத்தான் பல சமயங்களிலே எங்களைச் சிக்கலில் கொண்டுபோய் விடுகிறது.

ஒரு பூனை இருந்தது. அது தன்னை புலி என்று நினைத்துக் கொண்டிருந்தது. தன்னைப் பற்றிய தகுதிக்கு மீறிய நினைப்புடன் அந்தப் பூனை நடந்து போய்க்கொண்டிருந்தது. அப்போ வழியிலே ஒரு பெரிய யானை அமைதியாக நின்று கொண்டிருந்ததனால் இந்த பூனைக்கு அதனுடன் கொஞ்சம் வாலாட்டிப்பார்க்கலாம் என்று ஒரு ஆசை இருந்தது. உலக இயல்பு தானே இது!

இந்தப்பூனை மிகவும் நல்ல பிள்ளையாக அந்த யானை இருக்கின்ற பக்கமாகப்போய் அதைச் சுற்றிச் சுற்றி வந்தது. உற்றுப் பார்க்கின்றது. வாய் துறுதுறுக்கின்றது. வம்புக்கு இழுக்க ஆரம்பிக்கின்றது! அந்த யானையிடம் போய் எல்லோருக்கும் ஒரு பக்கம் தான் வால் இருக்கும். ஆனா உனக்கு என்ன இப்படி? இரண்டு பக்கமும் வாலா? என்றது. வேண்டாத வேலைதானே இது?

இருந்தாலும அந்த யானை பொறுமையாகப் பதில் சொல்லியது. அப்படி இல்லை. பின்னால் இருக்கிறது தான் வால். முன்னால் இருப்பது தும்பிக்கை என்றது. அதோடு விட்டுவிட வேண்டியதுதானே! விடவில்லை இந்தப் பூனை.

அதுசரி தும்பிக்கை ஏன் இப்படி உருண்டையாக இருக்கிறது? அது எதற்காக என்றது.

இதற்கு அந்த யானை பொறுமையாகவே பதில் சொல்லியது.

ஓ! அதைக் கேட்கிறாயா?... ஊற்றிலே தண்ணீர் இருக்கும். அதை உறிஞ்சிக் குடிப்பதற்காக அப்படி இருக்கு! என்றது.

சரி எல்லோருக்கும் பல்லு வாய்க்குள்ளே தானே இருக்கும். உனக்கு என்ன வெளியிலேயே இருக்கு? அதுவும் இல்லாமல் பெரியதாகவும் இவ்வளவு நீளமாகவும் இருக்கிறது? என்று கேட்டது பூனை.

அதுவா ஒரு புலி என்னிடம் வாலாட்டினால் அந்த நேரத்தில் அதைத் தாக்குவதற்காக அது இப்படி இருக்கிறது என்றது.

இதைக் கேட்டதும் பூனை விழுந்து விழுந்து சிரிக்க ஆரம்பித்தது. மலை எங்கேயாவது பாய்வது உண்டா? நீயோ கறுப்பா பெரியதா இருக்கிற மலை! உன்னால் எப்படி பாய முடியும்? அது முடியாத காரியம்! என்று சொல்லிவிட்டு மறுபடியும் சிரித்தது.

என் உடம்பைப் பார்த்து விட்டுத்தானே மலை என்று சொல்லுகிறாய்? நான் பாய வேண்டிய அவசியம் இல்லை. இப்போ உன்னைப் பாய வைக்கிறேன் பார்! என்று சொல்லிவிட்டு அந்தப் பூனையை தும்பிக்கையால் அலட்சியமாக தூக்கி எறிந்தது யானை.

எங்கேயோ போய் விழுந்த அந்தப் பூனை அப்பாடா என்று இடுப்பைப் பிடித்துக் கொண்டே எழுந்து நின்று பார்த்தது.

தூரத்தில் அந்த யானை பொறுமையாக, ஆனால் கம்பீரமாக நின்று கொண்டிருந்தது.

இப்பதான் அந்தப் பூனைக்கு ஞானோதயம் பிறந்தது.

யானை பாய வேண்டிய அவசியம் இல்லை. அதற்கு நீளமாக தும்பிக்கை இருக்கிறது என்பதைப் புரிந்து கொண்டது. வலியாரிடம் வாயாடக் கூடாது என்பதைப் பூனை கற்றுக் கொண்டது.

இந்தக் காட்சி பாவேந்தர் பாரதிதாசன் கைவண்ணத்தில் ஒரு கவிதையாக உருவெடுத்து வருகிறது.

"இரண்டு பக்கமும் வாலா என்றது பூனை
எதிரி லேதும் பிக்கை என்றது யானை
உருண்ட துதிக்கை ஏனோ என்றது பூனை
ஊற்று நீரை உறிஞ்ச என்றது யானை
திரண்டு நீண்ட பல் ஏன் என்றது பூனை
சீறும் புலியைத் தாக்க என்றது யானை
இருண்ட மலை பாயா தென்றது பூனை
எடுத்தெறிந்தது பூனையைப்போய் யானை!"

இந்தக் கவிதையிலே ஒரு பாடமும் இருக்கு. படமும் இருக்கு. அதாவது இதைப் படிக்கவும் முடிகிறது. பார்க்கவும் முடிகிறது.

வலியாரிடம் வாயாடக் கூடாது என்பது சிறுவர்கள் மட்டுமல்ல இந்தக் காலத்திலே பெரியவர்களும் கற்றுக்கொள்ள வேண்டிய பாடம்.

ஒருவர் இப்படித்தான் ஆற்றங்கரையில் பொறுமையாக அமர்ந்திருந்த இன்னொருவரின் தலையில் குட்டினார்.


அவன் பார்த்தான். உடனே ஒரு ரூபாயை எடுத்து இவன் கையில் கொடுத்தான். இவனுக்கு ஒன்றும் புரியவில்லை.

அவன் சொன்னான் இந்த ஊரில் இப்படி ஒரு வழக்கம். யாரைக் குட்டினாலும் ஒரு குட்டிற்கு ஒரு ரூபாய் வீதம் கொடுப்பார்கள் என்று பொறுமையாகச் சொன்னான்.

இவனுக்கு ரொம்ப ஆசை உண்டாகிற்று. உடனே ஊருக்குள்ளே ஓடினான். சிறிது நேரம் கழித்து திரும்பி ஓடிவந்தான். அந்த முதல் ஆசாமியை மறுபடியும் பார்த்தான். உங்கள் பேச்சைக் கேட்டு ஊருக்குள்ளே போய் ஒரு பெரிய ஆசாமியை பார்த்து அவன் தலையில் என்னிடம் இருந்ததை எடுத்து என் கையில் கொடுத்துவிட்டான் என்றான். என்ன பணமா? என்றான் அவன். இல்லப் பல்லு என்றான் இவன்.

# ஆரோக்கிய வாழ்வில் ஒருங்கிசைவினை ஏற்படுத்தி மனித மேம்பாட்டிற்கு வித்திடும் யோகக்கலை

## சர்வதேச யோகா தினம் இன்று - ஜூன் 21



Yoga for Harmony & Peace

இந்தியப் பெருங்கலைகளுள் பழம்பெரும் கலையாக போற்றப்படும் யோகக்கலையானது தற்போது உலகெங்கும் பிரசித்தம் பெற்று வருகின்ற கலையாக நோக்கப்படுகிறது. நவீனத்துவம் எனும்பீடிகையுடன் பழைமையை புறமொதுக்கி புதுமைக்கும் மாற்றங்களுக்கும் முக்கியத்துவமளிக்கப்பட்டு வருகின்ற தற்காலத்தில் பழைமை குன்றாது நோய் குணப்படுத்தும் தன்மையில் காத்திரமான இடத்தினை இக்கலை பெற்று வருகின்றது. நவீன மருத்துவத்துறையை விஞ்சுமளவிற்கு உடல், உள ரீதியான குணமாக்க கடினமான அல்லது சவால் நிறைந்த பல்வேறு நோய்களை பக்கவிளைவுகளின்றி குணப்படுத்தியிருப்பது கண்டறியப்பட்டிருப்பதனால் தேசம் கடந்து மேலை நாட்டவர்களும் கூட இக்கலையால் ஈர்க்கப்பட்டு ஆர்வத்துடன் பயின்றொழுகி வருகின்றமை கண்கூடு. காலத்தின் அசைவுகள் மனிதனது எண்ணங்களிலும் சிந்தனைகளிலும் நடத்தைகளிலும் பிரதிபலித்து வருகின்றன.

மனித வாழ்க்கையில் மாற்றங்கள் ஏற்படுவது தவிர்க்கப்பட முடியாதவை. இருந்தபோதும் மாற்றங்கள் எனும் பெயரில் மனித வாழ்வியல் விழுமியங்களை கருவறுக்கும் செயற்பாடுகள் முளைப்புக் கொள்வதை ஒரு போதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

அவ்வாறு முனைப்புக் கொண்டால் உடல், உள, சமூக, சூழல், ஆன்மீக ரீதியான பல்வேறு எதிர்மறையான விளைவுகளையும் அறுவடை செய்ய வேண்டும் என்ற நிதர்சனமும் உணர்தற்குரியது. இத்தகைய பின்னணியில் தான் தற்காலத்தில் அதிகரித்துவருகின்ற நோய்த் தாக்கங்களானவை மக்களின் நாளாந்த வாழ்வியல் நகர்வுகளை பாதித்து ஆயுளையும் சுருக்கி வருவதனை காணமுடிகின்றது.

எவ்வளவுதான் மருத்துவ விஞ்ஞானம் நாளுக்குநாள் முன்னேற்றம் கண்டு நோய்த் தாக்கங்களுக்கு பரிகாரம் தேடி நிவர்த்திக்க முற்பட்டாலும் அவை புதுப்புது வடிவில் சன்னதம் கொண்டு மனிதனை தாக்குகின்றனவேயொழிய அவற்றின் தாக்கம் குறைந்ததாகத் தெரியவில்லை. இதற்கு நமது வாழ்வியற் கட்டமைப்பில் ஏற்பட்ட சிதைவினை பிரதானத்துவப்படுத்திக் கூறலாம்.

இந்நிலையில், ஒருவன் எப்படியும் வாழலாம் என்று தான் தோன்றித்தனமாக வாழாமல் இப்படித்தான் வாழவேண்டும் என்று கோடு போட்டு வாழும் விதத்தை நமக்குச் சொல்லித் தரும் கலையாகத்திகழ்கின்றது.

இஃது இந்துத்துவம் சார் பின்னணியைக் கொண்டிருந்தாலும் அதன் அடிப்படைக் கொள்கைகளானவை பெரும்பாலும் மதச்சார்பின்றி, மனித வாழ்வியலின் ஆழ்ந்த தத்துவ உட்பொருட்களை உள்ளடக்கியுள்ளமையை நவீன விஞ்ஞானமே வியப்புடன் ஏற்றுக் கொள்கின்றது.

இக்கலையானது பொதுவாக ஆரோக்கியத்தை மேம்படுத்துவதிலிருந்து உடல், உள கட்டமைப்பை சீராகப் பேணுதல் வரை எவ்வாறான வகிபங்கினை கொண்டுள்ளதென்பதனை சுருக்கமாக நோக்கலாம்.

ஆரோக்கியம் என்ற எண்ணக்கரு பல் பரிமாணமுடையதாக விளங்குகிறது. உலக சுகாதார நிறுவனம் என்ற சர்வதேச அமைப்பு, "ஆரோக்கியம்" என்பதற்கு உடல், உளம், சமூகம், சூழல், ஆன்மீகம் ஆகிய நிலைகளில் நன்நிலையை அடைதல் என வரைவிலக்கணப்படுத்துகிறது. இவ் ஐந்து நிலைகளும் ஒன்றுக்கொன்று பரஸ்பர தொடர்புடைய அகச்சார்புடையவையாகும்.

ஒன்றில் ஏற்படும் பாதிப்பானது ஏனையவற்றிலும் தாக்கம் செலுத்தும் தன்மையவை, இவற்றிற்கிடையே கூட்டிணைந்ததான அணுகுமுறையை (**Holistic Approach**) ஏற்படுத்தினாலேயே மனித வாழ்வு பூரணத்துவமுடையதாக விளங்கும். இதற்கான உன்னதமான கருவியாக யோகம் நோக்கப்படுகிறது. பொதுவாக யோகமானது ஆழ்ந்தகன்ற பொருட்தத்துவத்தை எமக்கு வெளிப்படுத்தி நிற்கிறது. "யுஜ்" எனும் வினையடியினின்று பிறந்த இச்சொற்பதம் குறித்து நிற்கும் பொருளை நோக்கின், 'இணைத்தல்' அல்லது 'ஒன்றுசேர்த்தல்' என்ற நேரடி அர்த்தம் கொண்டு. நமது உடல், மனம், ஆன்மா ஆகிய மூன்று முக்கிய பொருட்களின் இயக்கப்பாடுகளையும் ஒன்றிணைத்து மனித வாழ்வியற் சமன்பாட்டிற்கு வித்திடும் அறிவியற் கலையாக விளங்குகிறது.

இதனை இன்னொருவிதமாகக் கூறும்போது ஜீவாத்மா, பரமாத்மாவுடன் இணைதலுக்கான ஒழுக்கநெறிகளை- வாழ்வியல் ரீதியான விடயங்களை போதிக்கும் துறை இதுவாகும். இந்து தத்துவ நூல்களெல்லாம் ஆன்மா நிறை நிலையுற்று முக்திப்பேறடைவதையே குறிக்கோளாகக் கொண்டிலங்குகின்றன.

அதற்கான வழியாக யோகத்தையே சுட்டியுரைக்கின்றன. யோக நிலைகளை அடைவதற்கு உடல், உள ஆரோக்கியம் என்பது முக்கியமாகக் கொள்ளப்படுகின்றன.

இதன்படி பார்க்கும்போது ஆரோக்கியம் என்ற எண்ணக்கருவில் உள்ளடக்கப்பட்டுள்ள இவ் ஐந்து நிலைகளின் இயக்கங்களை ஒன்றிணைத்து அவற்றிற்கிடையே ஒரு பொதுமைத் தன்மையை காணுகின்ற புனிதமானதொரு கலையாக கட்டமைக்கப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும். மனிதனின் உடல், உளக் கட்டமைப்பை கூர்ந்து நோக்கின் அவை பல சிக்கலான பொறிமுறைகளைக் கொண்டுள்ளன என்பது புலனாகும். அவற்றினை மிக ஆழமாக அறிந்து கொள்ள முற்படுவது நம் சிற்றறிவின் பாற்பட்டதாகும்.

எமது உடலானது அமைப்பு ரீதியாக ஒன்பது மண்டலங்களாக-தொகுதிகளாக (Systems) பிரிக்கப்படுகின்ற அதேவேளை, தொழிற்பாட்டு ரீதியிலும் இவை ஒவ்வொன்றும் ஒன்றுக்கொன்று இடைத்தொடர்புள்ளவையாகவும் காணப்படுகின்றன.

அவை, இரத்த ஓட்ட மண்டலம் (**Circulatory System**), சமிபாட்டு மண்டலம் (**Digestive System**), இனப்பெருக்க மண்டலம் (**Reproductive System**), அகஞ்சுரக்கும் மண்டலம் (**Endocrine System**), சுவாச மண்டலம் (**Respiratory System**), நிணநீர் மண்டலம் (**Lymphatic System**), கழிவகற்றும் மண்டலம் (**Excretory System**), நரம்பு மண்டலம் (**Nervous System**) மற்றும் எலும்புதசை மண்டலம் (**Musculo skeletal System**) என ஒன்பது பகுதிகளாக வகுக்கப்பட்டுள்ளது. அத்துடன் உடலில் முக்கியமாக ஐந்து உறுப்புக்கள் காத்திரத் தன்மை பொருந்தியவையாக விளங்குகின்றன.

மூளை, இதயம், கல்லீரல், நுரையீரல்கள் மற்றும் சிறுநீரகங்கள் என்பவையே அவையாகும். ஏனையவை துணை உறுப்புகளாக அமைகின்றன. உடலியற்செயற்பாடானது சங்கிலித்தொடர் போன்றது. ஒரு மண்டலத்திலோ அல்லது ஏதேனும் உறுப்பு ஒன்றிலோ ஏற்படும் பாதிப்பு ஏனையவற்றிலும் தாக்கத்தை ஏற்படுத்த வல்லவையாகும்.

இன்றைய காலகட்டத்தில் வேகமெடுத்து வருகின்ற பல்வேறு தொற்றா நோய்களிற்கு, தவறான உணவுப்பழக்கங்கள், இயற்கைக்கு முரணான வாழ்வியல் நடவடிக்கைகள், உடலுழைப்பின்மை, ஓய்வின்மை, தீய பழக்கங்கள் முதலியவை முகாந்திரங்களாக அமைவதுடன் ஆரோக்கியத்திற்கும் வேட்டு வைக்கின்றன. ஆசனப்பயிற்சிகள் மூலம் உடலின் தொடர்புடைய பகுதிகளுக்கு அதிகமான இரத்தோட்டம் மற்றும் தேவையானளவு பிராண சக்தியும் கிடைப்பதனால் அனுசேபத் தொழிற்பாடுகள் (**Metabolism**) சிறப்பான முறையில் நடைபெறுகின்றன.

எனவே உடலிலுள்ள மிகச் சிறிய அலகாகிய கலங்களிலிருந்து இழையங்கள், அங்கங்கள் மற்றும் தொகுதிகள் வரையான எல்லா அமைப்பு ரீதியிலான குறைகளையெல்லாம் சீர்செய்து அவற்றின் ஒழுங்கான - வினைத்திறனான இயக்கப்பாட்டினை உறுதிப்படுத்த வல்ல நித்திய சிரஞ்சீவியாக இக்கலை மிளிர்கிறது.

தற்காலத்தில் சமூகத்தின் மத்தியில் உளத் தாக்கங்கள் அதிகரித்து வருகின்றமை பற்றி இன்று பலராலும் பிரஸ்தாபிக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக உள நெருக்கீடுகள் (**Stress**), மன அழுத்தம் (**Depression**), பதகளிப்பு (**Anxiety**) என்பவற்றால் பாதிக்கப்படுவோர் தொகை சடுதியாக அதிகரித்து வருகின்றமை நோக்கத்தக்கது.


இதற்கான முதன்மைக் காரணம், நமது வாழ்வியல் கோலங்களில் ஏற்பட்ட மாற்றங்களேயாம். உளப் பாதிப்புக்களானவை பல்வேறு மாற்றற்கடினமான பாரிய உள நோய்களையும் உடலியற் பாதிப்புக்களையும் ஏற்படுத்துவதுடன் ஆயுளையும் சுருக்கி விடுகின்றன.

மேலும் உளத்தொழிற்பாட்டின் கட்டமைப்பு ரீதியான பாதிப்புகளை நோக்கின், மன நிலைகள் (**Mood**), நித்திரை நிலை (**Sleep**), உணர்வுசார் நிலைகள் (**Emotional**), நடத்தைசார் நிலைகள் (**Behavioral**), சிந்தனைசார் நிலைகள் (**Cognitive**) மற்றும் பாலியல்சார் பிறழ்வுகள் (**Sexual**) போன்ற நிலைகளில் மேற்கிளம்புகின்ற தாக்கங்களானவை மனிதனது உளவுரணைச் சிதைத்து எதிர்கால வாழ்வையே சூனியமாக்குகின்றன.

மனமானது கிளர்ச்சி நிலையிலிருக்கையில் மனதில் எண்ண அலைகள் அதிகரித்து, சுவாச வேகமும் அதிகரிக்கும். யோகத்திலுள்ள பிராணாயாமம் மற்றும் தியானப்பயிற்சிகள், சுவாசத்தை ஆழமாக்கி எண்ண அலைகளை குறைத்து தெளிவான - அமைதியான மனநிலையை உருவாக்குகின்றன.

எனவே, ஒருவர் உடல், உள, நடத்தை ரீதியாக நன்நிலையிலிருக்கும் போதே அவர் ஆன்மீக நிலையிலும் சிறந்த நிலையை அடையலாம். ஆன்மீகமானது ஆன்மா சம்பந்தப்பட்டது. மனித வாழ்க்கை முழுமை பெறுவதற்கு ஆன்மீகப் பண்புகளை வளர்க்க வேண்டியது முக்கியமானதாகும். இதற்கு நம் முன்னோர்களான சித்தர்கள், யோகிகள் வகுத்துரைத்த சீரிய வாழ்வியல் நெறி நின்று அதாவது ஏனைய யோக முறைகளுக்கெல்லாம் தலையாயதாக திகழும் இராஜயோகம் வலியுறுத்துகின்ற முக்கிய விடயப்பரப்பாகிய அட்டாங்க யோகம் எனும் எட்டு வகையான வாழ்வியற் படிமுறைகளை - வரையறுத்துரைக்கப்பட்ட பயிற்சி முறைகளை தக்க குரு மூலமாக கிரமமாகக் கடைப்பிடித்து ஒழுகினால் வாழ்வின் பூரணத்துவமான நிலையை எய்த முடியும் என்ற கருத்தியல் இராஜ யோகத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

எனவே இத்துணை சிறப்பு வாய்ந்த நீண்ட வரலாற்றுப் பாரம்பரியமுடைய இக்கலையை பேணிப் பாதுகாத்து எதிர்கால சந்ததிக்கும் அளிப்பதற்கு அனைவரும் ஈடுபட்டுழைக்க வேண்டியது அவசியமாகும்.




ஸ்ரீ.நதீபரன் (யோகா போதனாசிரியர்)

## 11 வயதுச் சிறுவன் பட்டினியால் மரணம்!

# எனது ஆட்சிக்காலத்தில் இவ்வாறான துன்பியல் சம்பவங்கள் இடம்பெறவில்லை

## மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு



(முல்லேரியா)

மூன்று வேளை உணவின்றி மக்கள் பட்டினியில் வாடுகின்றனர். திஸ்ஸமஹராம பகுதியில் 11வயது சிறுவன் பட்டினியால் உயிரிழந்தமை மிகவும் வேதனைக்குரிய விடயம் எனத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ, எனது ஆட்சிக்காலத்தில் இவ்வாறான துன்பியல் சம்பவங்கள் இடம் பெறவில்லை எனவும் தெரிவித்தார்.

கொடிகாவத்த முல்லேரியா பிரதேசத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம் பெற்ற நிகழ்வில் கலந்துக் கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டு மக்களின் முன்னேற்றத்திற்கு அரசாங்கம் முக்கியத்துவம் கொடுக்கவில்லையாயின் பிற நாட்டவர்களின் தேவைகளை நிறைவேற்ற பதவி வகிக்கின்றதா என்ற சந்தேகம் எழுகின்றது. பிறிதொரு நாட்டு நிறுவனத்தில் சம்பளம் பெறும் ஒருவர் சபாநாயகரின் செயலாளராக எவரது நோக்கங்களுக்காக செயற்படுகின்றார் என்பதை அரசாங்கம் தெளிவுபடுத்த வேண்டும்.

பிரதேச சபையும், மாநகர சபையுமே மக்களுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டுள்ளன. இன்று பொதுஜன பெரமுன கிராமிய மட்டத்தில் இருந்து பொது மக்களுடன் தொடர்புகளைப் பேணி வருகின்றது. குறுகிய காலத்தில் பொதுஜன பெரமுன இரண்டு பிரதான கட்சிகளுக்கும் சவால் விடுக்கும் வகையில் எழுச்சி பெற்றுள்ளமை விசேட அம்சமாகும்.

நாட்டின் அபிவிருத்தித் தேவைகளுக்காகவே அரச முறை கடன்கள் பெறப்பட்டன. 30வருட கால சிவில் யுத்தம் குறுகிய கால ஆட்சியில் முடிவிற்கு கொண்டு வரப்பட்டன. அத்துடன் மிக விரைவாக அபிவிருத்திப் பணிகளும் முன்னெடுக்கப்பட்டன. தேசிய பொருளாதாரத்தை மேம் படுத்தும் நோக்கில் துறைமுகம், விமான நிலையம் நிர்மாணிக்கப்பட்டன. துறைமுக நகரத்தின் அபிவிருத்திக்கு நாம் நிதி செலவழிக்காமல் ஒப்பந்தங்களின் ஊடாக குறித்த நிறுவனம் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டது.

அபிவிருத்திகளை தொடர்ந்து 50 ஏக்கர் நிலப்பரப்பு அந் நிறுவனத்திற்கும் மிகுதி எமது நாட்டுக்கும் உரித்துடையதாகவிருந்தது. ஆனால் நடப்பு அரசாங்கம் தற்போது 400 ஏக்கர் நிலப்பரப்பை 99 வருடத்திற்கு குத்தகைக்கு வழங்கியுள்ளது. தேசிய வளங்கள் அனைத்தையும் விற்றே அரசாங்கம் அரச நிர்வாகத்தை முன்னெடுத்துச் செல்கின்றது. பிற நாடுகளுடன் கைச்சாத்திடப்படுகின்ற ஒப்பந்தங்களில் என்ன உள்ளடக்கப்பட்டுள்ளன என்பது கூட மறைக்கப்படுகின்றது. வெளிநாட்டு இராணுவத்தினரைக் கொண்டு வருவது ஒருபோதும் சாத்திய மற்றது.

பட்டினியால் ஒரு குழந்தை உயிரிழந்த சம்பவம் வருத்தத்திற்குரியது. கடந்த அரசாங்கத்தில் இவ்வாறான சம்பவங்கள் ஏதும் இடம் பெறவில்லை. தற்போது நாட்டு மக்கள் பொருளாதார ரீதியில் பெரிதும் நெருக்கடிகளுக்கு உள்ளாகியுள்ளார்கள். கடந்த நான்கு வருடமும் அரசியல் பழிவாங்கல்கள் மாத்திரமே இடம் பெற்றன.

அதிகார போட்டியின் காரணமாகவும், பொறுப்பற்ற செயற்பாடுகளாலும் முன்கூட்டி எச்சரிக்கை விடுத்தும் அடிப்படைவாதிகளின் தாக்குதலை அரசாங்கத்தால் தவிர்க்க முடியவில்லை. இரண்டு வருட காலத்திற்குள் 30 வருட கால யுத்தம் முடிவிற்கு கொண்டு வரப்பட்டு அனைத்து இனத்தவர்களும் சுதந்திரமாக வாழ முற்பட்டார்கள். மக்கள் மத்தியில் மீண்டும் சுதந்திரத்தை உருவாக்க ஆட்சி மாற்றம் ஏற்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மோ.சைக்கிள்-லொறி விபத்து
## கெஹலியவின் பாதுகாப்புப் பிரிவு பொலிஸ் உத்தியோகத்தர் பலி

(பன்குளம்)

திருகோணமலை - ஹொரவப்பொத்தான பிரதான வீதி பன்குளம் பகுதியில் லொறியொன்றுடன் மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த பொலிஸ் உத்தியோகத்தரொருவர் உயிரிழந்தார்.

குறித்த விபத்து நேற்று முன் தினம் இரவு இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.


உயிரிழந்தவர் நாடாளுமன்ற உறுப்பினர் கெஹலிய ரம்புக்வெலவின் பாதுகாப்புப் பிரிவில் கடமையாற்றிய ஹொரவப் பொத்தான - கபுகொல்லாவ பகுதியைச் சேர்ந்தவர் என தெரிவிக்கப்படுகின்றது.

மொரவெவ பகுதியிலிருந்து ரொட்டவெவ பகுதிக்கு மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த போது ஹொரவப்பொத்தான பிரதேசத்திலிருந்து திருகோணமலை நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த லொறியுடன் மோதியதில் இவ்விபத்து இடம் பெற்றுள்ளதாக பொலிஸ் ஆரம்ப கட்ட விசாரணையின் மூலம் தெரியவந்தது.

இவ்விபத்துடன் தொடர்புடைய சீமெந்து லொறியின் சாரதியை கைது செய்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் சடலம் திருகோணமலை பொது வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன் விபத்து தொடர்பில் மொரவெவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# மோட்டார் சைக்கிள் - டிப்பர் கோப்பாய்ச் சந்தியில் விபத்து



(யாழ்ப்பாணம்)

கைதடியில் இருந்து உரும்பிராய் நோக்கிச் சென்று கொண்டிருந்த டிப்பர் வாகனத்துடன் பருத்தித்துறை வீதியூடாக யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் நேற்றுக் காலை 6 மணியளவில் கோப்பாய்ச் சந்தியில் மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதையடுத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-10)

# மாங்குளத்தில் புதிதாக அமைக்கப்படும் வீட்டுத்திட்டம் தொடர்பாக அரச அதிபருக்கு மகஜர்

(பனிக்கன்குளம் )

புதிதாக மாங்குளம் பனிக்கன்குளம் எல்லையில் அமைக்கப்படும் அரச வீட்டுத்திட்டம் தொடர்பாக முல்லைத்தீவு மாவட்ட செயலாளருக்கு சமூக நலனில் அக்கறை கொண்ட பாதிக்கப்பட்ட பகுதி மக்களிடம் இருந்து கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

குறித்த கடிதத்தில் பனிக்கன்குளம் மாங்குளம் கிராமங்களின் எல்லைப்பகுதியில் புதிதாக அரச உத்தியோகத்தர்களுக்கான 29 வீட்டுத் திட்டத்துக்கு அடிக்கல் நாட்டப்பட்டு வீடுகள் அமைப்பதற்கான காடுகள் வெட்டும் நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த விடயம் தொடர்பில் உள்ள குறை பாடுகள் தொடர்பாக பலரிடமும் சுட்டிக்காட்டி இந்த விடயங்களை நிறுத்துமாறு கோரியும் இது தொடர்பான எந்த விதமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாது அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

கடந்த 2012 ஆம் ஆண்டு பனிக்கன்குளம் பகுதியில் 50 பயனாளிகள்(அரச உத்தியோகத்தர்கள்) தெரிவு செய்யப்பட்டு தலா அரை ஏக்கர் காணியும் ஒரு இலட்சம் ரூபாய் மானியம் இரண்டு இலட்சம் ரூபாய் கடன் அடிப்படையிலும் வழங்கப்பட்டு அரச உத்தியோகத்தர்களுக்கான வீட்டுத்திட்டத்தில் வீடுகள் கட்டப்பட்டு இன்று வரை எந்த ஒரு நபரும் குடியேறாத நிலையில் குறித்த வீட்டுத்திட்டத்தில் பல்வேறு கலாசார சீரழிவு சம்பவங்களும் திருட்டு நடவடிக்கைகளும் சட்டவிரோத நடவடிக்கைகளும் தொடர்ச்சியாக இடம்பெற்ற வண்ணம் உள்ளன.

இந்த விடயத்தில் எந்தவிதமான ஒரு முன்னேற்றகரமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மாறாக இந்த இடத்தில் வீட்டுத்திட்டத்தை பெற்றவர்கள் பலர் மீளவும் குறித்த வீட்டுத் திட்டம் பெற்றதை மறைத்து முல்லைத்தீவு மாவட்டத்திலேயே இன்னும் ஒரு வீட்டுத் திட்டத்தை பெற்று வீடுகளை அமைத்து இருக்கின்றார்கள் .

இது இவ்வாறிருக்க துணுக்காய் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அமைக்கப்பட்ட நந்தகுமார் நகர் வீட்டுத் திட்டத்தில் குறிப்பிட்ட சில வீடுகளை அரச உத்தியோகத்தர்கள் பெற்றிருந்தனர். குறித்த வீடுகளை பெற்ற அரச உத்தியோகத்தர்கள் அந்த இடத்தில் வசிப்பதில்லை என மக்கள் தெரிவிக்கின்றனர்.

மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வடகாடு பகுதியில் அமைக்கப்பட்ட பண்டாரவன்னியன், கைலாய வன்னியன் மாதிரி கிராமங்களிலும் குறிப்பிட்ட சில வீட்டுத் திட்டங்களை பெற்ற அரச உத்தியோகத்தர்கள் அந்த வீடுகளில் குடியேறவில்லை.

இவ்வாறு அரச உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படுகின்ற வீட்டுத் திட்டங்கள் பயனற்றவையாக போய்க் கொண்டிருக்கிற இந்த நிலைமையில் மீண்டும் ஒரு அரச உத்தியோகத்தர்களுக்கான வீட்டுத்திட்டம் ஏன் வழங்கப்படுகின்றது என்பது எங்களுக்கு வேதனையாக இருக்கின்றது.

குறிப்பாக மாங்குளம் கிராமத்திலே பிறந்து வளர்ந்தவர்கள் 26 குடும்பங்கள் பிரதேசத்தில் காணி அற்றவர்களாகவும் வீடு அற்றவராகவும் வசித்து வருகின்றார்கள். அதே போன்று பனிக்கன்குளம் கிராமத்தில் பிறந்து வளர்ந்தவர்கள் பலர் காணி கோரிய போதெல்லாம் காணிகள் வழங்குவதற்கு முன்னர் இருந்த கிராம அலுவலர் உள்ளிட்ட அதிகாரிகள் இடையூறுகளை வழங்கி தாய் தந்தையின் பெயரில் இருந்த சிறிய காணித் துண்டுகளிலேயே வீடுகளை அமைக்க பொருத்தமில்லாத இடத்தில் வீடுகளை அமைத்தனர். அப்போதெல்லாம் காணி வழங்க மறுத்த அரச இயந்திரங்கள் அரச உத்தியோகத்தர்களுக்கு வீடு வழங்க மாத்திரம் எவ்வாறு ஏ-9 பிரதான வீதி ஓரம் காணி விடுவிக்கப்படுகிறது.

குறித்த பகுதியில் நகரமயமாக்கல் திட்டத்தின் கீழ் வடமாகாண திணைக்களங்கள் உள்ளடங்கலாக காணிகளை ஒதுக்கி வனவளத் திணைக்களத்திடம் இருந்து விடுவித்து எவ்வாறு அரச உத்தியோகத்தர்களுக்கு வீடு வழங்குவதற்கு வழங்கப்பட்டுள்ளது.

இவர்களை பாவனையற்று கிடைக்கும் பனிக்கன்குளம் வீட்டுத்திட்ட பகுதியில் மக்களையும் அரச உத்தியோகத்தரையும் இணைத்த வகையில் குடியேற்ற முடியும். இதனால் காட ழிப்பும் இடம் பெறாது.

எனவே இந்த விடயத்தில் தங்களது காத்திரமான நடவடிக்கையை எதிர்பார்க்கிறோம்.

எனவே குறித்த பகுதியில் பணியாற்றும் அரச உத்தியோகத்தர்களும் வீடற்ற கிராம மக்களையும் இணைத்து வீடு வழங்க நாங்கள் எதிரானவர்கள் அல்ல. ஆனால் தனியாக மாவட்டத்துக்கு வெளியில் வசிக்கும் அரச உத்தியோகத்தர்களை தனியாக வீட்டுத் திட்டம் வழங்கி குடியேற்றினால் அது மீண்டும் பனிக்கன்குளம், துணுக்காய், நந்தகுமார் நகர், வடகாடு, பண்டாரவன்னியன், கைலாய வன்னியன் மாதிரி கிராமங்களில் உள்ள நிலையே தோன்றும்.

எனவே இந்த விடயம் தொடர்பில் தீர்க்கமான ஒரு நடவடிக்கையினை எதிர்பார்த்து நிற்கிறோம்.

இவ்வாறெல்லாம் இருக்கும் போது புதிதாக அரச உத்தியோகத்தர்களை மட்டும் இலக்காகக் கொண்டு புதிதாக காடழித்து ஒரு வீட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது எங்களுக்கு மிகுந்த சந்தேகத்தை ஏற்படுத்தி இருக்கின்றது.

எனவே குறித்த விடயத்தை மீள்பரிசீலனை செய்து இந்த வீட்டுத்திட்டம் தொடர்பில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. (9-281)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

279

தமிழ்ப் பிரதேசங்களில் அரசாங்கத்தின் திட்டமிட்ட குடியேற்றத்தின் மூலம் தமிழரின் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தைக் குறைக்கவும் அவர்களைப் பாராளுமன்றத்தில் வலுவிழக்கச் செய்யவும் தமிழரின் பாரம்பரியப் பிரதேசம் என்ற கோட்பாட்டை இல்லாதொழிப்பதுமே சிங்களப் பெரும்பான்மை அரசுகளின் நோக்கமாக இருந்தது.

இதையிட்டு செல்வநாயகம் பின்வருமாறு குற்றம் சுமத்தினார். கடந்த மூன்றாயிரம் ஆண்டுகளாகத் தமிழர் வடக்கு- கிழக்கு மாகாணங்களைத் தமது சொந்தமாகக் கொண்டுள்ளனர்.

இப்போது சிங்களவர் தமது ஏழு மாகாணங்களுடனும் திருப்தியடையாது எமது நிலங்களையும் பறிக்க முயல்கின்றனர்.

சிங்களப் பெரும்பான்மையினரின் எதிர்கால நடவடிக்கைகளை செல்வநாயகம் மிகச்சரியாகவே கணித்திருந்தார். முதலில் இந்தியத் தமிழரின் பிரஜாவுரிமையைப் பறித்தார்கள். பின்னர் தமிழரின் பாரம்பரிய தாயகப் பிரதேசங்களைத் தமதாக்கினார்கள்.

அதையடுத்து சிங்களம் மட்டும் சட்டத்தை அமுல்படுத்தியதுடன் தமது புத்தசமயத்திற்கு அரசியலமைப்பில் முதலிடம் அளித்தார்கள். மேலும் சிங்களவர் தமிழர் மேல் ஆதிக்கம் செலுத்துவதற்கு எதுவித தார்மீக உரிமையையும் கொண்டிருக்கவில்லை என்பதனை அவர் வலியுறுத்தினார்.


டி.எஸ்.சேனநாயக்க, டட்லி சேனநாயக்க, சேர். ஜோன் கொத் தலாவல ஆகியோர் பிரித்தானியர் இலங்கைக்கு சுதந்திரம் வழங்கிய காலத்தில் அவர்கள் மேல் வைத்திருந்த நம்பிக்கைக் குத் துரோகமிழைத்தனர் என 1956 தேர்தலுக்கு முன்னதான காலத்தில் செல்வநாயகம் வாதாடினார்.

சிங்களத் தலைவர்கள் சிறுபான்மையினரை அடக்கி வைக்கமாட்டார்கள் என்ற நம்பிக்கையில் இலங்கையின் ஆட்சிப் பொறுப்பை பிரித்தானியரிடம் ஒப்படைத்தார்கள். ஆனால் சிங்களத் தலைவர்கள் அதனைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி தமது பெரும்பான்மை எண்ணிக்கைப் பலத்தினால் தமிழரின் சட்டபூர்வமான உரிமைகளை மறுத்தனர்.

சிங்களவரைக் குடியேற்றும் முயற்சி தமிழ்ப் பிரதேசங்களில் முதன்முதலில் கிழக்கு மாகாணத்தின் தமிழ்ப் பிரதேசங்களான கல்லோயா, கந்தளாய் போன்ற இடங்களிலேயே



தனிச்சிங்கள மொழிச் சட்டத்திற்கு எதிரான தமிழர்களின் சத்தியாக்கிரகப் போராட்டம்- யாழ்ப்பாணம் (1951)



இலங்கை காவற்படையினர் தமிழரின் சத்தியாக்கிரகப் போராட்டத்தை தடை செய்தல்

## சுதந்திரத்தின் பின் இலங்கை அரசின் அரசியல் நடவடிக்கைகளும் தமிழ்த் தேசியத்தின் எழுச்சியும் (கி.பி.1948-கி.பி.1983)

மேற்கொள்ளப்பட்டன.

ஆரம்பத்தில் அரசாங்கத்தின் மீள்குடியேற்றத்திட்டம் நாட்டின் பொருளாதாரத்தையும் அதன் மக்களையும் அபிவிருத்தி செய்யவும் வேலையில்லா நிலையைக் குறைக்கவும் சன நெரிசல் மிக்க மேற்குக் கரையோரப் பிரதேச மக்களை பயிர்ச் செய்கை மேற்கொள்வதற்கு வளமான நிலமும் போதிய நீர்வசதியும் கொண்ட மக்கள் குறைவாக வாழும் இடங்களுக்குக் குடிப்பரம்பல் செய்வதற்கும் நடைமுறைப்படுத்தப்பட்டது.

வடமத்திய பிரதேசமும் அதன் அயல் பிரதேசங்களுக்கும் இவ்வாறான மீள்குடியேற்ற நோக்கங்களுக்குப் பொருத்தமானவையாகத் தோன்றின. இவை புவியியல் ரீதியாகவும் வரலாற்று ரீதியாகவும் தமிழ், சிங்கள ஆட்சியுரிமைப் பிரதேசங்களுக்கிடையிலான எல்லைகளாக அமைந்திருந்ததுடன் 1932 இல் இருந்தே குடியேற்றத்துக்காக சிங்கள அரசால் குறிவைக்கப்பட்டவையாகவும் இருந்திருக்கின்றன.

1951 வரையிலான காலப்பகுதியில் சுமார் 24 குடியேற்றத் திட்டங்கள் மேற்படி பிரதேசங்களில் நிகழ்ந்தன. இத்திட்டங்கள் அரசால் முன்பே நன்கு திட்டமிட்டபடி அண்மைக்காலம் வரையில் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டன.

கல்லோயாவில் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டங்கள் பகுதி பகுதியாக 1977களிலிருந்து பாரியளவில் நன்கு பிரபலமான துரித மகாவலி அபிவிருத்தித் திட்டம் வரையில் முன்னெடுக்கப்பட்டன. இத்தகைய குடியேற்றத் திட்டங்கள் மூலம் தங்களது நிலங்களில் நிகழ்ந்த அத்துமீறிய குடியேற்றம், பாராளுமன்றத்தில் தமிழரின் பிரதிநிதித்துவத்தைக் குறைப்பதற்கும் அவர்களுடைய பாரம்பரிய தாய் நிலங்களைப் பறிமுதல் செய்து தமிழரின் தேசியவாத உணர்வினை இல்லாதொழிப்பதற்காகவும் வெளிப்படையாக மேற்கொள்ளப்பட்டன எனத் தமிழர் தீவிரமாக நம்பினர்.

கல்லோயாத் திட்டம், கந்தளாய்த் திட்டம், மகாவலித் திட்டம் என்பன மூலமாக சில தமிழ்ப் பாரம்பரிய பிரதேசங்கள் மறைந்தொழிந்ததுடன் அவற்றில் சில சிங்களப் பிரதேசங்களுடன் இணைக்கப்பட்டதுடன் புதிதாகச் சில சிங்களப் பிரதேசங்கள் உருவாக்கப்பட்டும் காணப்பட்டன.

பாரம்பரிய தமிழர் தாய்நிலங்களில் ஒருமைப்பாட்டை இல்லாது ஒழிப்பதே அரசின் குடியேற்றத் திட்டத்தின் உச்ச நோக்கம் என்பது தமிழர் மத்தியில் தெளிவாகியது. இந்த நடவடிக்கைளும் ஆபத்துக்களும் விரக்தியுமே தமிழர்களை கிளர்ச்சியடைய வைத்தன.

சிங்கள அரசிடமிருந்தும் சிங்கள மக்களிடமிருந்தும் தமது நிலங்களை மீட்பதற்கும் பாதுகாப்பதற்கும் ஜனநாயக ரீதியில் போராட வைத்தது. அது முடியாது போகவே ஈற்றில் தமிழர் தமது தேசியத்தை வென்றெடுப்ப தற்காக ஆயுதம் ஏந்திப் போராடும் நிலைக்கு அவர் களைத் தள்ளியது.

1956இன் பின்னர் தமிழ்க் காங்கிரஸ் கட்சி அதன் தலைவர் ஜி.ஜி.பொன்னம்பலத்தின் கொள்கைகள், நடவடிக்கைகள் என்பனவற்றின் காரணமாக தமிழ் அரசியலிலிருந்து பின் தள்ளப்பட்டது.

தமிழரசுக் கட்சியும் அதன் தலைவர் செல்வநாயகமும் அதன் முக்கிய அங்கத்தவரும் தமிழர் அரசியல் முன்னிடம் வகித்தனர்.

இந்தியத் தமிழரின் பிரஜாவுரிமைப் பிரச்சினை, தேசியக் கொடிப் பிரச்சினை, சமஷ்டிக் கொள்கை, மொழிசார்ந்த உரிமைப் பிரச்சினைகள் குறிப்பாக தமிழ்மொழிக்குச் சம அந்தஸ்து வழங்கப்பட வேண்டும்.

(தொடரும்)

# இலங்கையின் இறையாண்மை அமெரிக்காவிடம் அடமானம்

## சபாநாயகரே காரணம்–காமினி



(கொழும்பு)

நாட்டின் இறையாண்மையை சபாநாயகர் கரு ஜெயசூரிய அமெரிக்காவிடம் விட்டுக் கொடுத்துள்ளார். அமெரிக்க நிறுவனத்தில் சம்பளம் பெறுபவர் பாராளுமன்றத்தில் சபாநாயகரின் ஆலோசகராக நியமிக்கப் பட்டமை இலங்கை அரசியல் வரலாற்றிலும், உலக அரசியல் வரலாற்றிலும் முதன்முறையாக இடம் பெற்றது என பாராளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் தலைமைக் காரியாலயத்தில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டின் தேவைகளுக்காக பாராளுமன்றம் செயற்படவில்லை.

மக்களின் பிரதிநிதிகள் மாத்திரமே பாராளுமன்றப் பிரதிநிதிகளாகச் செயற்பட வேண்டும். ஆனால் தற்போது அவ்வாறில்லை.

வெளிநாட்டு இராஜதந்திரிகள் உட்பட அரசாங்கத்திற்கு ஆதரவானவர்கள் அனைவரும் பாராளுமன்றத்தின் முக்கிய விடயங்களிலும் கலந்து கொள்ளும் நிலை ஏற்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# கடும் மழையால் நீரில் மூழ்கிய நாவலப்பிட்டி



(நாவலப்பிட்டி)

மலையகத்தில் பெய்த கடும் மழையால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்படைந்ததுடன் நாவலப்பிட்டி நகரம் நீரில் மூழ்கியது. நேற்று அதிகாலை முதல் பெய்து வரும் கடும் மழையால் நாவலப்பிட்டி பேருந்துத் தரிப்பிடத்திலிருந்து நாவலப்பிட்டி பொலிஸ் நிலையம் வரையில் கண்டி அட்டன் பிரதான வீதி நீரில் மூழ்கியதால் அவ் வீதியூடான போக்குவரத்து பாதிப்படைந்தது. (இ-7)

# அறநெறிப் பெருவிழாவும் நூல் வெளியீடும்

கிளிநொச்சி மாவட்ட இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் பொன். சுகந்தன் தலைமையில் அறநெறிப் பெருவிழாவும் நூல் வெளியீடும் முழங்காவில் கிருஷ்ணா மணி மண்டபத்தில் நாளை மறு தினம் ஞாயிற்றுக்கிழமை 23 ஆம் திகதி முற்பகல் 10 மணியளவில் நடைபெறும்.

இந்நிகழ்வில் முழங்காவில் மகா வித்தியாசாலை தேசிய பாடசாலை அதிபர் ப.ஆனந்தராசாவின் சிறப்புரையும் அறநெறி மாணவர்களின் கலை நிகழ்வுகளும் நூல் வெளியீடும் இடம் பெறும். நூல் வெளியீட்டுரையை கிருஷ்ணா அறநெறிப் பாடசாலை பொறுப்பாசிரியர் இ. குபேந்திரன் நிகழ்த்துவார். (இ)

# தொழில், வாழ்விடங்களை இழக்கும் தோட்ட மக்கள்

## திலகராஜ் கவலை

அரச கூட்டுத்தாபனங்கள், பிராந்திய பெருந்தோட்ட கம்பனிகளின் கீழான தோட்டங்களில் மாத்திரமின்றி ஐம்பது ஏக்கர் தோட்டங்கள் என அழைக்கப் படும் தனியார் தோட்டங்களிலும் தோட்டத் தொழிலாளர்கள் வாழ்கின்றனர்.

ஆனால், அத்தகைய கம்பனிகள் மூடப்பட்டு வெளியாருக்கு விற்கப்படுவதால் குறித்த தோட்டத்தில் காலம்காலமாக வாழ்ந்த மக்கள் தொழிலை இழக்க நேரிட்டுள்ளதுடன் அவர்களின் வாழ்விடங்களை அமைக்கக் காணி உரிமையையும் இழக்கின்றனர்.

இது குறித்து அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழ் முற்போக்குக் கூட்டணியின் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.திலகராஜ் தெரிவித்தார்.



இலங்கை காணி மீட்டல் அபிவிருத்திக் கூட்டுத்தாபன திருத்தச்சட்டம் மீதான விவாதம் நேற்றுமுன்தினம் பாராளுமன்றில் இடம்பெற்றது.

இந்த விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1755

Search for people, places and things


### விஷ்ணு

நான் எடுக்கும் முடிவு சரியா என்று எனக்குத் தெரியாது. ஆனால் எடுத்த முடிவை சரியாக்குவேன் - மாவீரன் அலெக்ஸ்சாண்டர்



### தினேஷ்

உன்னை குறை கூறும் பலருக்கு உத்தமனாக வாழ்வதை விட உன்னை நம்பும் சிலருக்கு நல்லவனாய் இரு



### மாறன்

பிரியாணியின் பிறப்பிடம் எது?
கிச்சன் சேர்



### அற்புதன்

முகம் பார்த்து வந்துவிடும் சில உறவுகள்...
அன்பு பார்த்து வந்துவிடும் ஒருசில உறவுகள்
பணம்பார்த்து வந்துவிடும் பல பல உறவுகள்-
ஆனால் கஷ்டம் பார்த்து தெரிந்துவிடும் உண்மையான உறவுகள்



### குணால்

ஏதோ... உங்களை மாதிரி சிலர் இருக்கிறதனாலதான் கொஞ்சம் மழை பெய்யுது
அப்படியா... இல்லைன்னா?
நிறையவே பெய்யும்



### ஜெரோம்

வார்த்தைகள் நம்முடையது என்பதற்காக மனதில் தோன்றுவதையெல்லாம் பேசாதீர்கள்...
சிலர் புரிந்து கொள்வார்கள்!
சிலர் பிரிந்து செல்வார்கள்



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் விழிப்புணர்வு பேரணி





மதங்களுக்கிடையே நல்லிணக்கத்தினை ஏற்படுத்தும் முகமாக விழிப்புணர்வு கருத்தரங்கும் விழிப்புணர்வு சுவரொட்டிகள் ஒட்டும் நிகழ்வும் வவுனியாவில் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

தேசிய சமாதான பேரவை மற்றும் கிராம அபிவிருத்தி நிறுவனத்தின் ஒழுங்கமைப்பில் வவுனியா பிரதேச சர்வமதக் குழுவின் அனுசரணையுடன் மதங்களுக்கிடையே நல்லிணக்கத்தினை ஏற்படுத்தும்வகையில் விழிப்புணர்வு கருத்தரங்கு வவுனியா இரண்டாம் குறுக்குத் தெரு வீதியில் அமைந்துள்ள விருந்தினர் விடுதியில் நடைபெற்றது.

இவ் விழிப்புணர்வு கருத்தரங்கின் பின்னர் குறித்த விடுதியிலிருந்து இரண்டாம் குறுக்குத்தெரு வீதியூடாக பழைய பேருந்து நிலையம் வரை சுவரொட்டிகளை கையில் ஏந்திய வண்ணம் அனைவரும் பேரணியாக சென்றனர். அதன் பின்னர் பழைய பேருந்து நிலையத்திற்கு அருகே விழிப்புணர்வு சுவரொட்டிகளை சர்வ மதத்தலைவர்களுடன் இணைந்து பேரணியில் கலந்து கொண்டிருந்த அனைவரும் ஒட்டினார்கள்.

தேசிய சமாதான பேரவையின் வவுனியா மாவட்ட இணைப்பாளர் யு.எம்.உவைஸ் தலைமையில் இடம்பெற்ற இச் செயற்திட்டத்தில் சமூக பொலிஸ் பிரிவு பொலிஸ் பரிசோதகர் சி.எம். அரவிந்த, பொலிஸார், கிராம சேவையாளர்கள், தனியார் மற்றும் அரச திணைக்களங்களின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், இளைஞர்கள், மதத்தலைவர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் என பலரும் பங்கு பற்றியிருந்தனர். (9-250)

## கசிப்புடன் ஒருவர் கைது

முல்லைத்தீவு கல்மடு குளப் பகுதியில் கசிப்பு காய்ச்சிய நபர் ஒருவரை சிறப்பு அதிரடிப் படையினர் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

கல்மடு குள கரியல் பகுதியில் சட்டவிரோத மதுபான உற்பத்தி இடம்பெற்று வருவதாக முல்லைத்தீவு மாவட்ட சிறப்பு அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவலையடுத்து நேற்று முன்தினம் குறித்த பகுதிக்கு சென்ற அதிரடிப்படையினர் கசிப்பை காய்ச்சிக்கொண்டு அதனை கானில் எடுத்துச்செல்ல முற்பட்ட போது 15 லீற்றர் கசிப்புடன் கல்மடு பகுதியினை சேர்ந்த ஒருவரை கைது செய்து புதுக்குடியிருப்பு பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். மேலதிக நடவடிக்கைகளை பொலிஸார் மேற் கொண்டுள்ளனர். (9-281)

# எங்களைக் கருணைக்கொலை செய்யுங்கள் சிறையில் இலங்கைத் தமிழர்கள் கோரிக்கை

(திருச்சி)

திருச்சி மத்திய சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை தமிழர்கள் நான்கு பேர் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதாக தமிழக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பாஸ்கரன், ரமேஷ், அருளின்பதேவன் மற்றும் செல்வம் ஆகிய நான்கு பேரே இவ்வாறு உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதாக அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தம்மை பொய் வழக்கில் கைது செய்துள்ளதாகவும், எனவே வழக்கை விரைவில் முடித்து தம்மை விடுதலை செய்யவேண்டும் எனவும் அல்லது கருணை கொலை செய்து விடுமாறு கோரி குறித்த நான்கு பேரும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அந்த வகையில், பாஸ்கரன், ரமேஷ் ஆகியோர் 3ஆவது நாளாகவும், அருளின்பதேவன், செல்வம் ஆகியோர் 2ஆவது நாளாகவும் உண்ணாவிரத போராட்டத்தை தொடர்ந்தும் முன்னெடுத்துள்ளதாக அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# மன்னார் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வு

மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் மன்னார் மாவட்டத்தில் மக்கள் எதிர் நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக ஆராயும் விசேட கலந்துரையாடல் நேற்று வியாழக்கிழமை மன்னார் ஆகஸ் விடுதியில் இடம் பெற்றது.

மன்னார் மாவட்டத்தில் உள்ள சிவில்,சமூக அமைப்புக்களின் பிரதி நிதிகள், தன்னார்வ தொண்டு அமைப்புக்களின் பிரதிநிதிகள், கிராமமட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலரையும் ஒன்றிணைத்து குறித்த கலந்துரையாடல் இடம்பெற்றது.

மன்னார் சமூக, பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் இயக்குநர் ஜாட்சன் பிகிறாடோ தலைமையில் இடம் பெற்ற குறித்த கலந்துரையாடலில் மன்னார் மாவட்டத்தில் படையினர் வசம் உள்ள காணிகளை நல்லிணக்க அடிப்படையில் மீட்டுக்கொள்ளுதல், விடுவிக்கப்பட்ட காணிகளில் குடியேறிய மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள்,மக்களின் நில மீட்பு போராட்டங்களுக்கு மேற்கொள்ள வேண்டிய உதவித் திட்டங்கள் உட்பட மன்னார் மாவட்டத்தில் அண்மைக்காலமாக மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இதில் கலந்து கொண்ட பிரதிநிதிகள் மற்றும் பொது மக்கள் தமது கருத்துக்களை முன்வைத்ததுடன் எதிர்காலத்தில் மன்னார் மாவட்டத்தில் இயங்கி வரும் பொது அமைப்புக்கள் அனைத்தும் ஒன்றுபட்ட இணையமாக இயங்குவதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (9-285)

# மன்னாரில் தியாகிகள் தினம்



ஈழ மக்கள் புரட்சிகர முன்னணியின் ஸ்தாபக தலைவர் தோழர் பத்மநாபாவின் 29 ஆண்டு தியாகிகள் தினம் நேற்று முன் தினம் மன்னாரில் உள்ள ஈ.பி. ஆர்.எல். எப்.கட்சியின் மாவட்ட அலுவலகத்தில் மன்னார் மாவட்ட அமைப்பாளர் எஸ்.ஆர். குமரேஸ் தலைமையில் இடம் பெற்றது.

இதில் வட மாகாண சபையின் முன்னாள் சுகாதார அமைச்சர் ஜீ. குணசீலன், தமிழீழ விடுதலை இயக்கத்தின் (டெலோ) மாவட்ட துணை அமைப்பாளர் பற்றிக் விஜோ, கட்சியின் உறுப்பினர்கள், முக்கியஸ்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியிருந்தனர். (9-285)

# ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய நடவடிக்கை

## வடக்கு ஆளுநர் தெரிவிப்பு

வவுனியாவில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுப்பதாக வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார். வவுனியா செக்கடிப்புலவு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் புதிய வகுப்பறை கட்டடத் தொகுதியை நேற்று முன்தினம் திறந்து வைத்ததன் பின்னர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், பெற்றோரும் ஆசிரியரும் சேர்ந்தால் தான் மாணவர் சமூகம் வளரும், நலம் பெறும்.இப் பாடசாலைக்கு சிங்கள ஆசிரியர்கள் இல்லை என்று கேள்விப்பட்டேன். இந்த வாரத்திலே சிங்கள ஆசிரியரை கொடுக்க முயற்சி செய்கின்றேன்.

நாங்கள் இரண்டு மொழியையும் படிக்க வேண்டும்.இந்த மாவட்டமானது இரண்டு நாகரிகங்களை கொண்ட மாவட்டம். ஒருபுறம் சிங்களமும்.

மறுபுறம் தமிழும் இரண்டு பாரிய நாகரிகங்களை கொண்ட மாவட்டம். ஆகையினாலே இரண்டு நாகரிகங்களையும் பொருத்தி இரண்டு மொழியையும் அறிந்து ஒரு முழுமையான குடிமகனாக வாய்ப்பையும் சக்தியையும் இறைவன் எங்களுக்கு கொடுக்கட்டும் என மேலும் தெரிவித்தார். (9-250)

# தலவாக்கலையில் தீ 10 வீடுகள் சேதம்



தலவாக்கலை சென்.கிளயார் தோட்டம் ஸ்டேலின் பிரிவில் நேற்று முன்தினம் பிற்பகல் 2.30 மணியளவில் ஏற்பட்ட தீ விபத்தில் 10 தொழிலாளர் குடியிருப்புகள் தீக்கிரையாகியுள்ளன.

இதில் சில வீடுகள் முற்றாகவும் சில வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்ததுடன் இந்த வீடுகளில் குடியிருந்த 5 குடும்பங்களைச் சேர்ந்த 28 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வீட்டிலிருந்தவர்கள் கூச்சலிட்டதை அடுத்து அயலவர்கள் ஓடி வந்து தீயை பாரிய சிரமத்திற்கு மத்தியில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். (இ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | கொடிகாமம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 100 | 80 | 80 | 80 | 100 |
| உருளைக்கிழங்கு | 140 | 110 | 110 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 350 | 500 | 320 | 350 | 400 |
| தக்காளி | 100 | 80 | 60 | 80 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 180 | 140 | 160 | 120 |
| கோவா | 100 | 80 | 60 | 100 | 100 |
| கரட் | 160 | 140 | 150 | 200 | 200 |
| பூசணி | 100 | 100 | 100 | 120 | 100 |
| புடோல் | 100 | 90 | 80 | 80 | 100 |
| வாழைக்காய் | 80 | 80 | 60 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 180 | 150 | 180 | 200 | 200 |
| பெரிய வெங்காயம் | 120 | 120 | 120 | 120 | 120 |
| பாகற்காய் | 160 | 200 | 200 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 80 | 50 | 70 | 60 | 80 |
| கருணைக் கிழங்கு | 60 | 70 | 60 | 60 | 60 |
| பயற்றங்காய் | 100 | 100 | 80 | 80 | 100 |
| லீக்ஸ் | 150 | 90 | 70 | 120 | 100 |
| பீற்றூட் | 60 | 80 | 60 | 80 | 100 |
| கறிமிளகாய் | 200 | 150 | 220 | 200 | 200 |
| முருங்கைக்காய் | 180 | 200 | 150 | 200 | 160 |
| போஞ்சி | 200 | 160 | 210 | 200 | 160 |
| கத்தரிதம்புள்ள | 80 | 60 | 60 | — | 80 |
| கீரை -1பிடி | 40 | 25 | 20 | 20 | 30 |
| தேசிக்காய் | 300 | 400 | 280 | 300 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 40 | 30 | 30 | 20-40 |
| இராசவள்ளி | 200 | 150 | 120 | 160 | 140 |
| வாழைப்பூ | 140 | 200 | 200 | 240 | 160 |
| முள்ளங்கி | 80 | 60 | 40 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 30 | 30 | 20 | 40 | 40 |
| வல்லாரை | 20 | 40 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 50 | 100 | 110 | 60 | 100 |




# எதுவும் ஒரு தொழில் தான்



இரத்தினபுரி என்னும் சிற்றூருக்கு மாதவன் என்னும் இளைஞன் வேலை தேடி வந்தான். அந்த ஊரில் எல்லா இடங்களிலும் வேலை தேடி அலுத்துப் போனான்.

எங்கும் வேலை கிடைக்கவில்லை. காரணம் இவன் வெளியூர்க்காரன். இவனை நம்பி எப்படி வேலை கொடுப்பது என்று நிறையப் பேர் வேலை தர மறுத்து விட்டனர். மாதவன் பாவம் சோர்ந்து போய் விட்டான். அவனுக்கு அவன் அம்மாவிடம் சொல்லி வந்தது ஞாபகம் வந்தது.

அவன் அம்மா சுமார் ஐம்பது மைல் தள்ளி வசித்து வந்தார். கூலி வேலையாளாக அங்குள்ள விவசாயத் தொழிலுக்குச் சென்று கொண்டிருந்தார். மாதவனின் அப்பா இரண்டு வருடங்களுக்கு முன்னர் காலமாகி விட்டார். இதனால் வீட்டில் கஷ்டமான நிலைமை வந்து விட்டது. மாதவன் அப்பொழுது அங்குள்ள பாடசாலையில் படித்துக் கொண்டிருந்தான். அப்பா காலமாகிய பின் வீட்டில் நிலவிய வறுமையைக் கண்டு அம்மாவிடம் நான் எப்படியாவது வெளியூர் சென்று பணம் சம்பாதித்து உனக்கு அனுப்புகிறேன் என்று உறுதியளித்துவிட்டு வந்திருந்தான். ஆனால் இங்கு நிலைமையோ வேறாக இருந்தது. எங்கும் வேலை கிடைக்கவில்லை. என்ன செய்வது? பசி வேறு அவன் காதை அடைத்தது. அங்குள்ள ஒரு கோவிலில் உட்கார்ந்து அடுத்து என்ன செய்வது என்ற கவலையில் ஆழ்ந்திருந்தான். மறுபடி ஊருக்கே போய் விடலாமா? என்ற எண்ணம் அவனுக்கு வர ஆரம்பித்து விட்டது.

அப்பொழுது ஒரு பெரிய கார் வந்து நின்றது. அதிலிருந்து பெண்களும் குழந்தைகளும் இறங்கி கோயிலுக்குள் வந்தனர். வந்தவர்கள் தங்களது செருப்புகளை எங்கு கழற்றி வைப்பது என்று யோசித்தனர். இவன் கோயில் வாசலில் உட்கார்ந்திருப்பதை கண்டவர்கள் தம்பி இந்த செருப்புக்களை எல்லாம் பார்த்துக்கொள் என்று எல்லோரும் செருப்பைக் கழற்றி வைத்து விட்டு உள்ளே சென்றனர்.

மாதவன் திகைத்து நின்றான். அவன் அவர்களுக்கு பதில் சொல்ல நினைக்கும் முன்னரே அவர்கள் தங்கள் செருப்புக்களை அவன் முன்னால் கழற்றி வைத்து விட்டு விறுவிறுவென உள்ளே நுழைந்து விட்டதால் இனி எங்கும் செல்ல முடியாது, அவர்கள் வரும் வரை காத்திருந்து அவர்கள் செருப்புக்களை ஒப்படைத்து விட்டு செல்வதுதான் நல்லது என்று முடிவு செய்தான். பசி வேறு அவனை மயக்க நிலைக்குக் கொண்டு சென்றது.

உள்ளே சென்றவர்கள் ஒரு மணி நேரம் கழித்தே வெளியே வந்தனர். வந்தவர்கள் இவன் அருகில் வந்தனர். அப்பொழுது அவன் பசி மயக்க நிலையிலேயே இருந்தான். அவர்கள் விறுவிறுவென செருப்புக்களை மாட்டிக்கொண்டு இவனைப் பார்க்க இவன் நிலைமையைக் கண்டு அந்த கூட்டத்தில் இருந்த பெரியவர், ஐம்பது ரூபாய் எடுத்து அவன் கையில் கொடுத்தார். இவனுக்கு என்ன கொடுக்கிறார் என்று தெரியாமல் அவர் கொடுத்ததை வாங்கிக்கொண்டவன் அதை உற்றுப் பார்க்க ரூபாய் ஐம்பதாக இருக்கவும் பயந்து சேர் ஐம்பது ரூபாய் கொடுக்கிறீங்க சேர், இவ்வளவு வேண்டாம் சேர் என்று சொன்னான். அந்த பெரியவர் புன்சிரிப்புடன் தம்பி உன்னை பார்த்தா பசியில துடிக்கிற மாதிரி இருக்கு, போய் நல்லாச் சாப்பிடு, அதற்குத்தான் கொடுத்தேன் என்று சொல்லிவிட்டு காரில் ஏறிச் சென்று விட்டார்.

மாதவனுக்கு அந்த பசியிலும் ஆச்சரியமாக இருந்தது. என்ன ஒரு ஆச்சரியம். காலையில் பத்து பைசா இல்லாமல் இந்த ஊருக்கு வேலை தேடி வந்த நான் இப்பொழுது ஐம்பது ரூபாய் கையில் வைத்திருக்கிறேன். ஆண்டவன் யாரையும் கைவிடுவதில்லை. நாம் மட்டும் மனதை இழக்காமல் இருந்தால் போதும். மனதுக்குள் வைராக்கியம் வர எழுந்தவன் முதலில் பசியை போக்க ஏதாவது சாப்பிட்டு விட்டு வந்து யோசிக்கலாம் என்று முடிவு செய்தான்.

சாப்பிட்டு வந்தவுடன் கோயில் நிர்வாக அலுவலகத்துக்கு வந்து ஐயா கோயிலுக்கு வருபவர்களின் செருப்புக்களை நான் பார்த்துக்கொள்ள அனுமதி வேண்டும் என்று கேட்டான்.

அவனுடைய நல்ல நேரம் அப்பொழுதுதான் அங்கு ஒருவர் செருப்பைக் கழற்றி வைத்துவிட்டு கோயிலுக்குள்ளே சென்றுவிட்டு வெளியே வந்து பார்த்தபோது செருப்புக் காணாமல் போயிருந்தது. உடனே நிர்வாக அலுவலகத்திற்கு வந்து புகார் கொடுத்துக்கொண்டிருந்தார். இவன் போய் நான் பார்த்துக்கொள்கிறேன் என்று சொல்லவும் கோயில் நிர்வாகம் மகிழ்ச்சியுடன் அனுமதி கொடுத்து அதற்குண்டான சிறு தொகை ஒன்றை சொல்லி அதனைப் பெற்றுக் கொள் என்று அனுமதி கொடுத்து விட்டது.

நாட்கள் நகர்ந்தன. சுமார் ஆறு மாதங்கள் ஓடி விட்டன. இப்பொழுது மாதவன் கோயில் ஒதுக்கிக் கொடுத்த இடத்தில் செருப்புக்களை பாதுக்காக்க வசதி ஏற்பாடு செய்து அதனை கவனித்துக் கொள்ள, அம்மாவை வர சொல்லி விட்டான். அது மட்டுமல்ல அங்கு வரும் இரு சக்கரம், நாலு சக்கர வண்டிகளைப் பாதுகாக்கும் வேலையையும் கோயில் நிர்வாகத்திடம் பெற்று, வாகனங்களைப் பாதுக்காக்கும் வேலையையும் பார்த்துக்கொள்கிறான்.

கையில் கொஞ்சப் பணமும் சேர்த்து கொண்டிருக்கிறான்.

அவன் அம்மாவிற்கு பையன் படிப்புப் பாழாகி விட்டதே என்ற கவலை இருந்தாலும் வீட்டில் வறுமை ஒழிந்து விட்டதே என்ற நிம்மதியில் இருந்தார்.


மாதவன் இப்பொழுது சுறுசுறுப்பான செருப்புப் பாதுகாப்பு, இரு சக்கர வாகன பாதுகாப்பு இரு வேலைகளையும் திறம்பட கவனித்துக் கொண்டாலும் எதிர்காலத்தில் அடுத்துப் பெரிய வேலை ஏதாவது எடுத்து செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் இருக்கிறான்.

அது மட்டுமல்ல, தன் கல்வியை எதிர்காலத்தில் எப்படியாவது நிறைவேற்றிக் கொள்ள வேண்டும் என்று மனதுக்குள் சபதம் எடுத்துக் கொண்டிருக்கிறான்.

குட்டீஸ் 'சாதாரண செருப்பு பாதுகாப்புத்தானே" என்று நினைக்காமல் அதை பாதுகாப்பது கூட ஒரு தொழிலாக நினைத்து முன்னேறி இருக்கும் மாதவனை பாராட்டி விடுவோம்.

வறுமையைக் கண்டோ அல்லது ஏனைய துன்பங்களைக் கண்டோ மனம் தளராமல் இருந்தாலே கண்டிப்பாய் அதற்கு நல்ல தீர்வு கிடைக்கும் என்பதை இந்த கதையில் தெரிந்து கொண்டோமல்லவா?

## 6 வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்



## விடுகதைகளும் விடைகளும்

- உடல் இல்லாதவன் ஊரெல்லாம் பவனி வருவான். அவன் யார்?

காற்று

- வெளியே வெள்ளி, உள்ளே தங்கம். அது என்ன?

முட்டை

- பகலில் எரியா விளக்கு, இரவில் அணையா விளக்கு. அது என்ன?

நிலா

- தங்கை தீட்டிய ஓவியம் தரையில் தவழ்கிறது. அது என்ன?

கோலம்

- அனைவரையும் ஆட்டிப் படைக்கும், ஆதவன் வந்தால் ஓடிப்போகும். அது என்ன?

குளிர்

கனவு என்பது தூக்கத்தில் காண்பதல்ல.உங்களை தூங்க விடாமல் செய்வது. –அப்துல் கலாம்

வலம்புரி
T.P: 021 567 1530
website : www.valampurii.lk

# கிழக்கு மாகாணத்தை பறிகொடுக்கும் அறிகுறி

அரசியல் அராஜகங்கள் மலிந்த நாடாக இலங்கை மாறிவிட்டது.

இனம், மதம், மொழி என்ற அடிப்படையில் இந்த அநியாயங்கள் நடந்தாகின்றன.

இதில் ஒன்றுதான் கல்முனையில் இருக்கக் கூடிய தமிழ்ப் பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்துவதைத் தடுக்கின்ற நடவடிக்கையாகும்.

கல்முனை வடக்கு தமிழ்ப் பிரதேச செயலகத்தை தரமுயர்த்துமாறு அப்பகுதித் தமிழ் மக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் அந்தப் பிரதேச செயலகத்தை தரமுயர்த்தக்கூடாது என முஸ்லிம் அரசியலும் அதனோடு சேர்ந்தவர்களும் கோரிக்கை முன்வைப்பது எந்த வகையிலும் நியாயமாகாது.

எங்கள் பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்துங்கள் என்று முஸ்லிம் அரசியல்வாதிகள் கேட்பார்களாக இருந்தால் அது நியாயமானது.

இதைவிடுத்து, தமிழ் மக்களுக்கான பிரதேச செயலகத்தை தரமுயர்த்த வேண்டாமென்று கேட்பதானது அடிப்படை நியாயத்துவமுடையதாகத் தெரியவில்லை.

ஓர் இனத்துக்குக் கிடைக்கக்கூடிய நிர்வாக வசதிகளை இன்னொரு இனம் தடுப்பது, குறித்த பிரதேசத்தை தம் வசப்படுத்துகின்ற பின்னணியில் இடம்பெற முடியுமேயன்றி வேறில்லை.

இங்குதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தூரநோக்கற்ற அரசியல் பிழைப்பு வினையாக அமைந்திருப்பதைக் காணமுடியும்.

அதாவது கிழக்கு மாகாணத்தின் முதலமைச்சராக ஒரு முஸ்லிம் இனத்தவர் வருவதற்கான சூழ்நிலையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கி விட்டது.

இதன் காரணமாக கிழக்கை முஸ்லிம் மாகாணமாக மாற்றியே ஆக வேண்டுமென்ற தீர்மானம் எடுக்கப்பட்டது.

தமிழ் மக்களின் காணிகளைக் கபளீகரம் செய்வது, தமிழ் இனத்தவர்களை இஸ்லாமிய மதத்துக்கு மதமாற்றம் செய்வது, இஸ்லாமிய பல்கலைக்கழகத்தை அமைப்பது, அரபு மொழிக் கலாசாரத்தை உருவாக்குவது என்ற மிகப்பெரும் திட்டங்களை முஸ்லிம் அரசியல்வாதிகள் மிகக் கச்சிதமாகச் செய்து வருகின்றனர்.

ஆனால் எங்கள் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒரு பகுதியினர் யார் பணம் தந்தாலும் அதை மண்டியிட்டு ஏற்றுக் கொள்வோம் என்பது போலச் செயற்படுகின்றனர்.

இந்த நீசத்தனத்தால் தமிழ் மக்களின் தாயகமாக இருந்த கிழக்கு மாகாணத்தின் பெரும் பகுதியைப் பறிகொடுத்து விட்டோம்.

இத்தகைய ஓர் இக்கட்டான சூழ்நிலையில் தான், கல்முனை வடக்கு தமிழ்ப் பிரதேச செயலகத்தை தரமுயர்த்துவதை முஸ்லிம் அரசியல்வாதிகளும் அவர்களோடு சேர்ந்த முஸ்லிம் தரப்புகளும் தடுக்க முற்பட்டுள்ளனர்.

இவ்வாறான செயற்பாட்டை முஸ்லிம் தரப்பு செய்யுமாக இருந்தால், அதற்கான பதிலடியை தமிழ் மக்கள் அகிம்சை வழியில் வெளிப்படுத்துவது மிக மிக அவசியமாகும்.

# படகு விபத்து; 15 பேர் பலி!

(ஜகார்த்தா)

இந்தோனேஷியாவின் ஜகார்த்தாவில் படகு ஒன்றில் 50க்கும் மேற்பட்டோர் பயணித்த நிலையில் படகு மூழ்கியதில் 15க்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததாக அந்நாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.

எனினும் அந்நாட்டு மீட்புப் படையினர் விரைந்து செயற்பட்டதில் 30க்கும் மேற்பட்டோரை மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

அத்தோடு சம்பவம்தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய இரண்டு உணவகங்களுக்கு சீல்

(கரணவாய்)

சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கிய இரண்டு உணவகங்களுக்கு சீல் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவிட்டது.

பருத்தித்துறை நகர் பகுதியிலுள்ள இரண்டு உணவகங்களுக்கு எதிராக தலா ஐந்து குற்றச்சாட்டுக்கள் வீதம் சுகாதாரப் பகுதியினரால் கடந்த திங்கட்கிழமை பருத்தித்துறை நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இதில் பத்து குற்றத்திற்குமாக 50 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டதுடன், இரண்டு உணவகங்களையும் சுகாதார விடயத்தில் பூரண திருப்தியை ஏற்படுத்துமாறும் உத்தரவிடப்பட்டது. (இ-60)

## புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு

ஆரம்ப கைத்தொழில் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் கீழ் உள்ள இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு இன்று பிற்பகல் 1.30 மணியளவில் யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

யாழ்.மாவட்ட அரச அதிபர் நா. வேதநாயகன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன், சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலன் ஆகியோர் கலந்துகொள்வர். (5-9)

## சேவைநலன் பாராட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ். வலயம், கோப்பாய்க் கோட்ட கணித பாட ஆசிரிய ஆலோசகராக கடமையாற்றி ஓய்வு பெற்ற ஈ.எவ.ஆர். ஜெயக்குமாருக்கு சேவை நலன் பாராட்டுவிழா இன்று 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி கலையரங்கில் நடைபெறும்.

இவ்விழாவில் கணித பாட ஆசிரியர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கணித ஆசிரியர் மன்றம் கேட்டுக் கொண்டுள்ளது.(5)

## இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் புலமைப் பரிசில் வழங்கல் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிமுதல் 3.30 மணிவரை மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெறும்.

இதில் வடமாகாண ஆளுநர் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் குழந்தைகளுக்கான ஓய்வூதிய பாதுகாப்புத் திட்டத்தில் இணைந்து கடந்த வருடம் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றி சித்திபெற்ற 74 மாணவர்களுக்கு புலமைப்பரிசிலுக்கான காசோலைகள், பரிசில்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக்கப்படும்.(5)

## மூன்று வர்த்தகர்களுக்கு 60 ஆயிரம் அபராதம்

(யாழ்ப்பாணம்)

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் சட்டங்களை மீறிய யாழ். வர்த்தகர்கள் மூவருக்கு நேற்று யாழ். நீதவான் நீதிமன்றம் 60 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது.

யாழில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பின் போது சட்டங்களை மீறிய மூன்று வர்த்தகர்களுக்கு எதிராக யாழ். நீதவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட போது குறித்த மூவருக்கும் தலா 20 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது. (இ-5-10)



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### எந்தெந்த சாபங்களினால் என்னென்ன பாவங்கள் ஏற்படும்?

**பூமி சாபம்**

ஆததரததல பூமியை சதா காலால உதைபபதும, பாழ்படுத்துவதும், தேவையற்ற பள்ளங்களை உண்டு பண்ணுவதும், அடுத்தவர் பூமியைப் பறிப்பதும் பூமி சாபததை உணடாகும. பூமசாபம நரக வேதனையைக் கொடுக்கும்.

**கங்கா சாபம்**

பலர அருநதககூடிய நரை பாழ செயவதாலும, ஓடும நதியை அசுத்தம் செய்வதாலும், கங்கா சாபம் வரும். கஙகா சாபததால எவவளவு தோணடினாலும நர கிடைக்காது என்பது உண்மை.

**விருட்ச சாபம்**

பச்சை மரத்தை வெட்டுவதும், கனி கொடுக்கும் மரததை பட்டுபபோகச செயவதும, மரததை எரிபபதும, மரங்கள் சூழ்ந்த இடத்தை, வீடு கட்டும் மனையாக்குவதும் விருட்ச சாபத்தை ஏற்படுத்தும். விருட்ச சாபத்தினால், கடன் மற்றும் நோய் உண்டாகும் எனவே எச்சரிக்கை. (தொடரும்)

## இந்து சமய தத்துவங்கள் ஐநூறு

அன்றே மலரக்கூடிய மொட்டுக்களை இறைவனுக்குச் சூட்டலாம். மறுநாள் மலரக்கூடிய மொட்டுக்களைப் பறித்துச் சூட்டக்கூடாது.

ஆந்தை அலறுவது தீமையை அறிவிப்பதாகும். அபசகுனமாகும்.

காக்கை கரைந்தால் விருந்து வரும் என்பார்கள்.

ஆந்தை அலறுவது பின்னே வரும் இடரை முன்னே அறிவிப்பதாகும்.

அதற்குப் பரிகாரம் இறைவனை வழிபட்டு துயர்கெடத் திருவருளைத் துதிப்பதேயாகும்.



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### வாழ்வின் நோக்கம்

நமது முதலும் மிக முக்கியமானதுமான பொறுப்பு இவ்வுலகில் சேவை செய்வதாகும்.

உனது வாழவில பய உணாசசி இருககிறது எனறால அது பொறுப்புணர்வுக் குறைவால்தான். உனது வாழ்வில் குழப்பம் இருக்கிறது என்றால் அது பொறுப்புணர்வுக் குறைவால்தான்.

"இவவுலகில நான சேவை செயயவே இருககிறேன" என்ற நினைப்பே "நான்" என்பதை இல்லாது செய்கிறது. "நான்" இல்லாத போது கவலைகளும் இல்லாது போகின்றன. சேவை என்பது நீ வசதி படைத்தவன் என்பதனாலோ அல்லது மகிழ்ச்சிக்காகவோ செய்யப்படுவதல்ல. வாழ்வின் முடிவான நோக்கமே சேவைதான்.

பொறுப்புணர்வு இல்லாத மனம் துன்பமயமானது பொறுப்புடைய மனம் கடுமையான (கரடுமுரடான) சூழ்நிலைகளை அனுபவிக்கலாம். ஆனால் கடுமையான உழைப்பிற்குத் தகுந்த பலனைப் பெறும்.

நீ சேவை செய்வதை வாழ்வின் ஒரே நோக்கமாகக் கொண்டால் அது பயத்தை அகற்றுகிறது, மனதை ஒருமுகப்படுத்துகிறது, வாழ்வின் நோக்கத்திற்கு, நிறைவு, செயல், நீண்டகால மகிழ்ச்சி ஆகியவற்றைத் தருகிறது- குறுகிய காலப் பிரச்சினைகளும் இருக்கலாம்.!

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை யாழ்.பிரதேசத்தில மருதனார்மடம் ஒரு பகுதி, இணுவில் ஒரு பகுதி, உப்புமடம், கோண்டாவில் புகையிரத நிலைய பிரதேசம், தாவடி, சுதுமலை, பத்தனை, மாப்பியன், இலங்கை வங்கி பிரதேசம் சுன்னாகம், மானிப்பாய் வைத்தியசாலைப் பிரதேசம், கார்கில்ஷ் பூட்சிற்றி மானிப்பாய், ஈஞ்சடி வைரவர் கோவலடி, மேதர், மயிலிட்டி ஒரு பகுதி ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில புளியம் பொக்கணை, தருமபுரம் கல்மடு நகர், உழவனூர், நெத்தலியாறு, தொட்டியடி, கண்ணகி நகர், விசுவமடு, இளங்கோபுரம், மாணிக்கபுரம், தேராவில் ஒரு பகுதி, விசுவமடு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், கனகபுரம், உருத்திரபுரம், ஜெயந்திநகர், செல்வநகர், உருத்திரபுரம் பலநோக்கு கூட்டுறவுச்சங்க அரிசி ஆலை ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில பட்டாணிச்சூரிலிருந்து நெளுக்குளம் வரை, பட்டாணிச்சூரிலிருந்து பம்பைமடு வரை, சுயன் அரிசி ஆலை, அஷ்வி அரிசி ஆலை, ஸ்ரீரங்கன் அரிசி ஆலை, தெய்வேந்திரம் அரிசி ஆலை, ஜீவன் அரிசி ஆலை, வவுனியா தொழில்நுட்பகல்லூரி ஆகிய பிரதேசங்களிலும், மின் தடைப்படும்.

# பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டம்
# சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி சம்பியன்




வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 18 வயதிற்குட்பட்ட ஆண்களிற்கான உதைபந்தாட்ட போட்டியின் பரபரப்பான ஆட்டத்தில் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றியது.

இதன் இறுதியாட்டம் கடந்த புதன்கிழமை மன்னார் சென் சேவியர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இறுதியாட்டத்தில் யாழ்.சென் பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரி அணி மோதியது.

இடைவேளைக்கு முன்னரான ஆட்டத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியின் ஆதிக்கம் மேலோங்க ஜோன்ராஜ். ஜோன் லோயஸ் ஆகியோர் கோல்களை போட சென்பற்றிக்ஸ் கல்லூரி அணி இடைவேளைக்கு முன்னரான ஆட்டத்தில் 2:0 என்ற கோல்கணக்கில் முன்னிலை வகித்தது.

இடைவேளைக்கு பின்னரான ஆட்டத்தில் வதிரி தேவரையாளி அணி வீரர் லக்ஸ்மன் பலத்த போராட்டத்தில் ஒரு கோலைப் போட ஆட்டம் விறுவிறுப்பின் உச்சக் கட்டத்தை எட்டியது.

இருப்பினும் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி ஆட்ட நேர முடிவில் 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றியது(க-60)

# கிண்ணம் வென்றது அச்சுவேலி மத்தி



அமரர் சு.தற்பரன் ஞாபகார்த்தமாக நடத்தப்பட்ட கிரிக்கெட் போட்டியில் அச்சுவேலி மத்தி அணி சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றியது.

அச்சுவேலி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் அச்சுவேலி மத்தி அணியை எதிர்த்து கோல்ஸ்ரார் அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய அச்சுவேலி மத்தி வழங்கப்பட்ட 10 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகளை இழந்து 85 ஓட்டங்களைப் பெற்றனர்.

அவ்வணி சார்பில் இந்துஜன் 40, பானுஜன் 16 பெற்றனர். பந்து வீச்சில் கோல்ஸ்ரார் அணி சார்பில் விந்துஜன், கஜன் ஆகியோர் 2 விக்கெட்டுகளையும் பிறேம் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கோல்ஸ்ரார் அணி வழங்கப்பட்ட 10 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகளை இழந்து 81 ஓட்டங்களை மாத்திரம் பெற 5 ஓட்டங்களால் வெற்றி பெற்றது அச்சுவேலி மத்தி அணி. அவ்வணி சார்பில் பிறேம் 39, ஹரிகரன் 27 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்து வீச்சில் அச்சுவேலி மத்தி அணி சார்பில் இந்துஜன் 3, தவசீலன் 2 விக்கெட்டுகளை கைப்பற்றினர். ஆட்ட நாயகனாக அச்சுவேலி மத்தி அணியை சேர்ந்த இந்துஜன் மற்றும் தொடர் ஆட்ட நாயகனாக கோல்ஸ்ரார் அணியை சேர்ந்த கஜன்ராஜ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (க-60)



பொற்பதி சமூக சேவைகள் ஒன்றியத்தினரால் தே.றேதிஸின் அனுசரணையில் ஒரு தொகுதி சீருடைகள் பொற்பதி சென் பீற்றசன் விளையாட்டுக் கழகத்திற்கு அண்மையில் வழங்கி வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் மணற்காட்டு பங்குத்தந்தை டியூக் வின்சன் அடிகளாரும் கலந்து கொணடிருந்தார். (க-64)

# பளுதூக்கல் போட்டி வெள்ளி வென்ற யாதவி

வடமாகாண பாடசாலைகளுக்கிடையேயான பளுதூக்கல் போட்டியில் தென்மராட்சி மீசாலை விக்னேஸ்வரா மகாவித்தியாலய மாணவி செல்வி ஜெயந்திரன் யாதவி 17 வயதுப் பிரிவில்45 கிலோ எடைப் போட்டியில் இரண்டாமிடத்தைப் பெற்று வெள்ளிப்பதக்கத்தை தனதாக்கிக் கொண்டார். (க-29)




விஜயரட்ணம் வெற்றிக் கிண்ணத்திற்கான புற்தரையில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இருபது-20 தொடரின் தகுதி காண் போட்டிகள் முடிவுற்ற நிலையில் சென்றலைட்ஸ், கே.சி.சி.சி, கிறாஸ்கொப்பர்ஸ், பற்றீசியன்ஸ் ஆகிய நான்கு அணிகளும் பிளே ஓவ் (Play off) சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளனர்.

நாளை நடை பெற இருக்கும் பிளே ஓவ் சுற்றில் காலை 8.30 மணிக்கு சென்றலைட்ஸ் அணியை எதிர்த்து கே.சி.சி.சி. அணி மோதவுள்ளது. பிற்பகல் 1.30 மணிக்கும் கிறாஸ் கொப்பர்ஸ் அணியை எதிர்த்து பற்றீசி யன்ஸ் அணி மோதவுள்ளது. (கு)

# வீட்டுக்கு அத்திபாரம் போட்ட 7 பேர் கைது

## வவுனியா பகுதியில் சம்பவம்

(வவுனியா)

வவுனியா வடக்கு, கரப்புக்குத்தி பகுதியில் உள்ள வன இலாகாவின் எல்லையிடப்பட்ட பகுதியில் வீட்டு நிர்மாண பணிகளை மேற்கொண்ட 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று வன இலாகாவினரும், விசேட அதிரடிப்படையினரும் இணைந்து குறித்த 7 பேரையும் கைது செய்தனர்.

வவுனியா வடக்கு, சின்னடம்பன் கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட கரப்புக்குத்தி பகுதியில் வவுனியா வடக்கு பிரதேச செயலகம் மற்றும் தேசிய வீடமைப்பு அதிகாரசபை என்பன இணைந்து மக்களுக்கு காணிகளை வழங்கி வீட்டு திட்ட நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.

இதன்போது வன இலாகவின் எல்லையிடப்பட்ட பகுதியில் மூன்று வீடுகளை அமைப்பதற்கு காணிகள் வழங்கப்பட்டுள்ளது. குறித்த பகுதியில் வீட்டுத்திட்ட பயனாளிகள் அத்திபாரம் போட்டுக் கொண்டிருந்த நிலையில் அங்கு சென்ற வன இலாகாவினரும், விசேட அதிரடிப் படையினரும் 7 பேரை கைது செய்தனர். அவர்களிடம் இருந்து அத்தி பாரம் போடுவதற்கு கொண்டு சென்ற மண்வெட்டி உள்ளிட்ட உபகரணங் களையும் அவர்கள் கைப்பற்றி யுள்ளனர்.

குறித்த 7 பேரையும் வவுனியா நீதிவான் நீதிமன்றில் முற்படுத்திய நிலையில் குறித்த நபர்களை தலா 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியான சரீர பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதித்துள்ளதுடன், வழக்கு விசாரணை எதிர்வரும் 9 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இதேவேளை, குறித்த காணி தொடர்பில் வன இலாகாவினர் கடந்த மாதமும் இருவரை கைது செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-250)

## ரயில்வே ஊழியர்கள் பணிப் புற...

புறப்படும் இரவு நேர தபால் தொடருந்து சேவை நேற்றிரவு இடைநிறுத்தப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் ரயில் நிலையத் தகவல்கள் தெரிவித்தன. எனினும் தொழிற்சங்கத்தின் முடிவில் மாற்றம் ஏற்பட்டால் சேவை இடம்பெறும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

ரயில்வே ஊழியர்களின் சம்பள முரண்பாடு உள்ளிட்ட சில கோரிக்கைகளை முன்வைத்து நேற்று முன்தினம் நள்ளிரவிலிருந்து ஆரம்பிக்கவிருந்த பணிப் புறக்கணிப்பு ஒத்திவைக்கப்பட்டது.

எவ்வாறாயினும் நேற்று பிற்பகல் நிதியமைச்சருடன் இடம்பெற்ற பேச்சுக்கள் தோல்வியடைந்ததையடுத்து அவர்கள் மீண்டும் பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தில் நேற்று நள்ளிரவு முதல் 48 மணிநேரம் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

அதன்படி ரயில் இயந்திர இயக்குனர்கள், கட்டுப்பாட்டாளர்கள் உள்ளிட்ட தொழிற்சங்கங்கள் சில நேற்று நள்ளிரவு முதல் இரண்டு நாட்கள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட தீர்மானித்துள்ளன. (ம-3)

## திருக்கேதீஸ்வரத்...

பட்டிருந்த நிலையில், திருக்கேதீஸ்வர ஆலயத்திற்கென தோரணை நுழைவாயில் அமைப்பதற்கான அனுமதியை மன்னார் பிரதேச சபை தவிசாளர் எஸ்.எச்.எம். முஜாஹிர் வழங்கியுள்ளார்.

இவ்வாறு மன்னார் பிரதேச சபை அனுமதி வழங்கியதன் மூலம் சமய நல்லிணக்கம் மீண்டும் தளைக்கும் என்றும் மேற்படி அனுமதி வழங்குவதில் கத்தோலிக்க மதகுருமார் சாதகமாக செயற்பட்டமை வரவேற்கத்தக்கது என்றும் சர்வமதப் பிரதிநிதிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். (ம)

## விசாரணையை...

படுத்தி பயங்கரவாத செயற்பாடுகளுடன் தொடர்பற்ற அனைவரையும் விரைவில் விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்குமாறு பாதுகாப்பு துறையினருக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

தேசிய பாதுகாப்பு சபை நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் கூடியபோதே ஜனாதிபதி இந்த பணிப்புரையை விடுத்துள்ளார்.

நாட்டின் பாதுகாப்பு நடவடிக்கைகளின் தற்போதைய நிலைமை குறித்து இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டதுடன், தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளும் இதன்போது மீளாய்வு செய்யப்பட்டன.

சமய நிகழ்வுகள் மற்றும் பொதுமக்கள் சந்திப்புகள் நடைபெறும் இடங்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை தொடர்ச்சியாக முன்னெடுக்க வேண்டியதன் முக்கியத்துவத்தையும் ஜனாதிபதி இதன்போது தெளிவுபடுத்தினார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சபாநாயகர் கரு ஜயசூரிய உள்ளிட்ட ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி ஆகியவற்றின் சிரேஷ்ட மக்கள் பிரதிநிதிகளும் பாதுகாப்பு செயலாளர், பாதுகாப்பு பதவிநிலைப் பிரதானி, முப்படை தளபதிகள், புலனாய்வுத் துறை பிரதானிகள் மற்றும் பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட பாதுகாப்பு துறையின் சிரேஷ்ட அதிகாரிகளும் இந்த சந்திப்பில் கலந்துகொண்டனர். (ம-3)

## கல்வி அமைச்...

வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளராக இருக்கும் எஸ்.சத்தியசீலன் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

எதிர்வரும் யூலை மாதம் முதலாம் திகதி நடைமுறைக்கு வரும் வகையில் இவர்களுக்கான நியமனக் கடிதங்களை நேற்றைய தினம் ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் வழங்கி வைத்தார். (ம-10)

## நாட்டின் காணிகளை சதிகாரர்கள்...

பொதுமக்களுக்கானது என்றும், காணி கொள்கையொன்றை விரைவில் தயாரிக்கப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

நேற்று முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற காணி சட்ட சீர்திருத்தம் தொடர்பான கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

காணி தொடர்பான சட்டதிட்டங்களை தயாரிக்கின்றபோது ஒருபோதும் செல்வந்த வர்க்கத்தினர் அல்லது சட்டவிரோத வியாபாரிகளை பலப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படகூடாது என்றும், நாட்டின் அப்பாவி விவசாய சமூகத்திற்கு காணி உரிமைகளை பெற்றுக் கொடுக்க வேண்டியது பொறுப்பு வாய்ந்த ஒரு அரசாங்கத்தின் முதன்மையான நோக்கமாக இருக்கவேண்டுமென்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

மேலும் நாட்டின் காணி பயன்பாடு தொடர்பிலான சட்டங்களும் வகுக்கப்பட வேண்டுமென்றும் புதிய திருத்தத்தின் கீழ் அதற்கான நிபந்தனைகள் ஒருபோதும் நீக்கப்படக் கூடாதென்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார். காணி அதிகாரங்கள் பிரதேச சபை களுக்கு வழங்கப்பட்டதன் காரணமாக இடம்பெற்றுள்ள துஷ்பிரயோகங்கள் தொடர்பாக விளக்கிய ஜனாதிபதி அது தொடர்பில் குறித்த தரப்பினர் உடனடியாக கவனம் செலுத்த வேண்டுமென்றும் தெரி வித்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, விஜேதாச ராஜபக்ஷ, ராஜித சேனாரத்ன, பி.ஹெரிசன், கயந்த கருணாதிலக்க, தயா கமகே உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினர்களும் குறித்த அமைச்சுக்களின் செயலாளர்கள் உள்ளிட்ட அரசாங்க அதிகாரிகளும் இந்த கலந்துரையாடலில் பங்குபற்றினர். (ம-3)

## ஏனைய தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள்...

பினர்களும் பதவி துறக்க தயாரா என அங்கஜன் இராமநாதன் பகிரங்க சவால் விடுத்துள்ளார்.

நீண்ட காலமாக போராடி வரும் கல்முனை வாழ் தமிழ் மக்களுடன் கைகோர்த்து அவர்களுக்காக தமது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை தூக்கியெறியத் தயார் என யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீலங்கா சுதந்திர தமிழர் ஒன்றியத்தின் தலைவருமான அங்கஜன் ராமநாதன் தெரிவித்துள்ளார்.

பதவிகளை மக்கள் வழங்குவது அவர்களது பிரச்சினைகளை தீர்க்கவேயன்றி பிரச்சினை வரும்போது வீர வசனம் பேசி விட்டு அதன் சொகுசுகளை அனுபவிக்கவல்ல எனவும் அங்கஜன் இராமநான் குறிப்பிட்டுள்ளார்.

கல்முனை வாழ் தமிழ் மக்களுக்காக தனக்கு வழங்கப்பட்ட தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இப்போதே தூக்கியெறிந்து செல்லத் தயார் என்ற போதிலும் தனியொருவருடைய இராஜினமா எந்தவொரு பாரிய தாக்கத்தையும் ஏற்படுத்த போவதில்லை என்ற வரலாற்று பூர்வ யதார்த்தத்தை தாம் அறிந்துள்ளதாகவும் அவர் கூறினார்,

எனவேதான் வடக்கு கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒட்டுமொத்த தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் தமது பதவிகளை இராஜினாமா செய்வதன் ஊடாக கல்முனை மக்களின் நீண்ட நாள் கனவான, தரமுயர்ந்த கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தினை நனவாக்க முடியுமென அங்கஜன் ராமநாதன் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வரலாற்று திருப்புமுனையை யதார்த்தமாக்க வடக்கு கிழக்கின் பாராளுமன்ற உறுப்பினர்கள் தயார் என்றால் அவர்களுடன் இணைந்து தமது இராஜினாமா கடிதத்தினையும் தேர்தல்கள் செயலகத்தில் கையளிக்க தாம் முன்நிற்பதாக அங்கஜன் ராமநாதன் உறுதியளித்துள்ளார்

எனவே தமிழர்களின் ஒருமித்த பலத்தினை முழுதேசத்திற்கும் எடுத்துக் காட்டி வடக்கு கிழக்கில் தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கான ஜனநாயகப்போரின் முதல் அத்தியாயத்தை எழுதுவதற்கு அனைத்து தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் கைகோர்க்க வேண்டும் என அவர் பகிரங்க அழைப்பு விடுத்துள்ளார்.

அத்துடன், தமிழ் மக்களின் இறைமைகளை தொடர்ந்தும் அடகு வைக்காமல் மக்களின் போராட்டங்களோடு ஒன்றிணைந்து வெற்றிபெற செய்ய தமிழர் பிரதிநிதிகள் இராஜினாமா கடிதத்தை வழங்க முன்வரவேண்டும் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் சுட்டிக்காட்டினார்.

தமிழ் அரசியல் தலைமைகளின் பிரிவினால் கடந்த காலங்களில் பல மக்கள் போராட்டங்களை வெற்றி பெறச்செய்ய முடியாமல் போன யதார்த்தத்தை உணர்ந்து இதனை சிறந்த தருணமாக எண்ணி மக்களின் சாத்வீக போராட்டத்திற்கு பலம் சேர்க்க அனைத்து தமிழ் அரசியல் தலைமைளும் தம்முடைய இந்த தீர்மானத்திற்கு ஆதரவளிக்க வேண்டும் என ஸ்ரீலங்கா சுதந்திர தமிழர் ஒன்றியத்தின் தலைவருமான அங்கஜன் ராமநாதன் கோரிக்கை விடுத்துள்ளார். (ம-114)

## அதிகாரமுள்ள பிரதேச செயலகமாக...

இந்த சந்திப்பில் உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் வஜிர அபேவர்தனவும் உடன் இருந்தார்.

அடுத்த இரண்டு மாதத்திற்குள் அனைத்து நிர்வாக, சட்டரீதியான பணிகளையும் முடித்து, கல்முனை வடக்கு பிரதேசசெயலகம் இயங்க ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என முடிவு காணப்பட்டது.

இதன்போது, கல்முனை வடக்கு பிரதேசசெயலகத்தை தரமுயர்த்த கூட்டமைப்பு வலியுறுத்தியது. பிரதமர் அதை ஏற்றுக்கொண்டார்.

முஸ்லிம் காங்கிரசுடனும் பேசி ஒரு முடிவை உடனே எடுக்கலாமென கூறி, அடுத்த சந்திப்பு இடம்பெற்றது.

பிரதமர், உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்த்தன, எம்.ஏ.சுமந்திரன், ரவூப் ஹக்கீம் ஆகியோர் மூடிய அறைக்குள் நடத்திய மந்திராலோசனையின் பின் கல்முனையை தரமுயர்த்துவதென உடன் முடிவாகியது.

இதற்கான முதற்கட்ட அறிவிப்பை நேற்று உள்நாட்டலுவல்கள் அமைச்சு வெளியிட வாய்ப்புள்ளதாக கூறப்பட்டது.

நேற்றைய சந்திப்பில் இரா.சம்பந்தன், மாவை சேனாதிராசா, எம்.ஏ.சுமந்திரன், சிறிநேசன், செல்வம் அடைக்கலநாதன், சி.சிறீதரன், சாள்ஸ் நிர்மலநாதன், சீ.யோகேஸ்வரன், சாந்தி சிறிஸ்கந்தராசா, கோடீஸ்வரன் உள்ளிட்ட எம்.பிக்கள் கலந்து கொண்டனர்.

அடுத்த இரண்டு மாதங்களிற்குள் கல்முனை முழுமையான தனியான பிரதேசசெயலகமாக இயங்க ஆரம்பிக்கும் என கூறப்பட்டது. (ம-3)

## கல்முனையில்...

இதனால் கிழக்கு மாகாண தமிழ் பகுதிகளில், இயல்பு நிலை முடங்கியது.

இந்த ஹர்த்தாலுக்கு ஆதரவு வழங்கும் முகமாக கிழக்கு மாகாணம் முழுவதும் அனைத்து வர்த்தக நிலையங்கள், அரச மற்றும் அரச சார்பற்ற காரியாலயங்கள் மூடப்பட்டிருந்தன. அரச மற்றும் தனியார் போக்குவரத்து சேவைகள் அனைத்தும் முடங்கின. மாணவர் வரவு இன்மையால் பாடசாலைகள் வெறிச்சோடியிருந்தன. (ம-3)













வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603 021 567 1532

FLC FRENCH LANGUAGE CENTRE
பிரெஞ்ச்
Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட DELF A1,A2,B1,B2.
V. ஜெகன் (Trained in France- 2007)
40, பலாலி வீதி, ஆரியகுளம். 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் : 22.06.2019 சனி காலை 10 மணி
181, பிரதான வீதி, நெல்லியடி. 0779 789 456 / 0762 669 614 ஆரம்பம் : 24.06.19 3.30 pm
திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1
IELTS,SPOKEN ENGLISH & இத்தாலி மொழி வகுப்புக்கள்.
(C-6659)

CERTIFICATE IN HOTEL AND RESORT MANAGEMENT
July 2019 க்கான புதிய பிரிவு ஆரம்பம்
G.C.E O/L
TUITION FEE 30,000/-
CANADIAN TOURISM & HOSPITALITY INSTITUTE
1544, KKS ROAD, KONDAVIL, JAFFNA
0771041923 | 0213146171
(C-6727)

சாவகச்சேரியில்...
வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை.
UK - 525.00, Germany - 675.00, France - 830.00
நிபந்தனைகள் எதுவும் இல்லை
அருள்
இல.1, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.
076 443 1576
(C-6615)

வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை
இப்பொழுது!!!
● குறித்த முகவரியில் ஒப்படைக்கப்படும்.
● மேலதிக கட்டணம் எதுவும் இல்லை.
UK - 350/=
France, Germany, Italy, Denmark 500/=
திருமுருகன் கொம்நெற்
திருநெல்வேலி, நெல்லியடி. 321, K.K.S.Road, Jaffna. 0777 554 528

கண்ணீர் அஞ்சலி
திருமதி
கலாவதி கோணலிங்கம்
கொக்குவில் மத்திய சனசமூகநிலைய உறுப்பினர் திரு. Dr.R.விமலன் அவர்களின் அன்புச் சகோதரி
திருமதி
கலாவதி கோணலிங்கம்
அவர்கள் 18.06.2019 இறைபதம் அடைந்துவிட்டார்.
அவர்களை இழந்து தவிக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
கொக்குவில் மத்திய சனசமூக நிலையமும் விளையாட்டுக்கழகமும்
K.C.C.C. & K.C.C.C.S.C
(3927)



விசேட கருத்தரங்கு
SLAS, SLEAS, LLB, LAW, Teaching, வட மாகாண முகாமைத்துவ உதவியாளர் (திறந்தது/ மட்டுப்படுத்தப்பட்டது), புள்ளிவிபரவியல் அலுவலர் போட்டிப் பரீட்சைக்கானது.
22.06.2019 சனி
9 AM - 3 PM
By P.கமல்தாசன் SLPS, JP
விடயஆய்வு
க.தெய்வேந்திரம்-SLAS
முகாமைத்துவம்
K.சத்தியமூர்த்தி-AO
நுண்ணறிவு
K.குமணன்-SLPS
கட்டுரை சுருக்கம்
AK.கீர்த்தி-MA
நாவலர் கல்வி நிறுவனம்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 0771116739, 0761661986

காண்டம் பார்த்தல்
உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் மிக வும் துல்லியமாக கணித்துத் தருகின்றோம்.
தொடர்பு: 076 835 1932, 021 223 2222 (உரும்பிராய்)

பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு
விமானப் பயணச்சீட்டுக்கள் விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள் V2 TRAVELS
16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 0768226243 v2vacancies@gmail.com
(C-6728)

இந்திய கோடீஸ்வரர் அம்பானியின் றிலையன்ஸ் குழும தொழிற்சாலையில்
மலேசிய வேலைவாய்ப்பு
எலெக்ட்ரீஷியன் Industrial Electrician 100 பேர்
இயந்திர தொழில்நுட்பவியலாளர் Mechanical/Instrumental Technician 100 பேர்
1130 - 2200RM ரூ.47,460 முதல் ரூ.92,400 வரை
நேரடி ஆட்சேர்ப்பு ஜூலை 1ம் 2ம் திகதிகளில்
0777 324 004, 0770 038 215, 021 2219 221
எமரல்ட் ஐல் License No. 2268
221-1/1, மின்சார நிலைய வீதி (2ம் ஒழுங்கை), யாழ்ப்பாணம்
www.emeraldisle.lk email: jaffna@emeraldisle.lk

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK - 550 /-Kg
கனடா - 900 /-Kg
ஜேர்மனி - 700 /-Kg
நெதர்லாந்து - 700 /-Kg
DELIVERY IN 3-5 DAYS
0768226240
V2 TRAVELS
(C-6710)

## ஆளுநரைச் சந்தித்து...

ளது.

ஆவா குழுவைச் சந்தித்து பேச்சு நடத்தத் தயார் எனவும், அதற்காக தான் எந்தவிதமான பாதுகாப்பு ஏற்பாடுகளும் இன்றி அவர்கள் கூறும் இடத்திற்குச் சென்று பேச்சு நடத்தத் தயார் எனவும் வடமாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் கடந்த வாரம் அறிவித்திருந்தார்.

அத்துடன், வட மாகாணத்தில் பல்வேறு சர்ச்சைகளை ஏற்படுத்தியிருக்கும் குறித்த ஆவா குழுவினருக்கு ஏதும் பிரச்சினைகள் அல்லது தேவைகள் இருப்பின் அவற்றை தன்னிடம் முறையிட்டு தீர்வுகளை பெற்றுக் கொள்ளலாம் என அவர் அறிவித்திருந்தார்.

இந்நிலையில், ஆவா குழுவின் பெயரில், வடமாகாண ஆளுநருக்கு 17ஆம் திகதியிடப்பட்ட கடிதம் ஒன்று எழுதப்பட்டுள்ளது.

அதில் இன்றைய சூழ் நிலையில் எங்களை உங்கள் மத்தியில் அடையாளம் காட்டிக்கொள்ள முடியாமைக்கு வருந்துகிறோம் என குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-3)

## இலங்கை...

ரிக்குமாறு ஐ.நா. விடம் கோரிய ஒரு தீர்மானம் நிறைவேறியுள்ளது என தெரிவித்துள்ளார்.

அத்தோடு குறித்த தீர்மானத்தை முன்வைத்த புதிய ஜனநாயகக் கட்சி உறுப்பினர் செரில் ஹார்ட் கேஸிலுக்கும் ஆதரவு வழங்கிய அனைத்து கட்சிகளுக்கும் தனது நன்றியை தெரிவித்துக் கொள்வதாக அவர் கூறினார். (ம-3)

YAMAHA
வழங்கும் சிறப்பு சலுகை



முற்கொடுப்பனவாக வெறும் 39,500.00 மாத்திரமே செலுத்தி யமஹா ஸ்கூட்டர் ஒன்றினை இன்றே கொண்டு செல்லுங்கள்
(இச்சலுகை குறித்த கையிருப்புகளுக்கு மட்டுமே)
உங்கள் பழைய மோட்டார் சைக்கிளை கொடுத்து புதிய மோட்டார் சைக்கிள்களை பெற்றுக்கொள்ளலாம்
இன்றே நாடுங்கள் :-
நல்லூர் றியோ ஐஸ்கிறீம் முன்பாக
21.06.2019 - 22.06.2019 வரை
எமது காட்சியறை :- Digital Electornics
62/16, Stanley Road, Jaffna.
0776623824 / 0212224040

கனடா மோகனின் இடியப்ப, முறுக்கு மெசின் இலங்கையிலும் பெற்றுக் கொள்ளலாம்
வீட்டு கையியக்க மெசின் | வர்த்தக கையியக்க மெசின் | வர்த்தக மின் (Automatic) இடியப்ப மெசின்
தொடர்புகளுக்கு : 076 796 6000, 077 968 1118 (இலங்கை)
www.StringhopperMachine.com
Email : mo@college.ca
கனடா 4164336006 இலக்கத்துக்கு Missed Call செய்யவும். (ரொறன்ரோ, கனடா)
(8716)

உடன் விற்பனைக்கு
யாழ் மருத்துவ பீடத்துக்கு அண்மையாக வீடு கட்ட கூடிய அமைதியான சூழலில், நல்ல அயலவர்களை கொண்ட 11/2 பரப்புக் காணியும் 2 3/4 பரப்புக்காணியும் உடன் விற்பனைக்கு உண்டு.
● நல்ல குடிநீர், சுத்தமான உறுதி
தொடர்புகளுக்கு :
076 376 9739, 077 344 6026
(தரகர்கள் தேவையில்லை)
(9319)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.06.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# தரம்- 5 புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்

## வினாத்தாள் பகுதி-I


## மேல்மாகாணம்

❖ கீழேயுள்ள பாடல்களில் நன்றாக விபரிக்கப்படும் பிராணியுடன் மிக நெருங்கிய தொடர்புள்ள உருவை தெரிந்து அதன் கீழ்க்கோடிடுக.

1.பாய்ந்து செல்லுமாம்
மெய்மையான உடலாம்
சிறிய ஒலியையும் கேட்குமாம்


1 2 3

2. வீடுவாசல் காத்திடும்
வேட்டையாடி திரிந்திடும்
உண்டசோற்றை எண்ணியே
உயிரைவிட துணிந்திடும்.


1 2 3

❖ ஒன்றுக்கொன்று தொடர்புள்ள உருச்சோடியை தெரிவு செய்க.


1 2 3

❖ பொருத்தமற்ற சொற்கூட்டத்தை தெரிவு செய்க.

5.

| | | |
|---|---|---|
| கருமை | காய் | வருமானம் |
| அருமை | பாய் | பெறுமானம் |
| பெருமை | வாய் | அவதானம் |

6.

| | | |
|---|---|---|
| இரக்கம் | அச்சம் | முயற்சி |
| பாசம் | மகிழ்ச்சி | ஊக்கம் |
| அன்பு | உணர்ச்சி | வெற்றி |

❖ பின்வரும் பாடலை படித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

ஏடு தூக்கும் சிறுவரே
நாடு காக்க எழுவீரே
பாடுபட்டு உழைத்திடில்
பலன் பெறுவோம் உறுதியே
தோல்வி அடைய நேரிடில்
துவண்டு போகலாகுமோ?
தோல்வி தானே வெற்றியின்
தொடக்கப் படிகள் ஆகுமே

7.பாடுபட்டு உழைப்பதால் யாது கிடைக்கும் என்று பாடலில் கூறப்படுகின்றது?
1)உறுதி கிடைக்கும்
2)பலன் கிடைக்கும்
3)வெற்றி கிடைக்கும்


8.வெற்றியின் தொடக்கப்படிகள் யாது என்று கூறப்படுகின்றது?
1)பாடு பட்டு உழைத்தல்
2)தோல்வி அடைதல்
3)நாடு காக்க எழுதல்

❖ பின்வரும் சந்தர்ப்பங்கள் ஒவ்வொன்றிற்கும் பொருத்தமான கருத்தை தெரிவு செய்க.

9.இரவு விழுந்த குழியில் பகலில் விழுந்தாற்போல
1.குழியில் விழுந்து விளையாடுதல்
2.தெரியாமல் செய்த தவறை தெரிந்தும் செய்தல்
3.மற்றவர்களுக்குத் தீங்கு செய்ய நினைத்தல்

10.புத்தகம் பார்த்து கணினி திருத்தும் குமார் உரிய வேளைக்குத் திருத்தி கொடுக்க முடியாதுள்ளது.
1)அடாது செய்தவர் படாது படுவார்
2)முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்
3)ஏட்டுச்சுரக்காய் கறிக்குதவாது


11.அருகிலுள்ள கயிற்றுத்துண்டு புள்ளிக்கோடு A வழியாக வெட்டப்பட்டது. எனின் கிடைக்கப் பெறும் துண்டுகள் முறையே




1 2 3

❖ 12ஆம் 13ஆம் வினாக்களுக்கு அட்டைத்துண்டுகள் இரண்டையும் ஒன்று சேர்ப்பதன் மூலம் உருவாகும் உருவத்தை தெரிவு செய்க.

12.



1 2 3.

13.


1. 2. 3.


❖ 14 ஆம் 15ஆம் வினாக்களுக்கு வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

14.



1. 31  2. 22  3. 30


15.



1. 5  2. 4  3. 6


❖ சரியான விடையைத் தெரிவு செய்க.

16.அருகிலுள்ள உருவில் முழு உருவத்தினதும் பரப்பளவு அதில் நிழற்றப்பட்டுள்ள பகுதியின் பரப்பளவின் எத்தகை மடங்காகும்?
1)8
2)7
3)6




17.மேலுள்ள முழு உருவத்தினதும் சுற்றளவு அதில் நிழற்றப்பட்டுள்ள பகுதியின் சுற்றளவின் எத்தனை மடங்காகும்.
1)3  2)4  3)2

18.அடுத்து வரவேண்டிய உருவைத் தெரிவு செய்க.



1 2 3

19.வெற்றிடத்திற்குப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.


(1) (2) (3)


❖ பின்வரும் பந்தியை வாசித்து 20ஆம் 21ஆம் வினாக்களுக்கு விடை தருக.

ஒரு பையினுள் சிவப்பு, மஞ்சள் ஆகிய நிறங்களில் பந்துகள் உள்ளன. நீல நிறப் பந்துகளின் எண்ணிக்கையின் இரு மடங்கு சிவப்பு நிறப் பந்துகள் உள்ளன. சிவப்பு நிறப் பந்துகளில் அரைவாசி மஞ்சள் நிறப் பந்துகள் உள்ளன.

20.நீல நிறப்பந்துகளின் எண்ணிக்கை
1.மஞ்சள் நிறப்பந்துகளின் எண்ணிக்கைக்குச் சமன்
2.சிவப்பு நிறப் பந்துகளின் எண்ணிக்கைக்குச் சமன்
3)மஞ்சள், சிவப்பு நிறப்பந்துகளின் எண்ணிக்கைக்குச் சமன்


21.சிவப்பு நிறப்பந்துகளின்எண்ணிக்கைக்குச் சமனற்றது.
1.மஞ்சள் நிறப்பந்துகளின் எண்ணிக்கை
2.மஞ்சள் நிறப்பந்துகளின் எண்ணிக்கையின் 2 மடங்கிற்கு
3.நீலநிறப்பந்துகளின் எண்ணிக்கையின் 2 மடங்கிற்கு

22.




இக்கனவுருவிலிருந்து ஒரு பக்க நீளம் 4cm கொண்ட எத்தனை சதுர முகிகள் வெட்டியெடுக்க முடியும்.
1)4
2)3
3)6

23.விபுலன் காலையில் தனது காரியாலயத்திற்கு சென்றடைந்த நேரத்தை கடிகாரம் A காட்டுகிறது. காரியாலயத்தை விட்டு மாலையில் வீடு திரும்பிய நேரத்தை கடிகாரம் B காட்டுகிறது.எனின் விபுலன் காரியாலயத்தில் செலவிட்ட மொத்த நேரம் யாது?





1) 9 மணி 35 நிமிடம்
2) 9 மணி 25 நிமிடம்
3) 10 மணி 25 நிமிடம்

# தரம்- 5 புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்

## வினாத்தாள் பகுதி-I


## மேல்மாகாணம்

24. 

அருகில் உள்ள உருவில் காணப்படும் முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?

1. 9
2. 7
3. 6

25.சிறிய சதுர முகிகள் சில ஒன்றின் மேல் ஒன்று அடுக்கப்பட்டுள்ள முறையை இவ்வுரு காட்டுகிறது.அதன்படி இங்குள்ள சிறிய சதுரமுகிகளின் எண்ணிக்கை யாது?



1.27
2.22
3.24

26.4 மீற்றர் நீளமும் 3 மீற்றர் அகலமும் கொண்ட ஒரு சுவருக்கு வெள்ளை பூச ரூபாய் 100.00 செலவாகும். 12 மீற்றர் நீளமும் 3 மீற்றர் அகலமும் கொண்ட ஒரு சுவருக்கு எவ்வளவு செலவு எடுக்கும்.

1.ரூபா 300.00  2.ரூபா400.00  3.ரூபா 600.00

27.கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்களின் படி A,B,C இடங்களுக்குப் பொருத்தமான மூன்று இடங்களையும் அதன் எண்ணைத் தரப்பட்டுள்ள விடைகளில் இருந்து தெரிவு செய்க.

இலக்கம் A,4328 இல் உண்டு,2841இல் இல்லை.
இலக்கம்B, 9651 இல் உண்டு, 5639 இல் இல்லை.
இலக்கம் C, 7285 இல் உண்டு, 8724 இல் இல்லை.

1.315  2.251  3.624

28.காலையில் நதீகா பாடசாலைக்குச் செல்லும்போது அவளது இடது கைப்பக்கமாக அவள் நிழல் தென்பட்டது எனின் அவள் சென்ற திசை யாது?

1.கிழக்கு  2.வடக்கு  3.தெற்கு


29. மதில் ஒன்றை 4 மனிதர்கள் சேர்ந்து 5 நாட்களில் கட்டி முடிப்பர். அவ் வேலையை 10 மனிதர்கள் எத்தனை நாட்களில் கட்டி முடிப்பர்.

1.10நாட்களில்  2. நாட்களில்  3.4நாட்களில்


30.ஒரே வரிசையில் கவிதாவுக்கு முன்னால் 6 பேரும் கலாவிற்குப்பின்னால் 8 பேரும் நின்றனர். அவ்வரிசையில் மொத்தமாக 24 பேர் நின்றனர் எனின் கவிதாவுக்கும் கலாவிற்கும் இடையில் எத்தனை பேர் நின்றனர்.

1.7பேர்  2.14பேர்  3.8பேர்

31.



மேலே உள்ள கடதாசிக் கீற்றை புள்ளிக்கோட்டின் வழியே மடித்துப் பெறக்கூடிய உரு யாது?



(1) (2) (3)

❖ஒரு பாடசாலையில் தரம் 5 இல் உள்ள A,B,C,D,Eஆகிய வகுப்பறைகளில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை பின்வருமாறு

- வகுப்பு Aயை விட வகுப்பு B யில் 6 மாணவர்கள் அதிகமாகும்.
- வகுப்பு C,Dஆகியவற்றிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கை சமனாகும்.
- வகுப்பு Eஇல் Bயை விட 3 மாணவர்கள் குறைவாகும்.
- வகுப்பு Cஇல் வகுப்பு Eயை விட 5 மாணவர்கள் கூடுதலாகும்.
- வகுப்பும் D இல் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை 32 ஆகும்.

32.வகுப்பு Aஇல் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை யாது?

1.30  2.32  3.24

33.ஐந்து வகுப்புக்களிலும் உள்ள மொத்த மாணவர்களின் எண்ணிக்கை யாது?

1.150  2.145  3.155

34.உருவில் காணப்படுகின்ற செயற்பாடுகள் நடைபெறும் ஒழுங்கிற்கேற்ப உருக்கள் ஒழுங்குபடுத்தப்பட வேண்டிய விதத்தைக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.



A B C D

1.ABCD  2.CDBA  3.BADC

35. பின்வரும் கவிதையின் ஒழுங்கு மாறிக் கிடக்கின்றது. அதன் ஒழுங்கைச் சரியாகக் காட்டினால் அமைவது.

A-எண்ணம் போல் விளையாடி
B-சின்னஞ்சிறிய பிள்ளைகளே
C-உழைக்க வேண்டும் சுறுசுறுப்பாய்
D-சிறப்பாய் உடலில் நலம் பெறவே

1.BACD  2.BCDA  3.BDAC

❖ சதுர வடிவ காணி ஒன்றைச் சுற்றி சம இடைவெளிகளில் சில துண்டுகள் நடப்பட்டுள்ளன.அவற்றின் ஒரு பக்கத்தில் நான்கு தூண்கள் காணப்பட்டன. இதற்கேற்ப 36 ஆம், 37 ஆம் வினாக்களுக்கு விடை தருக?

36.காணியைச் சுற்றியுள்ள தூண்களின் எண்ணிக்கை யாது?

1)12  2)16  3)20

37.அத்துடன் இரு தூண்களுக்கிடையில் 4 பூஞ்செடிகள் வீதம் நடத் தீர்மானிக்கப்பட்டால் காணியைச் சுற்றி நடுவதற்குத் தேவையான பூஞ்செடிகளின் எண்ணிக்கை யாது?

1)26  2)48  3)36

38.சீத்தா மாலாவின் மகள் ஆவாள் .சித்திராவின் தாய் சீத்தா ஆவாள்.இவர்களில் பாட்டியாகவும் தாயாகவும் உள்ளவர் யார்?

1)மாலா  2)சீத்தா  3)சித்திரா

❖ கீழே காட்டப்படுவது ஐந்து பிள்ளைகளினதும் உயரங்களும் நிறைகளுமாகும்.

| பெயர் | உயரம் | நிறை |
|---|---|---|
| கலாவதி | 1m 60cm | 19Kg |
| பார்வதி | 1m 85cm | 20Kg |
| சரஸ்வதி | 190 cm | 21Kg 500g |
| மோகன் | 1m 50cm | 18Kg 500g |
| மாலா | 135 cm | 20Kg |

39.உயரத்தில் நிறையிலும் கூடிய பிள்ளை யார்?

1)பார்வதி  2)மாலா  3)சரஸ்வதி

40.உயரத்திலும் நிறையிலும் சமனான இரு பிள்ளைகளும் முறையே

1)பார்வதி, மாலா  2)கலாவதி ,சரஸ்வதி  3)பார்வதி, கலாவதி

### 19.06.2019 அன்று வெளியான தரம்-5 புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாளுக்கான விடைகள்

பகுதி-I விடைகள்

| | |
|---|---|
| 1.2 | 21.2 |
| 2.3 | 22.1 |
| 3.2 | 23.3 |
| 4.1 | 24.1 |
| 5.3 | 25.3 |
| 6.2 | 26.2 |
| 7.3 | 27.2 |
| 8.2 | 28.1 |
| 9.1 | 29.1 |
| 10.உலோகம் | 30.2 |
| 11.பட்சி | 31.3 |
| 12.1 | 32.3 |
| 13.2 | 33.2 |
| 14.2 | 34.1 |
| 15.வுதனம் | 35.2 |
| 16.பட்டம் | 36.3 |
| 17.கபடம் | 37.1 |
| 18.2 | 38.1 |
| 19.1 | 39.3 |
| 20.2 | 40.2 |

பகுதி-II விடைகள்

| | |
|---|---|
| 1.சுத்தம் | 35. 3 |
| 2.அழகிய உடல் | 36. 2 |
| 3.சுறுசுறுப்பு | 37. 1 |
| 4.கந்தையானாலும் கசக்கிக் கட்டு | 38. 2 |
| 5. i. கந்தை+ஆனாலும் | 39. 1 |
| ii.மேனி +உண்டாகும் | 40. 2 |
| 6.சுந்தர | 41. 1 |
| 7.ஆச்சிரமம் | 42. 2 |
| 8.வாதி | 43. 1 |
| 9.சென்றன | 44. 4 |
| 10.சென்றேன் | 45. 3 |
| 11.ஆபத்தில் கைவிடல் | 46. 3 |
| 12.உதவி செய்தல் | 47. 4 |
| 13மேற்கோட்குறி ,முற்றுப்புள்ளி | 48. 2 |
| 14.வினாக்குறி | 49. 1 |
| 15.ஏத்திப் புகழ வேண்டும் | 50. 2 |
| 16. Flower | 51. 50,205 |
| 17.Post Office | 52. அறுபதாயிரத்து நூற்று முப்பது |
| 18. I am Drinking Water. | 53. 9465 |
| 19. அப்பா வந்தாரா? | 54. 6499 |
| 20. ஆசிரியர் வருவாரா? | 55. 6 |
| 21. அன்ன குருதுமா எனவா. | 56.1 0/20 |
| 22. 2 | 57. 0.4 |
| 23. 3 | 3 கழித்து முப்பது நிமிடங்கள் |
| 24. 1 | 59. 11.45 |
| 25. 4 | 60. i. கனவுரு |
| 26. 4 | ii. 6 |
| 27. 3 | 61. கிணறு |
| 28. 1 | 62. பிள்ளை |
| 29. 4 | 63.நிருதி(தென்மேற்கு) |
| 30. 2 | 64.புபோல் |
| 31. 2 | 65.ரூ.450.00 |
| 32. 2 | 66.வரையில் நிழற்றல் |
| 33. 2 | 67-69 பொருத்தமான வாக்கிய அமைப் |
| 34. 3 | புக்கு புள்ளிகள் வழங்க வேண்டும். |